21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666


RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 21 | பாலம் 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2011

# ஒன்ராறியோ தேர்தல் சூடுபிடிக்கின்றது

கனேடிய மத்திய அரசின் தேர்தல் முடிந்து 41 ஆவது நாடாளுமன்றம் ஜூன் 02, 2011 இல் ஆரம்பமாகின்றது. அன்று பெரும்பான்மைப்பலம் பெற்ற பழமைவாத கட்சியும் அதன் தலைவர் ஸ்ரீபன் காப்பரும் அவரது அமைச்சரவையும் நாடாளு மன்றத்தில் முதல் தடவையாக இத்தொடரில் கூடுகிறார்கள்.

இத்தேர்தல் சூடு தணிய முன்னர் ஒன்ராறியோ மாகாணத்தேர்தல் சூடி பிடிக்கத் தொடங்குகின்றது. ஒன்ராறியோ மாகாணத்தின் 40 ஆவது தேர்தல் வருகின்ற ஒக்ரோபர் 06, 2011 இல் நடை-பெறவுள்ளது. 2004 இல் ஒன்ராறியோ நாடாளுமன்றத்தில் அமலாக்கப்பட்ட சட்டப்படி மாகாணப் பொதுத்தேர்தல் நான்கு வருடத்திற்கு ஒரு முறை ஒக்ரோபர் மாதத்தில் வரும் முதலாவது வியாழக் கிழமையில் நடைபெறும். 107 அங்கத்தவர்களைக் கொண்ட ஒன்ராறியோ நாடாளுமன்றத்தின் தற்போதைய அவை யில் 72 லிபரல் கட்சி உறுப்பினர்களும், 25 பழமைவாதக் கட்சி உறுப்பினர்களும் 10 புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்கள்.



ஒன்ராறியோ மாகாண பழமைவாதக் கட்சியின் தலைவராக நொவம்பர் 01, 1967 இல் பிறந்த ரிமோதி ஹூடக் (Timothy Hudak) இருக்கிறார். இவர் Western Ontario பல்கலைக்கழகத்தின் பொருளாதார பட்டதாரியும் அமெரிக்காவின் Washington பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமானி பட்டம் பெற்றவருமாவார். இவர் ஜூன் 28, 2009 இல் பழமைவாதக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் வெற்றி பெற்று ஒன்ராறியோ மாகாணத்தின் பழமைவாதக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இவர் மைக் ஹரிஸின் மந்திரி சபையில் அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்ராறியோ மாகாணப் பழமைவாத கட்சியின் தலைவர் ரிம் ஹுடக் தனது கட்சியின் கொள்கை விளக்கத்தை "மாற்றும் புத்தகம்" (change book) என்ற பெயரில் கடந்த மே 28, 29, 2011 திகதிகளில் வெளியிட்டுள்ளார். அதில் பழமைவாதக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் விளக்கமாக அடங்கியுள்ளது. அதிலிருந்த சிலவற்றைப் பார்ப்போம்.

(1) ஒன்ராறியோ மாகாணத்தின் வரவு செலவுத்திட்டத்தின் துண்டு விழும் தொகையை (Deficit) 2018 ஆம் நிதியாண்டில் இல்லாமல் செய்தல்.

(2) ஒன்ராறியோ மாகாணத்தில் ஒருவர் சமூகநல உதவிப்பணம் பெறுவதற்கு அவர் ஒன்ராறியோ மாகாணத்தில் குறைந்தது ஒரு வருடமாவது வாழ்ந்திருக்க வேண்டும்.

(3) சில அரச சேவைகளை செய்வதற்கு ஒன்ராறியோ மாகாண அரச பணியாளர்கள் தனியார் நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டும். அதாவது அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களில் உணவுச் சாலை வைத்திருத்தல், உணவு தயாரித்தல், துணி துவைத்தல் போன்ற சேவைகளிற்கு அரச பணியாளர்களை கொண்ட யூனியனும் தனியார் நிறுவனங்களும் போட்டியிட்டு அதில் வெற்றி பெற்றவர்களுக்கே அச்சேவைகளை செய்யும் ஒப்பந்தம் வழங்கப்படும்.

(4) லிபரல் கட்சி அரசால் அமலாக்கப்பட்ட முழுநாள் மழலை வகுப்புக்கள் தொடரப்படும்.

(5) ஒன்ராறியோ மாகாண வருமானவரி குறைப்பு செய்தல். இதன்மூலம் $70 ஆயிரம் வரிகட்ட வேண்டிய வருமானம் உடையவர்கள் $258 டொலரை ஒரு வருடத்தில் மீதப்படுத்துவர். இதன் மூலம் $70 ஆயிரம் குடும்ப வருமானம் உள்ள குடும்பம் $400 டொலரை ஒரு வருடத்தில் மீதப்படுத்தும்.

(6) குடும்பத்தவர் ஒருவருடைய அல்லது உறவினர் ஒருவருடைய ஒன்ராறியோ மாகாண சுகாதார அட்டையை பாவிப்பவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்படும். பழைய ஒன்ராறியோ மாகாண சுகாதார அட்டையை (சிவப்பு, வெள்ளை நிற அட்டை) பாவிப்பவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுவர்.

(7) தற்போது ஒன்ராறியோ மாகாண மின்சார கட்டணத்தில் மேலதிகமாக "கடனை குறைப்பதற்கு" என்று அறவிடப்படும் பணத்தை இரத்து செய்தல். இதன் மூலம் ஒரு சராசரி குடும்பம் மாதம் ஒன்றுக்கு $7 டொலரை தங்களது மின்சாரக்கட்டணத்தில் சேமிப்பார்கள்.

(8) வியாபாரிகளுக்கான வரியை 10 வீதத்தால் குறைத்தல்.

(9) சிறைச்சாலையில் உள்ளவர்களை கொண்டு அரசாங்க வேலைகளை செய்வித்தல். இதன்மூலம் சிறைக் கைதிகளை கொண்டு வீதி துப்பரவாக்குதல் மற்றும் சுத்திகரிப்பு வேலைகள் செய்விக்கப்படும்.

(10) மேலதிகமாக $8 மில்லியன் டொலர் சுகாதார வசதிகளுக்கும் கல்வி வசதிகளுக்கும் செலவிடப்படும்.

ஒன்ராறியோ பசுமைக்கட்சியின் தலைவராக நொவம்பர் 2009 இல் இருந்து மைக்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
RBC Royal Bank®
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# கிடைப்பதை சுருட்டிக் கொண்டு செல்

கடந்த வாரம் அமெரிக்க அதிபர் ஒபாமா இஸ்ரேல் - பாலஸ்தீனிய பிரச்சினை குறித்து கருத்து தெரிவித்திருந்தார். முக்கியமாக இஸ்ரேல்-பாலஸ்தீனிய எல்லைகள் 1967 எல்லையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படும் எனக் குறிப்பிட்டிருந்தார். இதனை இஸ்ரேலிய பிரதமர் Benjamin Netanyahu உடனடியாக மறுத்திருந்தார். ("The borders of Israel and Palestine should be based on those of 1967இ with mutual and agreed exchanges, so that secure and recognized boundaries are established between two states," Obama). இதன் பின்னர் இஸ்ரேல் பிரதமர் Benjamin Netanyahu கொங்கிரசில் உரையாற்றினார். பல அமெரிக்க அரசியல் ஆய்வாளர்கள் உட்பட்ட பலரையும் இது வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இஸ்ரேலிய பிரதமர் அமெரிக்க கொங்கிரசில் இப்பொழுது உரையாற்ற வேண்டிய அவசியம் என்ன? தொடர்ச்சியாக மத்திய கிழக்கில் ஏற்படும் மாற்றங்கள் இஸ்ரேல் என்ற நாட்டின் இருப்பை அழித்துவிடுமா? என்ற பயமும் ஒரு காரணமாக இருக்கலாம். அமெரிக்க அதிபரும் இஸ்ரேலிய பிரதமரும் 1967 எல்லை பற்றிய கருத்துக்களை தெரிவித்தனர்.

1967ல் நடைபெற்ற ஆறு நாள் போரில் இஸ்ரேல் எகிப்தின் சினாய் பகுதியையும், ஜெருசலேத்தையும், சிரியாவிடமிருந்து Golan Heights, the Gaza Strip, and Judea and Samaria (the West Bank) பகுதிகளை கைப்பற்றினர். அமெரிக்க அதிபர் 1967க்கு முற்பட்ட எல்லையை மையமாக வைத்தே பேச்சுவார்த்தைகள் என்கின்றார். அப்படியாயின் இஸ்ரேல் தான் கைப்பற்றிய பகுதிகளை இழக்க வேண்டிவரும். இஸ்ரேலிய பிரதமர் கொங்கிரசில் பேசிய பொழுது 5 காரணிகளை முக்கியமாக முன்வைத்தார்.

- இஸ்ரேல் தொடர்ச்சியாக தான் கைப்பற்றிய பிரதேசங்களை வைத்திருக்கும். ஜோர்டான் நதிப்பகுதி முக்கியமானவை. எனவே இப்பிரதேசங்கள் எமக்கானவை. இப்பிரதேசங்களில் யூதர்கள் தொடர்ச்சியாக குடியேற்றப்படுவார்கள்.

- பாலஸ்தீனிய அகதிகள் மீண்டும் குடியேற அனுமதிக்கப்படமாட்டார்கள். 1948 போரின் பின்னர் ஏழு லட்சம் அகதிகள் வெளியேற்றப்பட்டார்கள். அதன் பின்னர் ஆறு மில்லியன் பாலஸ்தீனிய அகதிகள் அண்டை நாடுகளிலும் வேறு நாடுகளிலும் வாழ்கின்றனர். இவர்களது நிரந்தர குடியுரிமையை இஸ்ரேல்-பாலஸ்தீனியத்துக்கு வெளியிலேயே தீர்க்கப்பட வேண்டும்.

- ஜெருசலேம் இஸ்ரேலின் தலை நகரமாக தொடர்ந்து இருக்கும். இது ஒரு போதும் பிரிக்கப்படாது. 1967 போரின் போது இஸ்ரேல் இதன் கிழக்குப் பகுதியை கைப்பற்ற முழுமையாக ஜெருசலேத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்திருந்தது. பாலஸ்தீனியர்கள் ஜெருசலேம் தங்களுக்குரியது. தங்களது தலைநகரம் அது தான் என கூறிவருகின்றார்கள்.

- பாலஸ்தீனியம் தனிநாடாக அங்கீகரிக்கப் படாது.

- ஹமாசுக்கும் பற்றாவுக்குமிடையிலான Palestinian National Reconciliation Agreement கிளித்தெறியப்படவேண்டும். அவ்வாறு நிகழாவிடின் பாலஸ்தீனிய அரசுடன் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தப்படமாட்டாது.

இவர் பேசி முடிந்த பொழுது அனைவரும் எழுந்து நின்று கைதட்டினர். இது அமெரிக்கா இவரது பேச்சை அங்கீகரித்தது போல இருந்தது. ஒபாமாவின் 67 எல்லைக்கு எதிராக அமைந்திருந்த இவரது பேச்சுக்கு அமெரிக்க தரப்பில் எந்த எதிர்ப்பும் எழுப்பாமை ஆச்சரியத்தை அளிக்கின்றது.

இவர் பேசுவதற்கு ஒரு சில நாட்கள் முன்பாக எகிப்திய வெளியுறவு அமைச்சர் எகிப்திய – காசா எல்லையை திறந்து விடுவதாக அறிவித்திருந்தார். இதனால் பெருமளவு பாலஸ்தீனியர் காசாவிற்குள் வந்து போக வசதியாக இருக்கும். அத்துடன் எகிப்தின் ஆக்கிரமிப்புக்கும் ஏதுவாகும். ஏகிப்தில் மக்கள் கிளர்ச்சியின் போது இக் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இஸ்ரேல் தனித்த இஸ்ரேல் அரசு என்ற கோஷத்துடன் உக்கிரமாக உள்ளமைக்கு தேய்ந்து கொண்டு போகும் இஸ்ரேலிய சனத்தொகையும் ஒரு காரணம். மேற்கூறிய அட்டவணை தெளிவாக காட்டுகின்றது. இன்னமும் சில காலங்களில் பாலஸ்தீனியரின் சனத்தொகை இப்பிரதேசத்தில் அதிகரத்து விடும். அதுவும் பாலஸ்தீனிய அகதிகள் உள்வரும் பட்சத்தில் உடனடியாக இத் தொகை அதிகரித்துவிடும். பாலஸ்தீனியர் சனத்தொகை அதிகரிப்பு 4 வீதம். இஸ்ரேலின் 2.6 வீதம். இன்னமும் ஒன்பது ஆண்டுகளில் பாலஸ்தீனியரின் சனத்தொகை இஸ்ரேலியரை விட 2.5 மில்லியனால் அதிகமாக இருக்கும். இஸ்ரேலின் பிரதேசங்களில் உள்ள பாலஸ்தீனியரின் எண்ணிக்கையும் இஸ்ரேலியரைவிட அதிகரிக்கும் அபாயம் உண்டு.

**Table: Population of Palestine-Israel at the End of 2007**

| | Israeli Jews | Palestinians | Others | Totals |
|---|---|---|---|---|
| Israel without Jerusalem | 4,424,9001 | 1,241,8002 | 639,8003 | 6,306,500 |
| Jerusalem including settlements | 469,4004 | 208,0005 | 17,300 | 694,700 |
| West Bank without Jerusalem | 260,0006 | 2,137,1077 | | 2,397,107 |
| Gaza Strip | 0 | 1,416,5398 | | 1,416,539 |
| Totals | 5,154,300 | 5,003,446 | 657,100 | 10,814,846 |
| Percentage of total | 47.66% | 46.26% | 6.08% | 100% |

**Sources: Israel Central Bureau of Statistics, Palestinian Central Bureau of Statistics, Peace Now (Israel)**

பாலஸ்தீனிய அமைப்புக்களுக்கிடையில் பல பகைகள் சண்டைகள் இருந்து வந்தன. இதனை அரபு அரசுகளின் கூட்டமைப்பு கயவயா ஹமாஸ் ஆகிய இரு பெரும் அமைப்புக்களை சந்திக்க வைத்து தீர்த்து வைத்திருந்தது. இது இஸ்ரேலுக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தலாக இருக்கும். ஹமாசுக்கும் முஸ்லீம் சகோதரத்துவத்துக்கு மிடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. எகிப்து உட்பட்ட பல நாடுகளின் புதிய அரசுகள் ஹமாசுடன் நெருங்கிய உறவுகளை வைத்துள்ளன. பாலஸ்தீனிய பற்றா அமைப்பு ஒரு மென் போக்கு கொண்டது என்ற விமர்சனம் உண்டு. பாலஸ்தீனிய அதிபர் Mahmoud Abbas 85 வீதமான பாலஸ்தீனியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. புதிய அதிபரை எதிர்பார்க்கின்றார்கள். அவ்வாறான பட்சத்தில் ஹமாசின் ஒருவர் இப்பதவிக்கு வரும் சந்தர்ப்பம் உண்டு. அத்துடன் ஹமாஸ் ஒரு தீவிர ஆயுதக் குழு. இந்த புதிய உறவு முஸ்லீம் சகோதரத்துடன் எகிப்து போன்ற நாடுகளின் பக்க பலத்துடன் வருவது இஸ்ரேலுக்கு ஒரு மிக்க அச்சுறுத்தல்.

ஒபமா 2008 தேர்தல் பிரச்சாரங்களின் போது "Nobody is suffering more than Palestinians" என்றார். பின்னர் இது பாலஸ்தீனியர் தங்களது தலைவர்களால் தான் துன்பப்படுகின்றார்கள் என விளக்கமளித்து தப்பி விட்டார். ஒபமாவிற்கு பாலஸ்தீனியம் மீது ஒரு மென்போக்கு உண்டு என்ற கருத்து உண்டு. ஒபாமாவிற்கும், அமெரிக்காவிற்கும் பாலஸ்தீனியத்தினதும், இஸ்ரேலினதும் இருப்பு அவசியம். மத்திய கிழக்கில் நடைபெறும் போர்களின் மூலமாக இஸ்ரேல் இருந்து வருகின்றது. அமெரிக்காவின் ஆயுத விற்பனையில் பெரும் பகுதி மத்திய கிழக்கிற்கே செல்கின்றது. 52.4 வீத ஆயுதங்களை அமெரிக்காவும் 15.4 வீதத்தை

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

# ஒன்ராரியோ தேர்தல்..

02ஆம் பக்கத்தொடர்ச்சி



செரீனர் (Mike Schreiner) இருக்கிறார். பசுமைக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை கடந்த வாரம் வெளியிட்டிருந்தது. அதில் பெற்றோலிற்கு காபன்வரி விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இவற்றை விட வருமானவரி குறைப்பு, அரச ஊழியரின் சம்பள உயர்வை நிறுத்தி வைத்தல் மற்றும் ஒன்ராறியோ மாகாணத்தின் துண்டு விழும் தொகையை 2015 ஆம் நிதி ஆண்டில் இல்லாமல் செய்தல் என்பவையும் இருந்தன.

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# பாதிக்கப்பட்ட மக்களை மையப்படுத்தாத மீள்குடியேற்ற உதவி நடவடிக்கைகள்! பட்டினி நிலையை நோக்கி நகரும் மக்களின் பரிதாப நிலைமை!

இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

இலங்கையில் யுத்த மோதல்கள் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. ஆயினும் யுத்தம் முடிவின் பின்னர் எதிர்பார்க்கப்பட்ட சமாதானத்தின் பலாபலன்கள் நாட்டில் மக்களுக்குக் கிட்ட வில்லை என்றே பல தரப்பினரும் சுட்டிக் காட்டுகின்றனர். சமாதானம் மட்டுமல்லாமல் மீள்குடியேற்ற நடவடிக்கைகளும் எதிர்பார்த்த அளவில் அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்றே பலரும் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

யுத்தம் நடைபெற்றபோது யுத்த பிரதேசத்தில் இருந்து 3 லட்சம் மக்களை விடுதலைப்புலி களின் பயங்கரவாதப் பிடியிலிருந்து மீட்டெடுத்ததாக இலங்கை அரசாங்கம் பெருமை பேசியது. இன்னும் பேசிக்கொண்டி ருக்கின்றது. அவ்வாறு மீட்டெடுக்கப்பட்ட பொதுமக்களுக்கு நல்ல முறையில் நல்வாழ்வு அளிக்கப்பட்டிருக்கின்றதா என்பது இன்னும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

மனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டி ருந்த 3 லட்சம் பேரையும் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்குத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். ஆயினும் இவர்களில் சுமார் 20 ஆயிரம்பேர் அடிப்படை வசதிகளும், வாழ்வாதாரத்திற் கான நிவாரண உதவிகளும் பற்றாக்குறை யான நிலையிலேயே இன்னும் அந்த முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான அடிப்படை வசதிகளைக் குறைத்துள்ள அதிகாரிகள் 20 லீற்றர் தண்ணீரையே நாளொன்றுக்கு இப்போது வழங்குவதாக முகாம்வாசிகள் கூறுகின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சொந்தமாகக் கொண்டவர்கள் மட்டுமே அங்கு இன்னும் எஞ்சியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த இந்த மக்களின் சொந்த கிராமங்களில் இன்னும் கண்ணிவெடிகள் அகற்றப்படாதிருப்பதே இவர்களின் மீள்குடியேற்றம் தாமதமடைந்தி ருப்பதற்கான காரணம் என அரசாங்கம் கூறுகின்றது.

மூன்று லட்சம் பேர் போரினால் இடம் பெயர்ந்தார்கள் என்றால், மனிக்பாம் முகாமில் எஞ்சியுள்ள 20 ஆயிரம் பேர் போக, 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் மனிக்பாம் முகாமில் 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் மட்டுமே தஞ்சமடைந்திருந் ததாக அரசாங்கம் வேறு ஒரு முரண்பாடான தகவலையும் வெளியிட்டுள்ளது. அவ்வாறா யின் இவர்களில் 2 லட்சத்து 60 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் என கணக்கிட வேண்டியிருக்கின்றது.

இந்த எண்ணிக்கை முரண்பாடு ஒரு புறமிருக்க, இடம்பெயர்ந்த மக்களில் இன்னும் 20 ஆயிரம் பேர் வரையில் மாத்திரமே சொந்த இடங்களில் மீள்குடி யேற்றம் செய்யப்படவுள்ளார்கள் என அரசாங்கம் கூறி வருகின்றது. ஆனால் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான விடயங்களையும், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு அத்துடன் மனிதாபிமானச் செயற்பாடுகள் என்பவற்றைத் தொடர்ச்சி யாகக் கண்காணித்து அவ்வப்போது அறிக்கைகள் வெளியிட்டு வருகின்ற ஐநாவின் மனிதாபிமான செயற்பாடுகளுக் கான நிறுவனத்தின் பிந்திய அறிக்கையின் படி, இடம்பெயர்ந்தவர்களில் இன்னும் ஒரு லட்சம் பேர் மீள்குடியமர்த்தப்படாதிருப்ப தாகத் தெரிவீக்கப்பட்டிருக்கின்றது.



இவர்கள் இடம்பெயர்ந்து தங்களது உறவினர் நண்பர்களது வீடுகளில் தஞ்சமடைக்கின்றார் கள் என்ற தகவலையும் அந்த நிறுவனம் தெரிவித்திருக்கின்றது. ஆயினும் இடம் பெயர்ந்த மக்களில் எத்தனை பேர் உறவினர் நண்பர்களது வீடுகளில் தங்கியுள்ளார் கள் என்ற புள்ளிவிபரத் தகவல் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஐநாவின் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள புள்ளிவிபரம் பிழையானது என சுட்டிக்காட்டியுள்ள அரசாங்கத்தின் மீள்குடியேற்ற அமைச்சு, இன்னும் 50 ஆயிரம் பேர் வரையில் மாத்திரமே மீள்குடியேற்றப்படவுள்ளார்கள் என தெரிவித்துள்ளது.

ஐநாவின் அறிக்கை ஒருபுறம், அரசாங்கத்தின் மறுப்புரை ஒருபுறம். ஆயினும் உண்மை நிலை என்ன என்பது களத்தில் உள்ள அரச அதிகாரிகளுக்கும் தெரியாமல் இருப்பதுதான் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

இந்த விவகாரம் ஒருபக்கம் இருக்க, மீள்குடியேற்றப்பட்டுள்ளவர்களும் யுத்தம் முடிவடைந்த இரண்டு வருடகாலத்தில் தங்களது வாழ்க்கையில் மாற்றங்கள் எதுவும் பெரிய அளவில் ஏற்படவில்லை என்றே கூறுகின்றார்கள்.

மனிக்பாம் முகாமில் இருந்து மீள்குடியேற்றத்திற்காக அவர்களது சொந்தக் கிராமங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் கள் உடனடியாகத் தங்குவதற்காக தரப்பாள் கூடாரங்கள் வழங்கப்பட்டன. அதற்கு அடுத்த கட்டமாக தற்காலிக வீடுகளுக்கான உதவிகளும், பின்னர் நிரந்தர வீடுகளுக்கான வேலைத் திட்டங்களும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகி ஒன்றரை வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், மீள்குடியேற்றப்பட்டவர்களில் பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் இன்னும் தரப்பாள் கொட்டில்களிலேயே வசித்து வருகின்றன என கிராமிய மட்டத்தில் பொதுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றார்கள்.

தற்காலிக வீடுகளை அமைப்பதற்கென அரசாங்கம் 12 தகரங்களையும் சில தடிகளையும் சீமெந்தையும் வழங்கி வருகின்றது. இந்த உதவிகள் கிடைக்காதவர்கள் இன்னும் பலர் இருக்கின்றார்கள் என்பதும் சில இடங்களில் மிள்குடியேறி ஆறுமாதம் அல்லது ஒரு வருடம் கழிந்த பின்பே தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் பொதுப்பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

நிரந்தர வீடுகளைப் பொறுத்தமட்டில் வசதிகள் மிகவும் குறைந்தவர்கள், உதவி யற்றவர்கள் என்ற தேவைகளின் அடிப்படையில் முன்னுரிமை முறையில் குடும்பங்கள் அதிகாரிகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மூன்றேகால் லட்சம் ரூபா செலவில் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற வீட்டுத்திட்டத்திற்கமைய வீடுகளை அமைக்க வேண்டும் என்ற கண்டிப்பான நிபந்தனை அமல் செய்யப்படுகின்றது.

புதிய நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அவசியமான மணல் அத்திவாரத்திற்குரிய கருங்கல் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு தடைகள் இருக்கின்றன. மணல் இலகுவாகக் கிடைப்பதென்பது அரிதாக இருக்கின்றது. குறிப்பிட்ட இடங்களில் மணல் அள்ளுவதற்கு அல்லது அரசாங்கத்திட மிருந்து முன் அனுமதி பெற வேண்டும். உதவி அரசாங்க அதிபர், அரசாங்க அதிபர் போன்ற சிவில் அதிகாரிகளின் ஊடாக அரசாங்கம் இதற்கான அனுமதியை கிராம மட்டத்தில் உள்ள பொது நிறுவனங்களுக்கும் தனியாருக்கும் வழங்கி வந்தது. இது பின்னர் அந்தந்த பிரதேசங்களில் உள்ள இராணுவ அதிகாரிகளின் கைகளுக்கு மாற்றப்பட்டதையடுத்து, வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த அனுமதி இப்போது வழங்கப்பட்டு வருவதாகவும் உள்ளூரில் உள்ளவர் களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் போதிய அளவில் அனுமதி வழங்கப்படுவ தில்லை என்றும் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மணல் அள்ளுவதற்கான அனுமதியைப் பெறுவதில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் காரணமாக வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் மணலின் விலையை அதிகரித்துள்ளார்கள். முன்னர் இலகுவாகவும் குறைந்த செலவிலும் மணலைப் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது இரு மடங்கு மும்மடங்கு அதிக

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# நமது கலாச்சாரத்தில், இறந்தவர் உடலை எரிக்க வேண்டும் என்ற பழக்கம் எப்படி வந்தது?


சத்குரு: நமது கலாச்சாரத்தில் இறந்தவர் உடலைப் பாதுகாக்கும் வழக்கம் இல்லை. இந்தத் தேசத்தின் கலாச்சாரம், வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சமும் மனிதனை மேல்நோக்கிக் கொண்டு செல்வதாக அமைய வேண்டும் என்றே நினைக்கிறது. உடலை எரிப்பது என்ற சடங்கும் அந்த நோக்கத்திலேயே அமைக்கப்பட்டது.

இறந்தவர் இந்த உடல்தான் தனது உயிர் என்று வாழ்ந்திருப்பார். அந்த உடலோடு மிகவும் ஆழமான தொடர்போடு வாழ்ந்திருப்பார். உங்களைப் பொறுத்த வரையில் அவர் இறந்து விட்டார். ஆனால் அந்த உயிரைப் பொறுத்தவரையில் உடலைவிட்டு நழுவிவிட்டதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கும். எனவே மீண்டும் அந்த உடலுக்குள் நுழைந்து விடலாம் என்றே அந்த உயிர் நினைத்துக் கொண்டிருக்கும். எனவே வாய்ப்பை எதிர்நோக்கி அந்த உடலைச் சுற்றியே உயிர் சுற்றிக் கொண்டிருக்கும். உடல் முழுமையாக இருக்கும்வரை அந்த உயிரால் அங்கிருந்து நகர முடியாது. அந்த மனிதர் ஞானம் அடைந்திருந்தால் அந்த உடலை விட்டு நீங்கிய கணத்திலேயே அந்த உயிர் மகிழ்ச்சியாக அங்கிருந்து வெளியேறியிருக்கும். ஆனால் சரியான புரிதல் இல்லாத உயிர் அந்த உடலையே சுற்றிக் கொண்டிருக்கும். இது அந்த உயிருக்கும் நல்லதல்ல. இறந்தவருடன் பழகியவர்க்கும் அந்த உடலைப் பார்த்துப்பார்த்து பல நினைவுகளால் வருத்தம் அதிகமாகியே போகும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

உயிரை விட்டவரும் சரி, உறவினர்களும் சரி, உடல் அங்கிருக்கும்வரை, வேதனையோடு இருப்பர். எனவே விடைபெற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை அந்த உயிர் உணர வேண்டும் என்பதால், அந்த உடலை முழுமையாகவும், விரைவாகவும் அழிக்க வேண்டும் என்னும் நடைமுறை உண்டாக்கப்பட்டது. எனவே தான் இறந்த ஒன்றரை மணி நேரத்திற்குள் உடலை எரிக்கவேண்டும் என்ற விதி ஏற்படுத்தப்பட்டது. அவசரத்திலும் பதற்றத்திலும் தவறான முடிவெடுத்து உயிருடன் இருக்கக்கூடியவரையும் தவறுதலாக எரிக்கப்பட்டு விடலாம் என்பதால், அதை நான்கு மணிநேரம் என பிற்பாடு மாற்றி அமைத்தார்கள்.

தாம் அறிந்த அந்த உடல் இனி இல்லை, அடையாளமற்று எரிந்து கையளவு சாம்பலாகிவிட்டது என்னும் உண்மையை அறியும்போது, இறந்த உயிரும் அந்த இடத்திலேயே பரிதவித்துக் கொண்டு இருக்காது. இங்கு உயிருடன் இருப்பவர்களும் மாண்டவன் இனி மீளப்போவதில்லை என்று ஒருவித அமைதி கொள்வார்கள். எனவேதான் ஒருவர் இறந்துவிட்டால் அவரை



சத்குரு வாசுதேவ்

உடனடியாக எரிப்பது நமது கலாச்சாரத்தில் இருந்து வருகிறது.

போதிய விறகு இல்லாத பாலைவனங்களிலும், நெருப்பு நின்று எரியாத குளிர்ப்பிரதேசங்களிலும் எரிப்பதை விட புதைப்பது சுலபமாக இருந்தது. எனவே அத்தகைய நாடுகளில் அதுவே அவர்களது நடைமுறையாக மாறிவிட்டது.

# சாதனை மேல் சாதனை போதுமையா ஹார்ப்பர்!

பதவி ஏற்ற ஒரு மாதத்திலேயே ஹார்ப்பர் முன்னைய பிரதமர்கள் நினைத்தும் பார்க்க முடியாத அளவினுக்குச் சாதனை மேல் சாதனை ஆற்றிக் கொண்டிருப்பதைக் காண, என்ன தவம் செய்தனை இந்தப் பெருமகனைப் பிரதமராகக் காண என வாய் விட்டு பாடவேண்டும் போலத் தோன்றுகிறது.

•பூரண பெரும்பான்மையுடன் அரசு அமைக்க இக்நாற்றிவ் உதவி செய்தாரோ இல்லையோ எப்படியோ ஹார்ப்பர் ஆட்சியைப் பூரண பெரும்பான்மையுடன் கைப்பற்றிவிட்டார். ஹார்ப்பரின் முன்னைய அரசுகள் போல் கவிழ்ந்து விடுமோ, கவிழ்ந்து விடுமோ என்று பயந்தபடி நாடாளுமன்றத்திற்கு காலடி எடுத்து வைக்க வேண்டிய கஷ்ட நிலை அடுத்து நான்கு வருடங்களுக்கு இல்லை என்பது உறுதி. ஆனால் மனுஷன் சொன்னதைச் செய்யார் செய்வதைச் சொல்லார் என்பதற்கு நடமாடும் உதாரணம்.

• கனடிய சரித்திரத்திலேயே ஹார்பருடைய அரசுதான் இத்தனை பெரிய வரவு செலவுப் பற்றாக்குறை காட்டியது என்பது நிதர்சனமான உண்மை. கொஞ்ச நஞ்சமல்ல $30 பில்லியன் பற்றாக்குறை இருந்தது. தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்தப் பற்றாக்குறையினை 2014லேயே அதாவது இன்னும் நான்கு வருடங்களிலேயே ஈடு செய்து விடுவேன் என ஹார்ப்பர் தேர்தல் சமயத்திலே மார் தட்டினார். ஆனால் இவ்வருடத்து நிதி அறிக்கை வருகிற மாதம் 6ந்தேதி வருகிறது. இது வரையில் 4 பில்லியன் டொலர்தான் செலவினங்களில் குறைக்க உள்ளார்கள் போலத் தெரிகிறது. இந்த அழகில் அடுத்த மூன்று வருடங்களில் பாக்கி 26 பில்லியனை வெட்ட என்ன செய்வார்? சொன்னதைச் செய்யார் என்பதை மீண்டும் நிலை நாட்டுவாரா? பற்றாக் குறையினை விரட்டுவது அடுத்த தவணையையும் சேர்த்தா அல்லது இந்த நான்கு வருடங்களா என்பது அந்த மகானுபாவருக்கே வெளிச்சம்.

• கனடிய சரித்திரத்திலே இத்தனை பெரிய மந்திரி சபையினை வேறு எந்த பிரதமரும் வைத்திருந்ததில்லை என்கிறார்கள். மொத்தமாக 39 மந்திரிகள் உள்ளனர். இவர்களில் 10 பேர் இராஜாங்க அமைச்சர்கள். நாடாளுமன்ற உதவியாளர் கள் என இன்னும் ஒரு பட்டியல் இரகசி யமாக வெளிவரும். இந்த அழகில் செலவி னத்தை எவ்விதமாகக் கட்டுப்படுத்திப் பற்றாக் குறையினை ஈடுசெய்யப் போகிறார். இத்தனை மந்திரிகள் தேவையா? இந்த 39 உறுப்பினரைக் கொண்ட மந்திரிசபை உறுப்பினர் ஒரு வருடத்திற்குப் பெறப்போகும் மொத்த ஊதியம் எவ்வளவு தெரியுமா? 9 மில்லியன் டொலர். இந்த அழகிலே செலவி னங்களை இவ்வருடம் 4 பில்லியனால் வெட்ட வேண்டும் எனவும் அதற்கான வழிமுறைகளை கண்டு பிடிக்குமாறும் நிதிச் சபைத் தலைவர் ரொனி கிளெமென்ரிடம் கூறப்பட்டுள்ளது. அவர் செய்வார். எமது வயிற்றில் தான் அடி.

• மூதவை உறுப்பினர்கள் யாபேரும் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என எதிர்க்கட்சியில் இருக்கும் வரை கூறி வந்தவர் ஹார்பர் தான். ஆட்சிப் பொறுப் பேற்றதும் அந்தக் கூற்றினைக் காற்றில் பறக்க விட்டு தனது ஆதரவாளர்களையும் எடுபிடிகளையும் மூதவை உறுப்பினராக்கினார். இப்போ இன்னும் ஒரு படிமேலே சென்று ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமாக மக்களால் நிராகரிக்கப் பட்டவர்கள் மூவரை, தேர்தலில் தோல்வியுற்றவர்களை கைவிரலில் போட்ட மை காய்வதற்கு முன்னரே மூதவை உறுப்பினர் ஆக்கியுள்ளார் என்றால் அவரது பெருந்தன்மையை எப்படிப் புகழ்வதாம். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே மூதவை உறுப்பினர்களாக வேண்டும் என்ற நிலைப்பாடு போய் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தான் மூதவை உறுப்பினராகும் தகுதி உடையவர் என ஹார்ப்பர் இனிமேல் கூறுவாரோ? ஜேஸ்சீ வேர்னர், லறி சிமித் ஆகிய இருவரும் ஏற்கெனவே மூதவை உறுப்பினராக இருந்தவர்கள். தேர்தலில் போட்டியிடுவதற்காக மூதவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்கள். ∴பேவியன் மானிங் ஹார்ப்பரின் முன்னைய மந்திரி சபையில் இருந்தவர் மக்களால் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டுள்ளார். மூவரும் ஒருவித பிரச்சினையும் இல்லாமல் 70 வயது வரை ஊதியம் பெற்றுக்கொண்டு ஹாயாக இருக்கலாம். கொடுத்து வைத்தவர்கள்!




• ஹார்ப்பரின் மந்திரிசபையினில், தனது காதலியின் வீட்டிலே முக்கியமான சில கோவைகளை கைதவறி விட்டு வீடு வந்தவர் என்று ஒரு பிரபலமான மந்திரி பற்றி எதிர்க் கட்சிகள் பிரச்சினையாக்க, பாவம் அவர் பதவி விட்டு விலகி மூன்று வருடங்கள் அஞ்ஞாதவாசம் செய்தது ஞாபகம் இருக்கலாம். அந்த நபர் பெயர் மக்சீம் பேர்ணியர் (Maxime Bernier). அனுதாபத்தின் காரணமாகவோ அல்லது குயூபெக் மாநிலம் போதிய உறுப்பினர் களைத் தந்து உதவாதகாரணத்தாலோ ஹார்ப்பர் பிழைத்துப் போ என மக்சீம் பேர்ணியருக்கு ஒரு இராஜாங்க அமைச்சர் பதவி கொடுத்துள்ளார். குயூபெக் மாநிலம் ஐந்து கொன்சர்வேற்றிவ் கட்சியினரைத்தான் நாடாளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளது. அவர்களில் நால்வர் மந்திரி சபையில் உள்ளனர். அதிருஷ்டசாலிகள்!



• ஹார்ப்பர் 10 பெண்களுக்கும் இரண்டு முதல் குடியினருக்கும் மந்திரிப்பதவி கொடுத்துள்ளார் என்பது ஒரு சரித்திர சாதனை என்பதை ஏற்க வேண்டும். ஆனாலும் சென்ற ஆண்டு பெவ் ஓடா (Bev Oda) என்ற ஒரு பெண்மந்திரி பெயர் ஊடகங்களில் அடிபட்டதே அவரையும் மந்திரியாக்கியுள்ளார். ஒரு சமயம் ஜெயலலிதா தனது கைஒப்பத்தைத் தான் போட்டது அல்ல என வாதிட்டார். அதே போன்றுதான் அவருக்கு நானென்ன குறைவா என்ற ஹோதாவில் இப்பெண்மணி தனது ஒப்பத்துக்கு முன் குறிப்புச் சேர்க்கப்பட்டதா அல்லது பின்னரா எனக் கூறமுடியாமல் திக்குமுக்காடினார். Kairos எனும் சமூக நலன் நிறுவனம் ஒன்றிற்கு நிதி உதவி பற்றிய குறிப்பில் இடைச்சொருகல் ஒன்று தான் போட்டதா அல்லது தனது ஒப்பந்தத்திற்குப் பின்னர் தனது ஊழியர் போட்டதா என குளறு படியில் இருந்தவரை எதிர்க் கட்சியினர் அவர் பொய் சொல்லியுள்ளார் எனவே பதவி விலக வேண்டும் என வற்புறுத்தினார்கள்.



• அடுத்ததாக நம் கவனத்தில் வருபவர் கிறிஸ்ரியன்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

# கனிமொழி கைது அடுத்து என்ன நடக்கும்?

கடந்த மூன்று மாதங்களில் இந்திய ஊடகங்களில் அதிகம் அலசப்பட்ட செய்தி இதுவாகத்தான் இருக்கும். கனிமொழி கைதாவாரா, மாட்டாரா? ஐந்து மாநில தேர்தல் பரபரப்புச் செய்திகள், தேர்தல் முடிவுகள், அன்னா ஹசாரே உண்ணாவிரதம், பின்லேடன் மரணம்... போன்ற சில முக்கிய செய்திகள் காரணமாக அவ்வப்போது அமுங்குவதும் பிறகு மீண்டும் மேலெழும்புவதுமாக இருந்த கனிமொழி கைது செய்தி, கடைசியாக மே 20ஆம் தேதி உச்சத்தைத் தொட்டது. விசாரணை தள்ளி வைப்பு, தீர்ப்பு ஒத்திவைப்பு என நீடித்துக் கொண்டிருந்த சஸ்பென்ஸ் அன்று உடைந்தது. கனிமொழியின் முன் ஜாமீனை தள்ளுபடி செய்ததுடன், உடனடியாக கனிமொழி மற்றும் கலைஞர் டிவி நிர்வாக இயக்குநர் சரத்குமாரை கைது செய்யுமாறு, டெல்லி சிபிஐ நீதிமன்ற நீதிபதி சைனி உத்தரவிட்டார்.

தமிழக முதலமைச்சரின் கடைக்குட்டி செல்லப்பிள்ளை மத்திய அரசில் தன் சொல்லுக்கு தலையாட்டும் கைப்பாவை ஒருவரை கேபினட் அமைச்சராகக் கொண்டிருந்தவர். நாடாளுமன்ற உறுப்பினர்... என வானளாவிய அதிகாரத்துடன் இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை வலம் வந்தவர் இப்பொழுது, திகார் சிறை எண் 6-இல் அடைக்கப்பட்டிருக்கிறார். அவரது பின்புலத்தைக் கருத்தில்கொண்டு மின்விசிறி, தொலைக்காட்சி, தினசரிகள், கட்டில் போன்ற வசதிகள் மட்டும் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு எளிமையான, பகட்டில்லாத, சிறந்த கவிஞராக தமிழ்நாட்டுக்குள் அறியப்பட்டவர் இன்று, இந்தியாவின் ஆகப்பெரும் ஊழல் என்பதாக அறியப்படும் 2ஜி ஊழலால் இந்தியாவில் மட்டுமல்ல உலகளவிலும் பிர-பலமாகி இருக்கிறார். உலகம் தழுவிய 'டாப்' ஊழல்வாதிகள் பட்டியலில் நிக்ஸனுக்கு அடுத்து இரண்டாவது இடத்தை ஆ. ராசாவுக்கு வழங்கியிருக்கிறது 'டைம்ஸ் பத்திரிகை' ஆ.ராசா என்பது கனிமொழிதான்.

எப்படி நேர்ந்தது இந்த நிலை?



கனிமொழிக்கு நெருக்கமான அனைவரும், கருணாநிதியின் துணைவியார் ராஜாத்தி அம்மாளைத்தான் கை காட்டுகிறார்கள். கருணாநிதிக்கு மூன்று குடும்பங்கள், எண்ணிறந்த வாரிசுகள். எல்லாருமே ஆட்சி அதிகாரத்தில் பங்குகொண்டதுடன், எக்கச்சக்கமாக சம்பாதிக்கவும் செய்துவிட்டார்கள். சட்டப்படி மனைவி என உரிமை கோர முடியாததால், ராஜாத்தி அம்மாள் குடும்பம் மட்டும், கடைசியாக கருணாநிதி முதல்வராக இருந்ததுக்கு முந்தின முறை வரை, பெரிய அளவில் சம்பாதிக்காமலே இருந்தது. கருணாநிதிக்கு வயதாகிக்கொண்டே வருவதால், இனி எவ்வளவு காலம் இருப்பார் எனச் சொல்ல முடியாத நிலை கருணாநிதிக்குப் பிறகு தி.மு.க.வைக் கைப்பற்ற வாய்ப்புள்ள ஸ்டாலினோ, அழகிரியோ, மாறன் சகோதரர்களோ கனிமொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பார்களா என்ற சந்தேகம்... எல்லாம் சேர்ந்து கூடிய விரைவ-ில் எவ்வளவு அதிகம் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு சம்பாதித்தாக வேண்டும் என்னும் பேராசைக்குள் ராஜாத்தி அம்மாளைத் தள்ளியது. ஆ.ராசா, பூங்கோதை... என கட்சிக்குள் தனக்கென்று ஒரு வட்டத்தை உருவாக்கிக்கொண்டார். அத்துடன் நிற்காமல், அரசியலில் நுழையமாட்டேன்' என சொல்லிக்கொண்டே இருந்த தன் மகள் கனிமொழியையும் கட்டாயப்படுத்தி அரசியலுக்குள் நகர்த்தினார். ராஜாத்தி அம்மாளின் "பணத்தாசை ஒன்றே கனிமொழியின் இன்றைய வீழ்ச்சிக்குக் காரணம். அழகிரியும் ஸ்டாலினும் 40 ஆண்டுகளில் சம்பாதிக்காததை கனிமொழி 4 ஆண்டுகளில் சம்பாதித்தார். அதன் பலனை அனுபவித்துத்தானே ஆக வேண்டும்?'' என்கிறார் கனிமொழியின் நண்பரும் தமிழ் எழுத்தாளருமான சாரு நிவேதிதா.

"என்னால்தானே உனக்கு இந்த நிலை'' என்று, ராஜாத்தி அம்மாள் மகளைச் சிறையில் பார்த்து கதறி அழுதாராம். கருணாநிதியும் அழுததாகச் செய்தி. கனிமொழியைத் தேற்ற வேண்டிய இவர்கள் கதறி அழ, கனிமொழி இவர்களுக்கு ஆறுதல் சொல்லி வழியனுப்பி வைத்திருக்கிறார். "சட்டப்படி நான் நிரபராதி என்று கோர்ட்டில் நிரூபிப்பேன். நீங்கள் கவலையில்லாமல் இருங்கள்'' என்று கருணாநிதியிடம் சொன்னாராம் கனிமொழி. கருணாநிதியும் என்னென்னவோ செய்து பார்த்தார். காவல்துறை அதிகாரி 'கீல் அக்தர் மூலமாக சிபிஐ வழக்கறிஞருக்கும், சிபிஐ அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுக்க முயற்சித்தார். முடியவில்லை. இறுதியாக, தி.மு.க. எம்.பி செல்வகணபதி மூலமாக, சிபிஐ நீதிபதி ஓ.பி.சைனிக்கு, 100 கோடி வரை கொடுக்கலாம் என முயற்சிக்கப்பட்டது. முடியவில்லை'' என்கிறது கருணாநிதி குடும்ப ஊழல்களை படிப்படியாக வெளியிட்டு வரும் 'சவுக்கு' இணையதளம். சரி, கனிமொழி சொல்வதுபோல் சட்டப்படியாவது நிரூபித்து வெளியே வரமுடியுமா? ஸ்பெக்ட்ரம் ஊழல் உச்சநீதிமன்ற ஆணைப்படி விசாரிக்கப்படுகிறது. நாடாளுமன்ற கூட்டு விசாரணைக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ராசா, அதிகாரிகள், கார்ப்பரேட் கம்பெனி உயரதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவையெல்லாம் மத்திய அரசின் திட்டப்படி நடந்தவையல்ல. சில தற்செயலான நிகழ்வுகள் சேர்ந்து இந்த ஊழல் விவகாரத்தை இப்போதுள்ளபடி நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

இந்த விவாகாரத்தை தோண்டத்தோண்ட அது ஊழலின் ஊற்று மூலமான முதலாளிகளை நோக்கி பாயும். அதனால் இந்த விவகாரத்தில் இத்தோடு விட்டுவிட்டு எப்படி கழண்டு கொள்ளலாம் என்பதே காங்கிரசின் கணக்காக இருக்க முடியும். இந்த ஸ்பெக்ட்ரம் ஊழல் இதற்குமேல் சூடு பிடிக்காமல் பார்த்துக் கொள்வது எப்படி என்பதே அவர்களது பிரச்சினை. அப்படித் தடுக்க முடியாவிட்டால் பல தலைகளோடு, பல அடிப்படை நிலைகளும் கேள்விக்குள்ளாக்கப்படும். ஆகவே, இந்த விளையாட்டை பாதுகாப்பாக எப்படி முடித்து வைப்பது என்பதே இப்பொழுது மத்திய அரசின் முன்னால் உள்ளச் சிக்கல். அதற்கு அவர்கள் கனிமொழி, ராசா அணியைப் பலி கொடுப்பார்களா அல்லது அவர்களையும் சேர்த்து காப்பாற்றுவார்களா என்பதே இப்பொழுது பல அரசியல் நோக்கர்களின் கேள்வி. ஆனால், யாராவது ஒருவரையாவது கை காட்டாமல் எப்படி இதை முடித்துவைக்க முடியும். "தா.கிருஷ்ணன் தன்னைத்தானே வெட்டிக்கொண்டு செத்தார்'' என்பதுபோல் இதனையும் மூடிமறைக்க முடியாது அந்தளவுக்கு விஷயம் பரவலாகிவிட்டது.

இது தி.மு.கவிற்கும் தெரியும். எனவேதான், மற்றவர்களெல்லாம் இதை வைத்து காங்கிரசு - தி.மு.க பிளவு என்று சித்தரிக்க முயல, தி.மு.கவோ என்ன நடந்தாலும் காங்கிரசை விட்டுப் போகமாட்டோம் என்று பெவிக்கால் போல ஒட்டிக்கொண்டிருக்கிறது. மன்மோகன் அரசாங்கத்தின் இரண்டாண்டு நிறைவு விருந்துக்குகூட டி.ஆர் பாலு மரியாதையுடன் அனுப்பிவைக்கப்பட்டார். விருந்து மேடையில் சோனியா, மன்மோகன் அருகில் டி.ஆர்.பாலு இருக்கும்போது, இன்னொரு பக்கம் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணிக்கு வேட்டு வைக்கும் முயற்சியாக, தற்போது இலங்கையின் கஸ்டடியில் இருக்கும் குமரன் பத்மநாபனை வைத்து தி.மு.வின் பிராமண எதிர்ப்பு கொள்கையே

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


TORONTO BUSINESS COLLEGE

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



DIPLOMA PROGRAMS

Computerized Accounting
26 weeks

Personal Support Worker
26 weeks

Medical Office Administrator
32 weeks

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses,
Day care & Transportation அனைத்தும் இலவசம்

Buy One Get One Free
Windows,Word,Excel,Power Point
Quick Books,Simply Accounting,Accpac
Week Ends

416-291-5155

4465 SHEPPARD AVE. EAST #208
(SHEPPARD & BRIMLEY) SCARBOROUGH
www.t-businesscollege.com t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# விளையாட்டுத் தகவல்கள் 307

## சாம்பியன் லீக் : பார்சிலோனா சாம்பியன்

பார்சிலோனா கால்பந்து அணி வெம்ப்ளியில் நடந்த சாம்பியன் லீக் இறுதிப்போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணியை வீழ்த்தி சாம்பியன் ஆனது. கடந்த 3 ஆண்டுகளில் 2வது முறை பார்சிலோனா அணி சாம்பியன் லீக் பரிசுக்கோப்பையை கைப்பற்றி உள்ளது. 2009 ம் ஆண்டு ரோம் நகரில் நடந்த இறுதிப்போட்டியில் ஆடியதை விட மான்செஸ்டர் யுனைடெட் அணி சிறப்பாக இந்த ஆட்டத்தில் ஆடியது. இருப்பினும் சிறந்த அணிக்கு வெற்றி கிடைத்துள்ளது என்ற ஆறுதலுடன் மான்செஸ்டர் யுனைடெட் அணி வெளியேறியது. ஆட்டத்தின் முதல் பாதியில் பெட்ரோ அடித்த கோலுக்கு ஈடு செய்யும் வகையில் ரூனி கோல் அடித்தார். இரண்டாவது பாதியில் பார்சிலோனாவின் முன்கள வீரரான லயோனல் மெஸ்சி அதிரடியாக ஆடினார். அவர் இங்கிலிஷ் மண்ணில் தனது முதல் கோலை அடித்து பார்சிலோனா அணிக்கு பரிசுக்கோப்பையை பெற்றுத் தந்தார். 2 வது பாதியின் 9 வது நிமிடத்தில் இந்த கோல் கிடைத்தது. ஆட்டம் முடிய 20 நிமிடம் இருந்த நிலையில் டேவிட் வில்லா பார்சிலோனா அணிக்கு 3 வது கோலை அடித்தார். ஐரோப்பிய சாம்பியன் லீக் போட்டியில் பார்சிலோனா அணி 4 வது முறை பரிசுக்கோப்பையை வென்றுள்ளது. நடப்பு லீக் இறுதிப்போட்டியில் பெட்ரோ, லயோனல் மெஸ்சி, டேவிட வில்லா கோல் அடித்தார்கள். தோல்வியை தழுவிய மான்செஸ்டர் யுனைடெட் அணி உரிய துவக்கத்தை தரவில்லை. ஐரோப்பிய சாம்பியன் லீக் போட்டியில் பார்சிலோனா அணி 1992, 2006, 2009, 2011 ம் ஆண்டுகளில் சாம்பியன் ஆகி உள்ளது. மான்செஸ்டர் யுனைடெட் அணி 1968, 1999, 2008 ம் ஆண்டுகளில் சாம்பியன் ஆன அணியாகும்.

## மன்செஸ்டர் யுனைடெட் கழகம் புதிய சாதனை

இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மன்செஸ்டர் யுனைடெட் கழகம் சம்பியனாகியுள்ளது. நடைபெற்ற பிளக்பர்ன் றோவர்ஸ் கழகத்துடனான போட்டியை மன்செஸ்டர் யுனைடெட் கழகம் 1-1 விகிதத்தில் சமநிலையில் முடித்துக்கொண்டது. இதன் மூலம் இவ்வருட பிரிமியர் லீக் சம்பியன் கிண்ணத்தை வெல்வதற்குத் தேவையான புள்ளிகளை மன்செஸ்டர் யுனைடெட் கழகம் பெற்றுக்கொண்டது. 19 ஆவது தடவையாக இக்கிண்ணத்தை வென்றதன் மூலம் இங்கிலாந்து பிரிமியர் லீக் வரலாற்றில் மன்செஸ்டர் யுனைடெட் கழகம் புதிய சாதனை படைத்துள்ளது. இதுவரை லிவர்பூல் கழகம் 18 தடவை வென்றமையே சாதனையாக இருந்தது. போட்டியின் 73 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைடெட் அணியின் நட்சத்திர வீரர் வெய்ன் ரூனி அடித்த கோல் மன்செஸ்டர் யுனைடெட் அணியை சாதனை படைக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது. மெஸ்சி இன்னும் சிறந்த நிலையை அடையவில்லை: பீலே



ஸ்பெயினின் பார்சிலோனா முன்கள வீரர் மெஸ்சி உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டு உள்ளார். அனைத்து காலகட்டத்திலும் சிறந்த வீரர் என்ற இலக்கையும் அவர் நெருங்கிக் கொண்டு இருக்கிறார். இருப்பினும் மெஸ்சி மிகச்சிறந்த நிலையை அடையவில்லை என பிரேசில் சாதனையா-ளர் பீலே கூறுகிறார். கால்பந்து விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறு காலகட்டங்களில் சாகசம் படைத்த வீரர்களுடன் ஒப்பிடுகையில் அர்ஜென்டினா வீரர் மெஸ்சி இன்னும் நிறைய சாதிக்க வேண்டி உள்ளது என பீலே கூறினார். உலகின் அனைத்து தருணத்திலும் அற்புதமான வீரர் என்ற பிரசாரம் மெஸ்சியை சூழ்ந்துள்ளது. இப்படி பிரசாரம் செய்யும் மற்றும் ஒப்பீடு செய்யும் நபர்கள் ஜோகன் கிரயப், மைக்கல் பிளாட்டினி, அல்பிரடோ டி ஸ்டெபனோ ஆகிய சரித்திர வீரர்களை மறந்துவிட்டார்கள். இந்த வீரர்கள் மெஸ்சியை விட மிகச்சிறந்த சாதனை நிகழ்த்தியவர்கள் என பீலே குறிப்பிட்டுள்ளார். அவரது கருத்தை லா டெர்செரா என்ற சிலி நாட்டு நாளிதழ் வெளியிட்டுள்ளது. பிரேசிலுடன் 3 முறை உலகக்கோப்பை சாம்பியன் வென்ற பீலே, சாம்பியன் லீக் இறுதிப்போட்டி குறித்தும் கூறினார். மே 28ம் திகதி பார்சிலோனா அணி மான்செஸ்டர் யுனைடெட் அணியை வெம்ளியில் ஏன் வீழ்த்தக் கூடாது என கூறியுள்ளார்.

மான்செஸ்டர் யுனைடெட் வலிமையான அணி இங்கிலிஷ் ஸ்டைல் கால்பந்துக்கு ஒன்றி உள்ள அணி. அதே நேரத்தில் பார்சிலோனா உலகின் தலைசிறந்த அணி என பீலே தெரிவித்தார். பீலேவின் கருத்தை பொய்யாக்கும் வகையில் ஐரோப்பா புகழின் உச்ச நிலைக்கு பார்சிலோனா அணியை மெஸ்சி கொண்டு செல்வாரா என்ற எதிர்பார்ப்பு உள்ளது. 2009ம் ஆண்டு சாம்பியன் லீக் கால்பந்து இறுதிப்போட்டியில் யுனைடெட் அணிக்கு எதிராக ஆடிய போது மெஸ்சி அடித்த கோலால் 2-0 வெற்றி கிடைத்தது.

கோல் அடிப்பதில் றொனால்டோ புதிய சாதனை ரியல் மாட்ரிட் அணியின் அதிரடி வீரர் றொனால்டோ லீக் கால்பந்து போட்டியில் கோல் அடிப்பதில் புதிய சாதனை படைத்துள்ளார். அவர் அல்மேரியா அணியுடன் மோதிய ஆட்டத்தில் தமது அணி 8-1 கோல் கணக்கில் வெற்றி பெற உதவினார். இந்த ஆட்டத்தில் 26 வயது றொனால்டோ 2 கோல்களை அடித்தார். இதன் மூலம் இந்த சீசனில் 40 லீக் கோல்களை அடித்த சாதனை வீரர் ஆனார். ஒரு சீசனில் அதிக கோல் அடித்த வீரர் லா லிகா சாதனையையும் முறியடித்தார். கடந்த 4 ஆட்டத்தில் றொனால்டோ 11 கோல் அடித்தார். பிரிமியர் லீக் உள்ள அனைத்து போட்டிகளும் இந்த சீசனில் றொனால்டோ 53 கோல் அடித்தார். தனது கோல் குவிப்பில் அவர் 7 ஹாட்ரிக் கோல் சாகனை படைத்துள்ளார். ஹாட்ரிக் என்பது ஒரு ஆட்டத்தில் தொடர்ந்து 3 கோல்களை போடும் அற்புத சாதனையாகும். தனது கோல் குவிப்பு சாதனை குறித்து றொனா-ல்டோ கூறுகையில், எனது மாட்ரிட் அணியினருக்கே கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்களது ஒத்துழைப்பால் தான் என்னால் இவ்வளவு கோல்களை குவிக்க முடிந்தது என தெரிவித்தார். அவர்கள் உதவி இல்லாமல் இந்த லீக் சீசனில் 40 கோல் அடித்திருக்க முடியாது என்றும் அவர் நெகிழ்வுடன் தெரிவித்தார். ஐ.பி.எல் கிரிக்கட்: சாம்பியன் பட்டத்தை வென்றது சென்னை அணி ஐ.பி.எல் சீசன் 4ல் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பெங்களூருவை 58 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது. ஐ.பி.எல் சீசன் 4ல் இறுதிப்போட்டி சென்னை யில் நடைபெறுகிறது. இந்த போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி டொஸ் வென்று துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. இதனையடுத்து துவக்க வீரர்களாக களமி-றங்கிய சென்னை அணி யின் ஹசியும், முரளி விஜய்யும் அபார துவக்கம் தந்தனர். முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 160 ரன்கள் குவித்தது. அபாரமாக விளையாடிய ஹசி 45 பந்துகளில் 63 ரன்கள் எடுத்து சைபத் முகமது பந்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் விஜய்யுடன் தோனி ஜோடி சேர்ந்தார். சிறிது நேரத்தில் 188 ரன்கள் எடுத்திருந்த நிலையில் முரளி விஜய் 52 பந்துகளில் 95 ரன்களுக்கு அவுட்டாகி சதத்தை நழுவ விட்டார். அடுத்த பந்திலேயே கப்டன் தோனி 22 ரன்களுக்கு ஸ்ரீநாத் அரவிந்த பந்தில் அவுட்டானார்.

கடைசி ஓவரில் மோர்கல் 2 ரன்களுக்கும், ரெய்னா 8 ரன்களுக்கும் அவுட்டானார். கடைசி பந்தில் பிராவோ சிக்சர் அடித்தார். இறுதியில் சென்னை அணி 5 விக்கெட் இழப்பிற்கு 205 ரன்கள் எடுத்தது. பெங்களூரு அணி சார்பில் கெயில் 2 விக்கெட்களும், ஸ்ரீநாத் அரவிந்த் 2 விக்கெட்களும் வீழ்த்தினர். இதன் பின்னர் 206 ரன்கள் என்ற கடின இலக்குடன் களமி-றங்கிய பெங்களூரு அணிக்கு துவக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. முதல் ஓவரின் 4வது பந்தில் அதிரடி பேட்ஸ்மேன் கிறிஸ் கெயில் ரன் எதுவும் எடுக்காமல் அவுட்டாகி அதிர்ச்சியளித்தார். இதன் பின்னர் அகர்லாவல 10 ரன்களுக்கு அவுட்டானார். ஒரு முனையில் விக்கெட்கள் வீழ்ந்தாலும் மறுமுனையில் விராத் கோலி ரன் குவிப்பில் ஈடுபட்டார். ஆனால் கோலி 36 ரன்களுக்கும், ஏபி டி வில்லியர்ஸ் 18 ரன்னுக்கும் அவுட்டானார். லூக் போமர்ஸ்பாச் 2 ரன்னுக்கும், கேப்டன் வெட்டோரி ரன் ஏதுவும் எடுக்காமலும், அபிமன்யு மிதுன் 11 ரன்னுக்கும் அவுட்டாயி-னர். கடைசி கட்டத்தில் திவாரியும் ஜாகிர் கானும் இணைந்து கவுரவமான ரன்கள் எடுக்க போராடினர். ஜாகிர்கான் 21 ரன்களுக்கு அவுட்டானார்.

சாம்பியன் பட்டம் வென்ற சென்னை அணிக்கு ரூ.10 கோடி பரிசு ஐ.பி.எல் கோப்பையை சென்னை சூப்பர் கிங்ஸ் தொடர்ந்து இரண்டாவது முறையாக கைப்பற்றியது. கடந்த ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தி கோப்பையை வென்றது. ஐ.பி.எல் கோப்பையை 2 முறை கைப்பற்றிய முதல் அணி சென்னை சூப்பர் கிங்ஸ் ஆகும். ராஜஸ்தான், டெக்கான் தலா ஒரு முறை வென்றுள்ளன. சாம்பியன் பட்டம் பெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு ரூ.10 கோடி பரிசாக வழங்கப்பட்டது. பெங்களூர் அணி 2வது முறையாக இறுதிப் போட்டியில் தோற்றது. 2009ம் ஆண்டு டெக்கானிடம் அந்த அணி தோற்றது. பெங்களூர் அணிக்கு ரூ.7 1/2 கோடி பரிசாக வழங்கப்பட்டது. 3வது இடத்தை பிடித்த மும்பை இந்தியன்ஸ் 4வது இடத்தை பிடித்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு தலா ரூ.3.75 கோடி கிடைத்தது.

இந்த ஐ.பி.எல் போட்டியில் சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய கிறிஸ் கெய்லுக்கு ரூ.20 லட்சம் பரிசு கிடைத்தது. அதிக ரன்களை எடுத்ததற்காக அவருக்கு ரூ.10 லட்சத்துடன் ஆரஞ்சு கலர் தொப்பி பரிசாக வழங்கப்பட்டது. சிறந்த பொழுதுபோக்கு வீரருக்கான கோல்டன் விருதும் அவருக்கு கிடைத்தது. இதற்காக அவருக்கு ரூ.10 லட்சம் பரிசு வழங்கப்பட்டது. அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய மலிங்காவுக்கு (மும்பை இந்தியன்ஸ்) பர்பிள் கலர் தொப்பியும்) ரூ.10 லட்சமும் வழங்கப்பட்டது. அவர் சர்பில் அந்த அணியை சேர்ந்த போலார்ட் பெற்றுக்கொண்டார். இந்தப்போட்டித் தொடரில் சிறந்த கேட்சுக்கான விருது போலார்ட்டுக்கு கிடைத்தது. ரூ.10 லட்சம் பரிசை அவர் தட்டி சென்றார். சிறந்த தனிநபர் ஆட்டத்துக்கான விருது பஞ்சாப் வீரர் வல்தாட்டிக்கும், வளர்ந்து வரும் இளம் வீரருக்கான விருது கொல்கத்தா இக்பால் அப்துல்லாவுக்கும் கிடைத்தது.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

YARL WINDOW BLINDS & DRAPERY
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
VENETIAN/VERTICAL/ROLLER
WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
CALL: N.SELVAM

# ரொறொன்ரோ ஆதன வியாபாரம்

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 342**

உலகின் பல நாடுகளுடன் ஒப்பிடும்போது கனடாவின் ஆதன வியாபாரம் மிகவும் உன்னதமான நிலையில் காணப்படுகின்றது. 2011ஆம் ஆண்டின் முதல் கால்பகுதியில் (ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச்), வெளிநாடுகளிலிருந்து பெரியதொகை பணம் கனடிய ஆதனத்தில் முதலிடப்பட்டதைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக சீனாவிலிருந்து என்பதை அனுபவத்தில் காணக்கூடியதாக உள்ளது. அண்மையில் ஆதன வியாபாரத்தில் ஏற்பட்ட வியாபாரங்களை உதாரணமாகக் கொள்ளமுடியும். இரண்டு கிழமைகளிற்கு முன்பாக Warden & Eglinton பகுதியில் Commercial Project சந்தைக்கு கொண்டு வரப்பட்டது. 68%வீதமான கட்டிடத் தொகுதி முதல் நாளே விற்கப்பட்டு முடிந்து விட்டது. இதில் அனேகமான வாங்குனர்கள், சீன நாட்டுமக்களே. மேலும், Warden & Finch பகுதியில் Briddlewood Mall இற்கு அண்மையில் புதிதாக ஒரு கட்டிடத்தொகுதி கொண்டுவரப்பட்டது. 200இற்கு குறைந்த கொண்டோ அலகுகளே சந்தைக்கு கொண்டு வரப்பட்டன. இந்த 200 கொண்டோ அப்பாட்மெண்ட் ஐ (Condo. Apartment Unit) வாங்குவதற்கு 500இற்கு மேற்பட்டவர்கள், தமது விருப்பத்தை தெரிவித்திருந்தார்கள். உடனேயே விற்று முடிந்து விட்டது. இவ்வாறான நிலைமை தொடர்கின்றது. அத்துடன், ரொறொன்ரோ பெரும்பாகத்தில் சில குறிப்பிட்ட பகுதியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பல கூறுவிலைகள் (Offers) இன்றும் வருகின்றன. கேட்கப்படும் விலையைத் தாண்டி ஆதனங்கள் விற்கப்படுகின்றது. ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் சராசரி விலை $460,000ஐ தாண்டிய நேரத்தில் வன்கூவரின் சராசரி விலை $620,000 ஐ



தாண்டியுள்ளது. கனடாவிலேயே வீட்டின் விலை வன்கூவரில் அதிகூடியதாகக் காணப்படுகின்றது.

வன்கூவரில் ஒரு குடும்பத்தின் 72% ஆன வருமானம் அடமானக்கடன் (Mortgage), ஆஸ்தி வரி (Property Tax) மற்றும் Utilities க்கு தேவைப்படுகின்றது. ஆனால் ரொறொன்ரோவில் 47.5% ஆன வருமானம் தேவைப்படுகின்றது. ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 5.5% மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். அத்துடன் உலகில் உயரமான Free standing கட்டிடம் (CN Tower), 7வது பெரிய Stock Exchange, உலக மக்களால் மதிக்கப்படுகின்ற பல்கலைக்கழகம், எயர்போட், உலகில் உள்ள பெரிய மிருகக்காட்சிச்சாலைகளில் ஒன்று (zoo), வடஅமெரிக்காவில் இரண்டாவது பெரிய Public transit system போன்றவை ரொறொன்ரோவில் காணப்படுகின்றது. இவை போன்ற

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


HomeLife/GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

*Independently Owned & Operated

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666




Raja Mahendran, P. Eng.
(Broker/Owner)

STORE FOR LEASE
KENNEDY & EGLINTON
Retail Store For Lease. Suitable For Various Kind Of Uses, Close To Kennedy Subway Station. To A Bigger Place.

FOR SALE

MARKHAM & STEELES
Brand New Commercial Retail Unit On Markham.

HOUSE FOR SALE
(HWY404 / MULLOCK).
3 Bedroom + walk-out house for sale. 2 Story house. New Market master bedroom + full washroom. Immediate occupancy. Asking only $389,900

FOR LEASE

FINCH & MIDDLEFIELD
Suitable for Mortgage Insurance, Yogo Class And Many More. Profit $1000.

CONDO FOR SALE
MCCOWAN & ELLESMERE
Brand new 1 bedroom + den condo for sale. Walking distance to Scarborough Town Center. Immediate Occupancy. Asking $259,900

HOUSE FOR SALE

MORNINGSIDE & OLDFINCH
Affordable 3 Bedroom Semi With Finished Walk-Out Bsmt. Walk Out To Deck. Price $359, 900

CONDO. FOR RENT
SCARBOROUGH TOWN CENTER
1 Bedroom + den condo. for lease. Utilities included. immediate occupancy. Resonable rent - $1100

FOR LEASE

FINCH & MIDDLEFIELD
Main Floor Unit In GTA Square Shopping Mall. Renovated unit.

# கனிமொழி...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

ராஜீவ்காந்தியின் மரணத்திற்கு காரணம் என்றொரு குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு, இந்திய ஆங்கிலத் தொலைக்காட்சிகளில் ஓடிக்கொண்டிருந்தது கவனிக்கத்தக்கது.

இப்பொழுது, இந்திய ஊடகக்காரர்கள் வட்டாரத்தில் அலசப்படும் சூடான செய்தி: மூன்றாவது குற்றப்பத்திரிகையில் தயாளு அம்மாள் பெயர் இடம்பெறுமா, இல்லையா? என்பதுதான். இடம்பெற்றால் தொடர்ந்து, "ராஜாத்தி அம்மாள் கைதாவாரா, மாட்டாரா" என்ற விவாதமாக அது வளரும். தமிழகச் சட்டசபையில் எதிர்கட்சியாகக்கூட இருக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு, அதிகாரத்தை இழந்து, தள்ளாத வயதில் இருக்கும் பழுத்த அரசியல்வாதியான



கருணாநிதிக்கு, அவர் வாழ்நாளில் சந்தித்த சவால்களிலேயே பெரிய சவால் இதுதான்: 2ஜி ஸ்பெக்ட்ரம் புயலில் இருந்து தன் குடும்பத்தினரை எப்படிக் காப்பாற்றப் போகிறார் என்பதுதான் அந்தச் சவால்.

**- வழிப்போக்கன் -**

## கனிமொழியின் சொத்து விபரங்கள்

அரசு ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட விபரங்கள் அடிப்படையிலான பட்டியல் இது. குறிப்பாக அசையா சொத்துக்கள். மதிப்பு: இந்திய ரூபாயில்.

1. சிஐடி காலனியில் 9494 சதுர அடி நிலத்தில் கட்டப்பட்டுள்ள ராசாத்தி அம்மாள் வீடு மதிப்பு 5 கோடி.
2. மண்ணிவாக்கம் கிராமத்தில், ராசாத்தி அம்மாள் மற்றும் கனிமொழி பெயரில் உள்ள 300 ஏக்கர் நிலம் மதிப்பு 4.5 கோடி.
3. ராசாத்தி அம்மாள் பெயரில் உள்ள ராயல் பர்னிச்சர்ஸ் மதிப்பு 10 கோடி.
4. சென்னை, அண்ணா சாலை, கதவு எண் 271-யு என்ற முகவரியில் கனிமொழி பெயரில் வணிக வளாகம் உள்ளது மதிப்பு 5 கோடி.
5. வெஸ்ட் கேட் லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தில் கனிமொழியின் பங்கு மதிப்பு 20 கோடி.
6. கலைஞர் டிவியில் கனிமொழிக்கு 20 சதவிகிதம் பங்குகள் உள்ளது. மதிப்பு 30 கோடிக்கும் மேல்.
6. ஊட்டியில் உள்ள 525 ஏக்கர் வின்ட்ஸர் எஸ்டேட். மதிப்பு 50 கோடி.
7. கோயம்பத்தூர், ப்ருக்பாண்ட் சாலை, ப்ருக்ஃபீல்ட்ஸில் உள்ள ஆர்.எம்.கே.வி. ஜவுளிக் கடை இருக்கும் நிலம், கனிமொழிக்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது.
8. இவை தவிர கருணாநிதி பெயரில் உள்ள 6124 சதுர அடி கோபாலபுரம் வீடு (மதிப்பு 5 கோடி), முரசொலி ட்ரஸ்ட் (மதிப்பு தெரியவில்லை), தஞ்சாவூர் மாவட்டம் அகரத்திருநல்லூர் கிராமத்தில் 21.30 ஏக்கர் நிலம் ஆகியவற்றில் இருந்தும் கனிமொழிக்கு பங்கு வரும்.

பினாமிகள் பெயரிலும், வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணமாகவும் இருக்க வாய்ப்புள்ளது பற்றிய விபரங்கள் சிபிஐ விசாரணையில் தெரிய வரலாம்.

# சாதனை மேல்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

பராடிஸ் என்ற அமைச்சர் பெருமகன். சென்ற ஆண்டு கோடைகாலம் முதல் இவரின் நடத்தை பற்றி மத்திய அரசின் அறவியல் ஆணையர் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார். அந்த அறிக்கை விரைவில் வெளிவரலாம்.

ராஹீம் ஜாபர் என்பவரும் அவர் மனைவி ஹெலேனா கேர்கிஸ் (Rahim Jaffer and Helena Guergis) ஆகிய. இருவரும் 2008இல் கொன்சரர்வேற்றிக் கட்சியின் நாடாளுமன்றத்தில் கணவன் மனைவி உறுப்பினர்கள் ஆகிச் சரித்திரம் படைத்ததை யாரும் மறந்திருக்க முடியாது ஆனால் ஜாபருடைய பேராசையின் விளைவாக அவர் உறுப்பினர் பதவி போனது. மனைவியை ஹார்ப்பர் மந்திரி ஆக்கினார். ஜாபரின் தில்லுமுல்லுகளால் அவரது பதவியும் போனது கட்சியிலிருந்தும் வெளியேற்றப் பட்டார். இத்தேர்தலில் அவரும் வீட்டில் தங்கி விட்டார். ஜாபர் சில வியாபார முயற்சிகளை மேற்கொண்ட பொழுது ஹார்ப்பரின் அரசில் இயற்கைவள மூலத்திற்கான அமைச்சராக விளங்கிய கிறிஸ்ரியன் பராடிஸ் (Christian Paradis) தனது பதவியின் காரணமாக ஜாபருடைய வியாபார முயற்சிகளுக்கு உதவி செய்தார் என்ற பலத்த குற்றச் சாட்டு எழுந்து சென்ற ஜுலை மாதத்தில் அதனைப் பற்றி ஆய்வு அறிக்கை சமர்பிக்குமாறு அறவியல் ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஹார்ப்பர் கிறிஸ்ரியன் பராடிஸ்சினை மந்திரியாக்குதற்கு இந்த அறிக்கை வரும்வரை பொறுத்திருக்காலாம் தானே? ஏன் அப்படிச் செய்யவில்லை?

• ரிம் ஹார்ப்பர் ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகை யின் தேசிய விஷயங்கள் பற்றி விமர்சிப்பவர். அவர் எழுதிய ஒரு விமர்சனத்தில் குறிப்பிட்டதைக் கீழே தருகிறேன். ஹார்பரின் நிர்வாகத்தில் மிக்க பலமுடையவராய் உள்ளவர் நிதி மந்திரி ஜிம் ஃபிளாஹெற்றியே (Jim Flaherty). இவரைத்தவிர ரொனி கிளெமென்ற் (Tony Clemant), ஜேசன் கென்னி (Jason Kenney), ஜோன் பெயார்ட் (John Bayard), பீற்றர் மக்கே (Peter Mackay) மற்றும் ரொப் நிகல்சன் (Rob Nicholson) ஆகியோரைக் கூறலாம். ஆனால் நாட்டின் நடப்பினைக் கொண்டு நடத்துபவர்கள் மக்களுக்குப் பெரிதும் பரிச்சயமில்லாதவர்களும் மந்திரிசபையினைச் சேராதவர்களுமான அரச நிர்வாக உத்தியோகத்தர்கள சிலரே. ஆகவே இந்த ஆறு மந்திரிகளைத் தவிர ஏனையோர் வெறும் சொல்லளவில் மாத்திரம் மந்திரிகள். அவர்களுக்கு பதவியுடன் கூடிய அலுவலகம் உண்டு, அலுவலக ஊழியர் உண்டு, கார் உண்டு. ஆனால் அவர்கள் வெளிச்சத்துக்கு



எப்போ வருவார்கள்?

• குயூபெக்குவா கட்சி, மற்றும் பசுமைக் கட்சி, இன்னும் சொல்வதானால் லிபரல் கட்சி கூட மீள எழும்ப முடியாத அளவினுக்கு ஹார்ப்பர் திட்டம் தீட்டுகிறார். ஒவ்வொரு கட்சியும் அரசு மானியம் பெறுவது தெரிந்ததே. இது நாள் வரை ஒவ்வொரு கட்சிக்கும் பொதுத் தேர்தலில் கிடைத்த வாக்குகள் ஒவ்வொன்றினுக்கும் $2 வீதம் வருடாவருடம் மானியமாக வழங்கப்பட்டு வந்துள்ளது. சென்ற ஆட்சிக் காலத்தில் பல்வேறு கட்சிகளுக்கும் வருடமொன்றிற்கு மொத்தமாக $27 மில்லியன் அரசு மானியமாகக் கிடைத்துள்ளதாம். ஹார்ப்பர் அதிலும் கை வைக்கவுள்ளார் போலத் தெரிகிறது. அதன் படிக்கு அரசு மானியத்தினை இவ்வருடம் $ 1.50, 2012 இல் $1.00 2013 இல் .50 சதமாக்கி 2014 இல் முற்றாகவே இல்லாமல் செய்வது ஹார்ப்பரின் திட்டம். அரசு மானி யத்தில் தான் பசுமைக் கட்சியும், குயூபெக்குவா கட்சியும் தமது அரசியலை ஓட்டிக் கொண்டிருந்தன. மானியம் வழங்கப்படா விட்டால் அக்கட்சிகள் உயிர் பிழைப்பதே அரிது.



**பொ. கனகசபாபதி**

# கிடைப்பதை...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

ஐக்கிய இராச்சியமும், 12.8 வீதத்தை ருசியாவும் ஏற்றுமதி செய்கின்றன. எகிப்துக்கு 3.8 பில்லியன் டொலர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. (Jordan's $294 million, United Arab Emirates $637 million Kuwait $410 million Saudi Arabia, however, was the big winner by far with a blockbuster $60 billion agreement for helicopters, fighter jets, radar equipment, and advanced smart bombs that will represent, if all purchases are made, the largest foreign arms deal in American history.)




ஒபாமாவின் பேச்சுவார்த்தைக் குரல் ஒரு மிகப் பெரிய வியாபாரத்தின் இழப்பு ஏற்படுவதை தவிர்ப்பதும், மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கான ஆதரவை வழங்குவதன் மூலம் தொடர்ச்சியாக தனது ஆதிக்கத்தை செலுத்தலாம் என்பதுவும் பிரதான காரணம். குவைத்தை ஈராக் பிடித்த போது ஜனநாயக குரல் எழுப்பி குவைத்தை மீட்ட அமெரிக்கா, இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளை விடுமாறு குரல் எழுப்பவில்லை. இதுவே முதல் குரல். அதுவும் அபாயம் நெருங்குவதன் அறிகுறியே.

வளர்ந்து வரும் முஸ்லீம் சகோதரத்துவம் இஸ்ரேலையும் நசுக்கி விடுமோ என்ற அபாயம். ஒபாமா அபாயச் சங்கு எழுப்பியுள்ளார்.




இஸ்ரேலுக்கு 67க்கு பின்னர் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை விடுவது தனது இறைமைக்கு அபாயத்தை ஏற்படுத்தும் அச்சம். குடியிருக்கும் பிரதேசங்களிலும் அந்நியரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உடனடியாக தனி இஸ்ரேல் அமைத்து தமது பிரதேசங்களில் உள்ள பாலஸ்தீனியரை வெளியேற்றுவதன் மூலம் இஸ்ரேல் என்ற நாட்டை காப்பாற்ற முடியும். அமெரிக்காவின் இரண்டும் கெட்டான் நிலை இஸ்ரேலுக்கு கிடைப்பதை சுருட்டிக் கொண்டு செல் என்று அறிவுறுத்துவதைப் போல் தான் உள்ளது.

**- ரதன் -**

# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...


**Sell your home FASTER and More MONEY with**

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**When you list your home with MIKE you receive these Guarantees**


- Your home advertised 24 hours a day until is sold
- Your home advertised in full colour prints ads every week until it is sold
- Our Team of Specialists for the same price as hiring a single agent
- Your home sold in 90 days or we buy it*

**Pt. Union/Lawrence**



$336,000 Town House 2 Storey , Bed rooms 3 Washrooms 2

**Morningside / Passmore**



$339,000 Semi Detached 2 Storey Bedrooms 3, Washrooms 2,

**W. Of Mccowan/ Bur Oak**



$359,000 Town house 2 Story, Bed-rooms 3, Wasroom 2

**Main St/10th Line (N)**



$406,900 Detached 2 Story, Bed rooms 3 Washromss 3

**14th Ave And 9th Line**



$419,900 Semi Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3,

**Church/Ninth Line**



$448,000 Detached 2 Storey , Bed rooms 3 Washrooms 3,

**Hoover / 9th. Line**



$439,900 Detached 2 storey, Bed-rooms 4, Washrooms 3,

**Brimley/Steels**



$448,000 Link 2 Story, Bedrooms 3+1, Wasroom 3,

**Morningside/Neilson**




$474,900 Detached 3 Story, Bed rooms 3+1 Washroms 4,

**Finch/Staines**



$489,900 Detached 2 Story, Bed rooms 4+1 Washrooms 3

**Brimley/Denison**



$490,000 Link 2 Story, Bed rooms 4+2, Washrooms 4

**9th / 14th**



$539,000 Detached 2 story, Bed rooms 4 Washrooms 3

**Mccowan/ Bur Oak Ave**



$579,000 Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3

**Bur Oak / Markham / 9th Line**



$579,000 Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3,

**Markham/Bur Oak**



$599,000 Detached 2 Story, Bedrooms 4+2 Washrooms 5

**Markham/14th Avenzie**



$619,900 Detached 2 Story, Bedrooms 4+1 Washrooms 5

**9th Line/14th Ave**



$729,000 Detached 2 Story, Bedrooms 4, Washroom 4,

**Markham/Brimorton**



$349,900 Detached Bungalow, Bed-rooms 3+3, Washroom 2,

**Salem / Taunton**



$369,900 Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3

**Bovaird Dr/ Ashby Field Dr**



$339,900 Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3

**Markham Rd. And Elson**



$414,900 Semi Detached 2 Story Bed rooms 3, Washrooms 3,

**9th Line / 14th Ave**



$418,000 Townhouse 2 Storey, Bed rooms 3, Washrooms 3,

**Markham/Golden**



$479,900 Link 2 Storey, Bed rooms 3, Washrooms 3,

**Bridge St/ Hwy 28**




$2,100,000 Sale Of Business Without Property Gas Stations

**Hwy 6/ Hwy 3**



$899,000 Sale Of Business Without Property Gas Stations

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# பாதிக்கப்பட்ட மக்களை...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

விலை கொடுக்க வேண்டியிருப்பதுடன், குறித்த நேரத்தில் மணலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

மணலை அள்ளுவதற்கும் அதனை ஓரிடத்தில் இருந்து வேறிடத்திற்கு ஏற்றிச் செல்வதற்கும் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரம் குறிப்பிட்ட வசதிபடைத்த அரசியல் செல்வாக்குள்ளவர்களிடம் சென்றுள்ளதனால், அவர்கள், அரசாங்க ஒப்பந்த வேலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மணலை கூடிய இலாபத்திற்கு விற்பனை செய்து வருகின்றார்கள். இதனாலேயே சாதாரண மக்கள் தமக்குத் தேவையான மணலை இலகுவாகவும், குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது,



வீடமைப்புச் செயற்பாடுகளைப் போலவே மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்கான உதவிகளும் பயனாளிகளுக்கு உரிய பயனளிக்கத்தக்க வகையில் வழங்கப்படுவதில்லை என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கூறுகின்றார்கள்.

குளத்து நீரைப் பயன்படுத்தி வயல்கள் செய்யக்கூடிய கிராமங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் ஆரம்பத்தில் வயல்களில் நெல் வேளாண்மை செய்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டன. விதைநெல், பசளை தெளிகருவிகள் என்பன வழங்கப்பட்டதுடன், வயல்களும் அரச செலவில் உழுது கொடுக்கப்பட்டன. இதேபோன்று தோட்டச் செய்கைக்கும் முதலில் சிறிய அளவில் உதவிகள் வழங்கப்பட்டன.

ஆனால் அடுத்தடுத்த போகங்களுக்கு உதவிகள் வழங்கப்படவில்லை. சொந்த செலவிலும், தனியார் மற்றும் வங்கிக் கடன் உதவிகளைக் கொண்டும் நெல் வேளாண்மை செய்த பெரும்பான்மையானவர்களுக்கு இந்த வருட ஆரம்பத்தில் பெய்த கடும் மழையினாலும், வெள்ளத்தினாலும் பயிர்கள் அழிந்து பெரும் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் நொந்து போயுள்ளார்கள்.

தோட்டச் செய்கையாளர்களின் நிலைமையோ இன்னும் மோசமாக இருக்கின்றது. வெள்ளம் வடிந்தபின்னர் தோட்டச் செய்கையில் ஈடுபட்டவர்களுக்குத் தோட்டங்களை மிருகங்களிடம் இருந்து பாதுகாப்பதற்குரிய வேலிகளை அமைப்பதற்குரிய முள்ளுக் கம்பிகளைப் பெறுவதற்கு வசதியில்லை. பயிர்களுக்கு நீர் இறைப்பதற்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் போதிய அளவில் கிடைக்கவில்லை. பொதுப்பாவனைக்கான ஒருசில இயந்திரங்களே வழங்கப்பட்டன. இவற்றை அனைவரும் பயன்படுத்துவதிலும் பல்வேறு சிக்கல்கள். இந்த நிலையில் 32 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வாங்குவதற்கு அரசு நிறுவனங்களின் ஊடாக 50 வீதம் மானிய உதவி வழங்கியது. ஆயினும் தொழில் வாய்ப்புக்கள் எதுவுமே அற்ற நிலையில் இவற்றைப் பெற்றுக்கொள்வதற்குரிய 16 ஆயிரத்து 500 ரூபா பணத்திற்கு நாங்கள் எங்கே போவது யாரிடம் அதைப் பெற்றுக்கொள்வது என்று தோட்டச் செய்கையாளர்களான விவசாயிகள் வினவுகின்றார்கள்.

மீள்குடியேற்றமும் சரி, மீள்குடியேற்றப்பட்டுள்ளவர்களுக்கான உதவிகளும்சரி மக்களை மையப்படுத்தியதாக அவர்களின் நலன்களை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டதாக அரசாங்கத்தினால் ஒழுங்கமைத்து வழங்கப்படவில்லை என்பதே மீள்குடியேற்றப் பிரதேசங்களின் யதார்த்த நிலைமையாக உள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுகிறோம். அவர்களின் மறுவாழ்வுக்கான உதவிகளை வழங்குகிறோம் என்ற பெயருக்காக மட்டுமே மீள்குடியேற்றம் மற்றும் உதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான முறையில் பலனளிக்க வேண்டும் என்ற நோக்கமின்றி ஏனோ தானோ என்ற வகையிலேயே அரசாங்கத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளும் மறுவாழ்வுக்கான உதவித் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் வாழ்வாதார உதவிகள் சீராக திட்டமிடப்பட்ட வகையில் வழங்கப்படாத காரணத்தினால் தொடர்ச்சியான வருமானத்திற்கு வழியின்றி மீள்குடியேற்றப் பிரதேசத்தின் பல பகுதிகளில் உள்ள மக்கள் பட்டினி நிலைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக ஐநாவின் மனிதாபிமான பணிகளுக்கான நிறுவனத்தின் பிந்திய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது,

# ரொறொன்ரோ...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

காரணங்களாலும் மக்கள் இங்கு ஆதனங்களில் முதலிட விரும்புகின்றார்கள். வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தால் ஆதன விலை அதிகரிப்பு தொடர்கின்றது. இருந்தும் கனடியர்களும் போட்டா போட்டி போட்டு வாங்குவதனைக் காணக்கூடியதாக உள்ளது. கனடிய பொருளாதார ஸ்திர நிலைமை மத்தியில் இப்பொழுது பெரும்பான்மை (Majority) அரசு ஆட்சி அமைந்துள்ளது, குறைந்த வட்டிவீதம் போன்றவை கனடிய ஆதன வியாபாரத்தை சீராக வைத்திருக்க உதவுகின்றது.

மேலும் ஒரு விடயத்தை காணக்கூடியதாக உள்ளது. ஏப்ரல் 2011 இல் மொத்தமான ஆதன வியாபாரத்தின் எண்ணிக்கையில் குறைவு நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு காரணமாக, அடமானக்கடனில் ஏற்பட்ட இறுக்க நிலையைக்கூறலாம். ஏப்ரல் 2011 இல் புதிதாக வலிந்து கொண்டு வரப்பட்ட, அடமானக்கடன்மீதான புதிய இறுக்கமான சட்டதிட்டங்கள் முதல்தரமாக ஆதனம் வாங்குபவர்களை சந்தையிலிருந்து நீக்கியதாகக் கொள்ளலாம். வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டால் இந்நிலைமை மோசமானதாக மாறலாம். இந்நிலைமை கனடாவில் அதிகூடிய சராசரி விலையைக் கொண்ட வன்கூவர், மற்றும் ரொறொன்ரோவில் ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும் சராசரி விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பொதுவாக இளவேனில் காலங்களில் ஆதனச் சந்தை மிகவும் ஆரோக்கியமானதாகவே காணப்படுது இயல்பு. இதே நிலைமை இந்த வருடமும் தொடர்கின்றது. இதற்கு இந்த ஆண்டும் விதிவிலக்கல்ல என்பதனை நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. எனினும் எதிர்காலத்தில் ஏற்படும் வட்டிவீத அதிகரிப்பு ஆதன வியாபாரத்தில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்துமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



## வங்கிகள் அடமானக்கடனை குறைத்தன.

கனடாவின் பெரிய நான்கு வங்கிகள் குடியிருப்பாளர்களின் அடமானக்கடனை மீண்டும் இறக்கியுள்ளன. முக்கிய வங்கிகளான றோயல் வங்கி ரொறொன்ரோ டொமினியன் வங்கி, நோவா ஸ்கோஷிய வங்கி மற்றும் மொன்றியல் வங்கி குடியிருப்பாளர்களுக்குரிய (Residential) அடமானக்கடனை குறைத்துள்ளன. கடந்த சனிக்கிழமை மே 08, 2011 இலிருந்து இந்தப் புதிய வட்டிவீதம் நடைமுறைக்கு வந்துள்ளது. 0.1% இனால் இந்த இறக்கம் ஏற்பட்டுள்ளது.

மே 19, 2011 ஆம் திகதியும் 0.1% இறக்கம் ஏற்படுத்தப்பட்டது. இன்றைய முதன்மை வட்டிவீதம் 3.00வீதமாகும்.

# விளையாட்டு...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்: நான்காவது சுற்றுக்கு முன்னேறினர் நடால், அசரென்கா

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் நான்காவது சுற்றுக்கு உலகின் முதல்தர வீரர் ஸ்பெயினின் நடால் தகுதி பெற்றார். பெண்கள் ஒற்றையரில் பெலாரசின் அசரென்கா உள்ளிட்டவர்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் பாரிசில் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் நடப்பு சாம்பியன் நடால், குரோஷியாவின் அன்டோனியோவை சந்தித்தார். இதன் முதல் செட்டை 6-1 என நடால் கைப்பற்றினார். தொடர்ந்து நடந்த அடுத்த இரண்டு செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய நடால் 6-3, 6-0 என வென்றார். முடிவில் 6-1, 6-3, 6-0 என்ற நேர் செட்கணக்கில் வெற்றி பெற்ற நடால் நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் இங்கிலாந்தின் ஆன்டி மர்ரே, ஜேர்மனியில் மைக்கேல் பெரரை 6-2, 6-3, 6-2 என்ற கணக்கில் வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் பெலாரசின் விக்டோரியா அசரென்கா, இத்தாலியின் ராபர்ட்டா வின்சியை வீழ்த்தினார். மற்றொரு போட்டியில் சீனாவின் லீ நா, ருமேனியாவின் சர்ஸ்டியாவை 6-2, 6-2 என்ற கணக்கில் வென்று நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றார். பிற மூன்றாவது சுற்று போட்டிகளில் ரயாவின் மக்கரோவா, செக் குடியரசின் பெட்ரா குவெட்டா ஆகியோர் வெற்றி பெற்றனர். கலப்பு இரட்டையரில் வெற்றி கலப்பு இரட்டையர் போட்டியில் இந்தியாவின் பயஸ், செக்குடியரசின் பெனிசோவா ஜோடி, போலந்தின் மட்க்வுஸ்கி, சீன தைபேயின் சுவாங் ஜோடியை 6-4, 7-6 என்ற நேர் செட்கணக்கில் வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555


REAL TEAM
Thinking of selling? Think SOLD!
HOMELIFE HIGHER STANDARDS
" Put our experience to work for you, and see the difference! "
Neilson/McLevin
$ 249,900
Detached,3 Bedrooms
close to all Amenities
Good Starter home
Newly Fin Basement
Call for more Details
McCowan/MajorMac
$ 620,000
5 Bedrooms Detached
4 Washroom,Hardwd floor
3 Years New ,Appr 2800sf
Large family Home
Close To All Amenities
Markham/Ellesmere
$ 749,900
Custom Built 4 Bedrooms
Fully Upgraded
Detached Few Years Old
Prime Scarboro Location
Call More Details
Sasi Chelvaratnam
Sales Representative
416.725.1125
Scarborough Town Ctr
Sale Or Lease
One Bedroom+ Dent
Scarborough Town Center
Brand New Condo
Available For Sale or Lease
Close To All Amenities
Hwy 10/Cresthaven
$371,900
Detached,4 Bedrooms
Finished Basement
Large Family home
Lovely Upgraded
Call for more Details
Markham/14th Ave
$ 499,900
3 Bedrooms Detached
Finish Basement
close to all Amenities
Newly Renovated House
Call for More Details
Mclevin/Neilson
$ 159,900
2 Bedroom Condo
2 Washroom
well kept Unit
24hrs Security
close to all Amenities.
Investment Property
$389,900
Great Investment Property
Restaurant With Three
Apartments. Good Return.
Anchored With Good
Tenants
Kennedy/Hwy7
$ 1.98 Million
Custom Built Home
5 Bedrooms Detached
& Huge House.
Upgraded Home
close to all Amenities
14th Ave/9thLane
$ 639,900
4 Bedrooms Detached
Over 2500sq feet
Close to all Amenities
Large Family Home
Call for More Details
Ravi Raveendran
Real Estate Broker
416.817.8479
Markham/Passmore
$ 549,900
3 Bedrooms Detached
Over 2000sq feet
Hardwood Floor
Upgraded Home
close to all Amenities
Finch/Middlefield
$ 189,900
2 Bedroom Condo
well kept Unit
Laminate Floor
close to all Amenities.
Markham/Buroak
$619,900
4 Bedroom Detached
5 Washroom
Finished Bsmt
Over 2500 Sf
close to all Amenities.
Kethees Seevaratnam
Sales Representative
416.275.5788
Bovaird/Sandlewood
$379,900
Detached,4 Bedrooms
Few years Old
Close to all Amenities
Call for more Details
Yonge/Sheppard
$ 429,900
New Luxury Condo
Walk To Subway
close to all Amenities
call for More Det...
Weston/Majormac
$ 629,900
4 Bedrooms Detached
Finished Basement
Hardwood Floor
Upgraded Home
close to all Amenities
Birchmount/Sheppard
$279,900
4 Bedrooms,Town house
Agincourt Area
Short Walk to All Amenities
Call for more Details
Finch/Valley Farm
$329,900
4 Bedrooms, Freehold Town
House. Well Kept.
Large Corner Lot.
Close to All Amenities .
McLevin/Tapscott
$ 299,900
3 Bedrooms Feehold
3 WashroomTown House
Close to all Amenities
Call for More Details
HWY 7 / McVean
Brand New
$949,000
New Detached,5Bed Rms
Walk-Out Basement
Ravine Lot.
Hardwood Floor
Approx 4500 Sq Ft
Justin William
Real Estate Broker
416.803.7344
Investment
Barrie
$529,000
Good Investment Property with tenant
2 Store with 7 apartment in Barrie
Call for more Details..
Oshawa
$499,000
Good Investment Property with tenants.
2 Stores with 4 apartments in Oshawa
Call for more Details..
Ottawa
$ 750,000
Gas Station With Property
Convenience Store/ Country Style
Coffee Shop. And More ...
Call for Details....
Markham
Daisy Mart
$ 129,900
Bussy Location,Well Estabilished
Business.
Call For More Details
Markham
$275000
Well Estabilshed
Sports Bar/Restaurant
In Bussy Location
Call for more Details..
Brampton
Becker's
$ 274,900
Bussy Location,Well Estabilished
Business.
Call For More Details
New Projects
AVONSHIRE
Move In Today
YONGE & 401
TRIDEL BUILT FOR LIFE
Direct:416.803.7344
HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
*Each office Independently owned and operated
5215 Finch Ave, East, Toronto, ON. Tel: 416-321-6969 & 145 Traders Blvd. E, Mississauga,ON Tel: 905-712-2666

# புதுமனை புகும்போது வாங்கிய அந்த மனை காலியாக்கித் தரவில்லையானால்......?

## கனடிய தகவல் தொடர் 149

இப்படியொரு அனுபவம் புதிய மனை வாங்கி புகும்போது அந்த குடும்பத்திற்கு ஏற்பட்டது.!

கடந்த ஏப்ரல் 27, 2011. கிரகப்பிரவேசம் செய்யும் சுபமுகூர்த்த நாளில் சட்டரீதியான தமது உடன்படிக்கைகள் யாவற்றினையும் சட்டத்தரணியின் உதவியுடன் முடித்து வீட்டுத் திறப்பினை கையில் பெற்றுக் கொண்டனர். கற்பனைகள், கனவுகளுடன் வண்டி ஒன்றில் இடம்பெயர்வதற்கான பொருட்களையும் ஏற்றிக்கொண்டு பிரம்ரன் நகரில் புதிதாக வாங்கிய அந்த வீட்டில் உட்புக சென்றபோதே அவர்களுக்கு தடையாக அந்த துர்அதிர்ஷ்ட அனுபவம் ஏற்பட்டது.

விற்பனை செய்யும் பக்கத்தில் பணிபுரியும் முகவரே வாசலில் தடையாக முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு நின்றார். **'ஏற்கெனவே குடியிருந்த தனது வாடிக்கையாளரின்** (Client) **பொருட்கள் காலியாக்கப்படவில்லை. அதற்கு ஓரிரு நாட்கள் தேவை. இப்போது உள்ளே புகமுடியாது'.** இதுவே அவரது பதில்!

- வீட்டுக்குரிய விலை யாவும் கொடுத்து தீர்க்கப்பட்டு விட்டது.
- சட்டரீதியான உடன்படிக்கைகள் யாவும் கைச்சாத்திடப்பட்டு முடிந்து விட்டது.
- உரிமை வாங்கியவருக்கு கையளிக்கும் விதமாக வீட்டின் திறப்பும் சட்டரீதியாக வழங்கப்பட்டு விட்டது.

ஆனால் இப்போது தாம் வாங்கிய வீட்டினுள் உள்ளே புகமுடியாத நிலைமையில் விற்பனை செய்தவர் சார்பில் செயல்படும் மாகாண அரசின் 'லைசன்ஸ் பெற்ற வீடு விற்பனை முகவர்' ஒருவர்.

இப்படியொரு தப்பான சகுனம் அவர்களுக்கு அன்றைய தினம் ஏற்பட்டது. இப்படியொரு நிலைமையினை எதிர்கொள்ளும்போதே இது தொடர்பான பிரச்சினையில் கடந்த காலங்களில் கனடாவின் நீதித்துறையின் முடிவுகள் எப்படி தீர்ப்புகள் வழங்கின என்ற சட்டத்துறை வரலாறுகளை தேடி ஆராயும்போதே இதே மாதிரி பிரச்சினையில் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றினை அறிய முடிந்தது. **'வோர்ட் எதிர் சிமித்'** (Foord vs Smith) என்ற வழக்கில் ஒன்ராரியோ உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு கனடாவின் சட்டத்துறை வரலாற்றில் பதிவாகி யிருப்பதுடன் பெப்பரவரி 09, 2008 இல் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில், 'House must be completely empty when sale close seller's belongings must be gone from moment keys are handed over'



விற்பனை முடிந்ததும் வீடு காலியாக்கப்படல் வேண்டும். திறப்பு கைக்கு வந்த அடுத்த கணமே விற்றவரின் உடைமைகள் வெளியே போகவேண்டும்' என்னும் தலைப்பில் ஒரு பெரிய செய்திக்கட்டுரையாக வெளி வந்திருந்தது. இந்த வழக்கில் நடந்த சம்பவம் இதுதான்! திரு. றோஜர் வூர்ரெட் (Mr. Roger Foored) என்பவர் ரொறொன்ரோவில் வசிப்பவர்.

யூன் 16, 1992 பிற்பகல் 3.09 மணிநேரம் ஒன்ராரியோ லண்டன் நகரில் தாம் வாங்கிய புதுமனையின் சட்டரீதியான உடன்படிக்கை கள் யாவற்றினையும் முடித்து கையில் திறப்பினையும் பெற்றுக்கொண்டு பாரிய ரக்வண்டி ஒன்றில் தமது இடம்பெயரும் பொருட்கள், உபகரணங்களுடன் சென்ற போதே அந்த சிறுதடங்கல் அவருக்கு ஏற்பட்டது. அதாவது ஏற்கெனவே இருந்தவர்களின் பொருட்கள் இதுவரை முற்றாக காலியாகாத ஏதோ மெதுமெதுவாக வெளியே அகற்றப்பட்டுக் கொண்டிருந்தது. மூன்று மணித்தியாலம் காத்திருந்தும் வீடு பூரணமாக காலியாகாத காரணத்தினால் மறுநாள் ரக்வண்டிக்கு இன்னொரு தொழில் ஓடர் இருந்தமையால் பொருட்களை இறக்காது ரொறொன்ரோ வுக்கு திரும்பி வரவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தமையால் திரும்பியே வந்துவிட்டார். திரும்பி ரக்வண்டியுடன் ரொறொன்ரோவுக்கு வந்தவருக்கு

- பொருட்களை இறக்கி மீண்டும் ஏற்ற ஒரு செலவு

- அவசரமாக ஒரு களஞ்சிய அறையில் (Emergency storage room) பொருட்களை வைத்திருந்த ஒரு செலவு.

- மீண்டும் மறுநாள் லண்டனுக்கு ஏற்றி செல்ல இன்னொரு செலவு.

- தங்குவதற்கு இருப்பிடமில்லாது ஹொட்ட லில் தங்கிய செலவுகள், அலைச்சல்கள்.

இப்படியெல்லாம் எதிர்கொண்ட திரு. றோஜர் தாம் எதிர்கொண்ட அலைச்சல்கள், அசௌகரியங்கள், பண நஷ்டங்கள் ஆகியவற்றுக்காக சட்டரீதியாக நீதிமன்றத் தில் நியாயம் கோரினார். நியாயம் கிடைத்தது. அதற்குரிய நட்டஈடும் வழங்கப்பட்டது.

அந்த நியாயமும் தீர்ப்பும் ஒன்ராரியோ மாகாணத்தில் ரியல் எஸ்ரேட் தொழில், முகவர்கள், சட்டங்களை கண்காணிக்கும் நிறுவனத்தாலும் பின்வருமாறு உறுதிப்படுத்தப்பட்டு நடைமுறைபடுத்தப் பட்டு வருகின்றது. அதாவது

- வீடு விற்பனை, வாங்கல் முடிந்து பணம் கைமாறியதுடன்.

- சட்டரீதியான உடன்படிக்கைகள் வக்கீல் மூலம் கைச்சாத்திடப்பட்டு உடன்படிக்கை கள் வழங்கப்பட்டு.

- வீட்டு திறப்பு கையளித்த அடுத்த நிமிடமே வீடும் காலியாக்கிவிடல் வேண்டும்.

சரி! இங்கு கடந்த ஏப்ரல் மாதம் தமிழர் ஒருவருக்கு நடந்த விடயத்துக்கு வருவோம். அவரால் முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கையில் நிச்சயம் இதே தீர்வே கிடைக்கும். சந்தேகமில்லை. இங்கு இன்னொரு விடயம்! சட்டம் தெரிந்தும் முட்டுக்கட்டையாக இருந்து வீடு விற்பவர் பக்கத்தில் நின்ற அந்த ரியல் எஸ்ரேற் முகவர், அவர் ஈழத்தமிழன் அல்ல! இதனைப்பற்றி அறிந்துகொள்ள வழக்கு தொடர

Office of the Register
Real Estate Council of Ontario
3250, Bloor St. West, Suite#600
Toronto, Ontario M8X 2X9

Telephone : 416.207.4800
இணையத்தளம் : www.reco.on.ca
மின்அஞ்சல்: complaints@reco.on.ca


றியல் எஸ்ரேற் முகவர் 'ஒருவர் செய்யும் தவறுகளுக்கு எதிராக முறைப்பாடு செய்யும் இடம் இதுவாகும். இதன் இணைய தளத்தினுள் சென்று முறைப்பாடு செய்யும் விண்ணப்பபடிவத்தை பிரதி எடுத்து நிரப்பி இந்நிறுவனத்திற்கு அனுப்பி விட்டால், இந்நிறுவனத்தின் விசாரணை மன்றம் விசாரித்து ஒரு தீர்ப்பினை வழங்குவதில் என்றுமே தவறமாட்டார்கள். ஏனெனில் இங்கு முகவரினால் ஒரு பாரிய தவறு நடந்திருக்கின்றது. பாதிக்கப்பட்டவர் பக்கத்தில் நியாயம் இருக்கின்றது. தீர்வு!

றியல் எஸ்டேட் முகவர்களுக்கு எதிரான நியாய மன்றத்தில் நியாயம் கோருவதே ஆகும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



# மரபுக்கவிதை வரலாற்றில் மற்றுமொரு ஆன்மீக கவிதை நூல்


## - அகணியின் சாயி அமுதம்

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே தமிழின் மீதான நாட்டம் அருகி வரும் இக்காலத்தில் கனடிய மண்ணில் தமிழில் வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கும் மரபுக்கவிதைகளுக்கு மறுவாழ்வளிக்கும் மற்றுமொரு பெருமுயற்சியாக 'அகணி' என தமிழ் எழுத்துலகினரால் அன்போடு அழைக்கப்படும் திரு. சி. அ. சுரேஸ் அவர்கள் எழுதிய 'சாயி அமுதம்' என்ற மரபுக் கவிதைத் தொகுப்பு நூல் பண்டிதர் ம. செல்வராசா அலெக்சாந்தர் அவர்கள் தலைமையில் 17.04.2011 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10:45 க்கு Pharmacy Tpip St. Clair வீதி சந்திப்பிற்கருகில் 65 Pharmacy Road இல் அமைந்துள்ள Oakridge Community Centre இல் சாயி பஜனாவளியோடும் ஆரத்தி நிகழ்வோடும் ஆரம்பித்து இனிதே இடம் பெற்றது. இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தமிழ் எழுத்துலக அறிஞர்கள் பலரும் அருள் மிகு சாயி அடியவர்கள் பலரும், மற்றும் நூலை ஆக்கியோனின் உற்றார் உறவினர்கள் பலரும் வருகை தந்திருந்தனர். நிகழ்வின் முதல் நிகழ்ச்சியாக "சாயி அமுதம்" நூலில் 'அகணி' அவர்கள் எழுதிய சில பக்திச்சுவை சொட்டும் நெக்குருகும் இனிய பாடல்கள் இடம் பெற்றன. அந்தவகையில் சாயி பஞ்ச புராணங்களை மிகவும் இனிமையாகப் பாடினார் முன்னாள் சங்கீத ஆசிரியை திருமதி பவானி மகாலிங்கம் அவர்கள்.

**சிவவதனி பிரபாகரன்**

தமிழில் பாமர மக்களும் இறை சிந்தையை வளர்த்து ஆன்மீக வளர்ச்சியைக் காண வழி வகுத்தவை நாயன்மார்கள் அருளிய திருமுறைகள். சொற்சுவை, பொருட்சுவை சேர்ந்தினிக்கும் திருமுறைப்பாடல்களை கேட்கச் செவி இனிக்கும். எண்ண மனம் இனிக்கும். 'சாயி அமுதத்தில்' எழுதப் பட்டுள்ள 'பஞ்ச புராண' பாடல்களும் நாயன்மார்கள் அருளிய சைவத்திருமுறை கட்கு ஒப்பானவையாக பக்திச் சுவை சொட்டுவனவாக மனங்களை உருக்கி ஆன்மீக நெகிழ்வுணர்வுள் இதயங்களை மூழ்க வைத்து மெய்மறக்கச் செய்வனவாக எளிய அழகு தமிழில் அமைந்திருக்கின்றன. 'அகணி' யின் இந்த புதுமைச் சிந்தையைப் பாராட்டாது இருக்க முடியவில்லை.

நிகழ்ச்சிகள் வரிசையில் அடுத்து வரவேற்புரையை வழங்கினார் விக்ரோரியா பார்க் சாயி நிலையத்தைச் சேர்ந்த திரு. பொன் கணேசலிங்கம் அவர்கள். அவரது கணீரென்ற குரலும் ஆன்மீக பற்றுறுதியும் தெளிந்த உள்ளத்தின் வெளிப்பாடாக




தென்பட்ட தெளிவான பேச்சும் அவரை அவரின் உரைக்கு ஏற்புடையவராக்கிற்று. அருள்மிகு சாயி பகவானின் உடல்நிலை குறித்த கவலையால் அன்றைய பொழுதில் உளவியல்ரீதியாக வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் சாயி பக்தர்களை ஆற்றுப்படுத்தி பகவானின் அருளுரைகளை மேற்கோள் காட்டி உடலின் நிலையாமை இயற்கை எனினும் இறையினதும் உயிரினதும் அழியாத்தன்மையை உணர்ந்து தேறித் தெளிவு பெறுமாறு வேண்டியமை பலரையும் அமைதிப்படுத்தியமையைக் காணமுடிந்தது. அடுத்து அகணியின் 'சாயி அமுதத்தில்' உள்ள பரவசமூட்டும் இனிய பாடல்கள் சில அவரது சகோதரியும் அவஸ்திரேலியாவில் தமிழ் இசை உலகால் அறியப்பட்டவருமான திருமதி ரமா சிவராஜா அவர்களின் இனிய குரலில் இசைத்தட்டினூடாக ஒலித்தது. இசையால் வசமாகா இதயம் எது? அதிலும் தமிழிசையில் அன்பொழுகும் சாயி பாடல்கள் என்றால் சத்ய சாயி அடியவர்களுக்கு தேனும் சர்க்கரையும் கலந்து தந்திட்ட தெவிட்டாத இனிய அமுது போலிருப்பதில் விந்தையேது?

அடுத்த நிகழ்வாக அறிமுகம் தேவைப்படாதவரும் பலராலும் நன்கு அறியப்பட்டவருமான தமிழறிஞரான பண்டிதர் ம. செல்வராசா அலெக்சாந்தர் அவர்களை நூல் வெளியீட்டுக்குழுத் தலைவராக அறிமுகம் செய்துவைக்க அதனைத்தொடர்ந்து அவர் தன் தலைவர் உரையை ஆற்றினார். அது ஒரு நூல் வெளியீட்டு விழாவா அல்லது தமிழ் பால பண்டித பாட வகுப்பா என வியந்து நோக்கும் வகையில் மிகச் சிறப்பாக தமிழ் கடலிலிருந்து பாய்ந்து வரும் தமிழருவியாக பண்டிதர் ஐயா அவர்கள் வாயிலிருந்து தமிழ் இலக்கண இலக்கியச் சிறப்புகள் தேன்மழையாகச் சொரிந்தன. அறிவூட்டும் அவரின் தமிழறிவின் சிறப்பும் அகத்தாலும் சொற்களாலும் இனிமையும் பணிவும் தோய்த்து வழங்கிய உரையும் கேட்பவர் நெஞ்சங்களை கவர்ந்தன. அடுத்து "சாயி அமுதம்" பாடல்கள் சிலவற்றை மிகமிக இனிமையான குரலில் உயிர்கொடுத்து உணர்வூட்டி திருமதி யசோ சிவகுமார் அவர்கள் சிறப்பாக பாடியபோது பலரும் விழிமூடி மெய்மறந்து இரசித்ததனைக் காணமுடிந்தது. நிகழ்வின் தொடராக வெளியீட்டுரையைச் சொற்சுவையோடும் சொற்சுருக்கத்தோடும் தனக்கே உரித்தான அவையை கவர்ந்திழுக்கும் பேச்சாற்றலோடும் திறம்பட ஆற்றினார் கவிஞர் திரு. கந்தவனம் அவர்கள். அதுவும் இன்னுமொரு தமிழ்சுவை சொட்டும் சிறப்பான உரையாக எவர்க்கும் புரியும் வகையிலும் எல்லோராலும் இரசிக்கப்படும் வகையிலும் அமைந்தது.

நிகழ்வில் மிகச் சிறப்பாக தமிழின் முழுமையான ஆளுமையோடு ஆய்வுரை ஆற்றினார் திருமதி மீரா இராசையா அவர்கள். அங்கே அவையில் வீற்றிருந்த இதர அறிஞர்களோடு ஒப்பிடுகையில் வயதிலும் பட்டறிவிலும் இளையவர் என்றாலும் அறிவில் எவர்க்கும் குறைந்தவரல்ல என எண்ணும் வகையில் நூலின் ஆழ அகலங்களையும் தமிழினதும் மரபுக் கவிதையினதும் நுட்பங்களை இலக்கண ரீதியாக ஆய்ந்து விளக்க நூலாசிரியர் கையாண்ட முறைமைகள் பற்றியும் மிக மிகச் சிறப்பாகவும் நுட்பாகவும் எடுத்து விளக்கி மிகச்சிறந்த ஆய்வுரையை ஆற்றியிருந்தார். தமிழின் மரபுக்கவிதை வகைகள் பற்றிய அவரது விளக்கங்கள் மிகச் சிறப்பாக இருந்தன. தற்கால கனடா வாழ் தமிழறிஞர்கள் வரிசையில் பெண்ணறிஞராக தனது அறிவின் பரிணாமங்களை வியக்கத்தக்க வளர்ச்சியினூடாக வெளிப்படுத்தி வரும் இவரது வளர்ச்சி கனடா வாழ் தமிழ் பெண்களுக்கு எடுத்துக்காட்டானதாக உள்ளது என்பதில் மிகை ஏதும் இல்லை.

அடுத்து கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவரான த.சிவபாலு அவர்கள் வழங்கிய கருத்துரை மற்றுமொரு ஆய்வுரையாக விளங்கியது. நூலிலுள்ள நிறை குறைகளை விளக்கிய இவர் திரு. சி. அ. சுரேஸ் அவர்களுக்குள் இருந்த கவியாற்றலை வளர்க்க எழுத்தாளர் இணையம் அவரது தலைமையில் நடத்திய கவிதை வகுப்பு எங்ஙனம் உதவிற்று என்பதையும் எங்ஙனம் முழுமையான அக்கறையோடும் ஆர்வத்தோடும் நூலாசிரியர் அவ்வகுப்பில் பங்கேற்றுக் கற்றார் என்றும் கூறினார். குறுகிய காலத்தில் கவிதைத் துறையில் நுண்மான் நுழைபுலத் தேர்ச்சி பெற்று தமிழில் உள்ள மரபுக்கவிதைகள் பற்றியும் அவைக்கான இலக்கணவிதிகள் பற்றியும் ஆய்ந்தறிந்து தன்னை வளர்த்துக் கொண்டதோடு நின்றுவிடாமல் மரபுக்கவிதை சார்ந்த அறிவைத் தேடித் தேடிக் கற்றும் தான் கற்றவற்றை மற்றவரும் பயன்பெறும் வகையில் நூலுருவாக்கியும் செயல்வடிவம் கொடுத்த நூலாசிரியரின் சாதனையைப் பாராட்டி வாழ்த்தினர். அடுத்து நூல்வெளியீட்டு வைபவம் முற்றிலும் மாறுபட்ட வகையில் இடம் பெற்று நூல்கள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து தனது ஏற்புரையை வழங்கினார் நூலாசிரியர் சி. அ. சுரேஸ் (அகணி) அவர்கள். பேச்சாளர்களின் உரைகளுக்கு பதிலளித்ததோடு இத்தகைய ஆன்மீக தமிழ் கவிதை நூல் எழுதியதற்கான நோக்கம், தேவை, பகவான் சத்ய சாயியின் அருளில் தன் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள் எனப் பலவிடயங்களை தொட்டுப் பேசினார். அத்துடன் தனது முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி கூறி இறை அருளாலேயே இச்சாதனையை தன்னால் ஆற்ற முடிந்தது எனக் கூறி தான் வணங்கும் சாயி மாதாவைப் போற்றிப் பணிந்தார்.

அதனைத் தொடர்ந்து விக்டோரியா பார்க் சாயி நிலையத் தலைவர் திரு. நாதன் துரைச்சாமி அவர்களின் சிறப்புரை இடம் பெற்றது. இவரது உரை ஒரு சிறந்த அருளுரையாகவும் ஆசியுரையாகவும் நூலாசிரியருக்கான ஊக்கமளிக்கும் உரையாகவும் அமைந்தது. நூலின் சிறப்புக்களை ஆய்ந்து விளக்க பக்கங்கள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்



On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# சினம் ஒழிந்தால் சித்தி கிட்டும்

**சினம், கவலை எனுமிரண்டும் மனிதர் வாழ்வை**
**சீரழிக்கும் நச்சாகும் உணர்ந்து கொள்வீர்**
**மன வலிவும் உடல் வலிவும் முயற்சி மற்றும்**
**மதி நுட்பம் ஆராய்ச்சி குலைந்து போகும்**
**தினம் சிறிது நேரமிதற் கென்றொதுக்கிச்**
**சிந்தித்து சீர் திருத்த இவ்விரண்டும்**
**இனமும் இனி என்னிடத்தே எழாமல் காப்பேன்**
**என்று பலமுறை கூறு வெற்றி கிட்டும்.**

சினம் தனக்கும் துன்பம் தரும், மற்றவர்க்கும் இன்னல் தரும் சினமெனும் சேர்ந்தாரைக் கொல்லி அது உற்றார்க்கும் மற்றோர்க்கும் ஊறு செய்வதுடன் தனக்கும் துன்பம் தருகின்றது என்றார் வள்ளுவர். சினத்தால் ஒருவனது முகம் விகாரமடைகின்றது. அழகு கெட்டு முகம் பார்க்க சகிக்காததாகி விடுகின்றது. உடல் நடுங்கும், கண்கள் சிவக்கும், நா குழறும், மனம் தடுமாறும், இன்னது பேசுகிறோம் இன்னது செய்கின்றோம் என்று தெரியாது. சினம் தணிந்த பின்னரும் கூட முன் நடந்ததை எண்ணிப் பார்க்க மனம் வராது. சினம் உடலையும் கெடுக்கின்றது. நோயையும் உண்டு பண்ணி விடுகின்றது.

பிளவு செய் சினம் குருதி அழுத்தம், மார்நோய் பித்து, புண் கண் நோய்கள், தாது, மூளை வளமழிவு செய்யும். இவை சினத்தால் ஏற்படும் பாதிப்புகளாகும். பிறர் மீது சினம் கொள்ளும் போது நம்மனம் எவ்வாறு நோகின்றது, வருந்துகின்றது. அதேபோன்று தான் பிறர் நம்மேல் கொள்ளும் சினம் அவர்களுக்கு வருத்தம் அளிக்கும் என்பதை கண்டுகொண்டால் நமது உறவினர்களை, மற்றும் நமக்கு நலம் செய்பவர்களை வருந்த விடுதல் நல்லதல்ல என்பது தெளிவாகும்.

ஒருவர் மீது சினம் கொண்டால் அது ஒரு அவமதிப்பாகவும் அமையும். அத்துடன் ஒருவர் மீது சினம் கொள்ளும் போது, அவர்கள் படும் வருத்தம் ஒரு சாபமாகவும் மாறிவிடுகின்றது. சினத்தால் உடலில் உள்ள உயிர்ச்சக்தி விரைவு கொள்கின்றது. குருதி அழுத்தம் ஏற்பட்டு இரத்த வேகம் அதிகரிக்கின்றது. கண்கள் சிவக்கின்றன. நரம்புகளில் படபடப்பு ஏற்பட்டு அவை பலவீனம் அடைகின்றன. இதன் விளைவாக உடலில் பல நோய்கள் உண்டாகின்றன. கண்நோய், நாக்குப்புண், வயிற்றுப்புண், மூலம், மலச்சிக்கல் போன்ற நோய்கள் ஏற்பட சினம் ஏதுவாகின்றது. சினம் எழும்போது நமது ஜீவ காந்த சக்தியானது அதிகஅளவில் வெளியேற்றப்படுகின்றது. ஜீவகாந்தச் சக்தி அதிக அளவில் வெளியேற்றப்பட்டால் அது உடலையும் தாக்கும். மனதையும் கெடுக்கும். எனவே அடிக்கடி சினம் கொள்வதை தவிர்த்துக் கொள்ளும் போது உடல் நலமும் மனநலமும் பாதிப்படையாமல் பார்த்துக் கொள்ளலாம். சினம் கொள்வதைத் தவிர்ப்பதற்குச் சிறந்தவழி மன்னிக்கும் சுபாவமே ஆகும். தீயவர்களையும் கொடியவர்களையும் மன்னிப்பது தான் நல்லது அதில்லாமல் பதிலுக்குப் பதில், பழிக்குப்பழி என்று இறங்கினால் முடிவு பாரதூரமானதாக இருக்கும். எனவே தான்

**திறனல்ல தற்பிறர் செயினும் நோநொந்து**
**அறனல்ல செய்யாமை நன்று** என்றார் வள்ளுவர்.

நமக்கு ஒருவர் கெடுதல் செய்தாலும் நாம் நம்வயம் இழக்கக் கூடாது. நம் வயம் இழந்தால் தானே சினம் வரும். நாம் நாமாகவே இருந்தால் அதுவே அவருக்கு ஒரு பாடமாகி மீண்டும் இத்தகைய தீங்கு செய்யாதிருக்க நல்வாய்ப்பாகும். இதனை பின்வரும் குறள் வலியுறுத்தும்.

**மிகுதியான மிக்கவை செய்தாரைத்**
**தாம்தம் தகுதியான வென்றுவிடல்.**

இதற்கு ஒருபடி மேலே சென்று தீங்கு செய்தவருக்கு நன்மையே செய்ய வேண்டும் என்பது வள்ளுவர் வாய்மொழி.

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்**
**நாணநன்னயம் செய்து விடல்**

சால்பு உடையவர்களுக்கு அதுவே பெருந்தன்மையாகும் என்பது வள்ளுவர் கருத்து.

**இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு**

குணம் எனும் குன்றேறி நின்றவர்கள் வெகுளியை, சினத்தை ஒரு கணமேனும் கைக்கொள்ளமாட்டார்கள் என்ற கருத்தில் தான் வள்ளுவர் பின்வரும் குறளை 'நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

**குணமெனும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேனும் காத்தல் அரிது.**

அவா அறுத்தல், மெய்யுணர்வு, துறவு முதலிய நற்குணங்களின் இருப்பிடமாக விளங்குபவர்களே அந்தணர் என்று கூறும் வள்ளுவர் அவர்களே மற்ற உயிர்களிடம் இரக்கம், அன்பு, பரிவு, பரோபகாரம், கருணை உடைய அறவோர் என்றும் எப்போதும் என்றும் உயிர்களுக்கு செந்தண்மை பூண்டு ஒழுகுபவர் என்பதால் சினம் கொள்ளமாட்டார் என்றும் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

**அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுகலான்.**



நா. க. சிவராமலிங்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**


| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



ELECTRICAL WORKS




**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880



யோகா சோதிடம்



- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# நினைவாற்றல் - MEMORY - 10

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் டொமினிக் ஓ பிரைன் (Dominic O' Brein) தனது விடா முயற்சியால் எட்டுத் தடவைகள் உலக நினைவாற்றல் சாம்பியனாக வந்தமை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். ஆமாம் வாசகர்களே, 1991ம் ஆண்டிற்கும், 2010ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் எட்டுத் தடவைகள் வெற்றியை இவர் தனதாக்கிக் கொண்டார். சிறு வயதில் நோயாளியாக இருந்த அவர் இவ்வாறான சாதனையைப் படைத்ததின் மூலமும், அதிகமான தடவைகள் வெற்றி பெற்றவர் என்ற வகையிலும் ஏனைய வெற்றியாளர்களை விட மேலானவராகக் கருதப்படுகின்றார். இந்த நேரத்தில் ஏனைய வெற்றியாளர்களைப் பற்றியும் சுருக்கமாக அறிந்து கொள்வோம். 1994ம் ஆண்டின் உலக நினைவாற்றல் சாம்பியனாக யோனாதன் ஹன்கொக் (Jonathan Hancock) வந்தார். இவர் யூனியர் மெமோரி சாம்பியன்சிப் (Junior Memory Championship) என்ற நிறுவனத்தை நிறுவி நடத்தி வருகின்றார். இவர் நினைவாற்றல் பற்றிப் பல நூல்களையும் எழுதியுள்ளார். 1972ம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்த இவர் ஒரு ஆரம்ப வகுப்பு ஆசிரியராக இருந்ததோடு, மரதன் ஓட்ட வீரராகவும் விளங்கினார். 1998ம், 2002ம், 2003ம் ஆண்டுகளில் அன்டி பெல் (Andi Bell) என்பவர் உலக நினைவாற்றல் சாம்பியனாகத் தெரிவானார். இவரின் அணுகுமுறை ரோமர்களால் பாவிக்கப்பட்ட லோகி முறையுடன் (Method of Loci) ஒத்ததாகக் காணப்பட்டது. நினைவுபடுத்த வேண்டிய விடயங்களை மிருகங்களின் அல்லது பொருட்களுடன் தொடர்புபடுத்துவார். பின்பு படங்களுடன் தொடர்புபடுத்திய பிரயாணம் ஒன்றைக் கற்பனை செய்வதன் மூலம் நினைவாற்றல் செய்துகொள்வார். 2004ம், 2008ம், 2009ம் ஆண்டுகளில் பென் பிறிட்மோர் (Ben Pridmore) உலக நினைவாற்றல் சாம்பியனாகத் தெரிவானார். இவர் மனக் கணக்கில் பிரசித்தி பெற்றவர். இவர் ஒரு கதை வடிவத்தில் விடயங்களை நினைவுபடுத்தும் அணுகுமுறை மூலம் வெற்றியீட்டினார்.

2005ம், 2006ம் ஆண்டுகளில் கிளமென்ஸ் மேயர் (Clemens Mayer) என்பவரும், 2007ம் ஆண்டில் குந்தர் கார்ஸ்ரன் (Gunther Karsten) என்பவரும் உலக நினைவாற்றல் சாம்பியனாகத் தெரிவானார்கள். இப்பொழுது முதன் முறையாக 2010ம் ஆண்டில் வாங் பெங் (Wang Feng) என்ற பெயருடைய சீன இனத்தவர் வெற்றியீட்டியுள்ளார். உலக நினைவாற்றல் சாம்பியனுக்கான தெரிவு ஆண்டு தோறும் ஒரு நினைவாற்றல் விளையாட்டுப் போட்டியாக நடத்தப்படுகின்றது. இதில் பங்கு பற்றுபவர்களிடம் குறைந்தளவு நேரத்தில் எவ்வளவு அதிகமான விடயங்களை நினைவாற்றல் செய்கின்றார்கள் என்பதைப் பரீட்சிக்கின்றார்கள். இப்பொழுது நடைமுறையில் உள்ள இந்தப் போட்டிக்கான விதிமுறைகளின் பிரகாரம் ஐந்து வெவ்வேறு விதமான போட்டிகள் நடத்தி வெற்றியாளரைத் தெரிவு செய்கின்றார்கள். இந்தப் போட்டிக்கான விபரங்களை உலக நினைவாற்றல் சாம்பியன் தெரிவுக்கான இணையத்தளத்தில் காணலாம். உதாரணமாக ஐந்து நிமிட சொற்போட்டி அல்லது வேகச் சொற்கள் (5 minute words or Speed Words) என ஒரு போட்டி இருக்கும். போட்டியாளர்கள் 5 நிமிடத்தில் வேகச்சொற்களை நினைவுபடுத்த வேண்டும். இவ்வாறு மனனம் செய்த சொற்களை பத்து நிமிடம் கழித்து மீட்டு எழுத வேண்டும். இதேபோல் எழுந்தமானச் சொற்களை 15 நிமிடத்தில் நினைவுசெய்து 30 நிமிடத்தால் மீட்டு எழுத வேண்டும். இதில் உலக சாதனை புரிபவர்களும் இருக்கின்றார்கள். இந்தச் சாதனைகளில் வேகச்சொல்லிற்கு 109 சொல்லும், எழுந்தமானச் சொல்லிற்கு 280 சொல்லும் உலகச் சாதனையில் உடைக்கப்படாத சாதனையாக உள்ளது. இவ்வாறான போட்டிகளின் வெற்றியாளர்கள் பொருத்தமான நினைவாற்றல் நுட்பங்களைப் பாவித்தே வெற்றி பெறுகின்றார்கள் என்ற விடயம் கிடைத்த தகவல்களின் மூலம் உறுதியாகின்றது.

லோகி முறையானது (Method of Loci) முற்காலத்தில் கிரேக்கிய மற்றும் ரோமர் செனட்டர்களால் தமது செனட் சபையில் உரையாற்றும் விடயங்களை நினைவாற்றல் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அவர்கள் தமது உரையைச் செய்யும்போது எதனையும் பார்த்து வாசிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்ததால் மனனம் செய்ய வேண்டிய தேவை இருந்ததாம். பல உலக நினைவாற்றல் சாதனையாளர்கள் இந்த முறையைத் தழுவியதான புதுப்புது நுட்பங்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. லோகி (Loci) என்ற சொல் இடத்தைக்குறிக்கும். லொக்கேசன் (Location) என்ற ஆங்கிலச் சொல்லிற்குரிய



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

Be JOB Ready in 5 - 12 months
citiCOLLEGE OF CANADIAN CAREERS
Get the skills you need to get the job
IT:
Network Engineering
Enterprise Network Eng.
Internetwork Specialist
Health Care:
Medical Office Assistant
Personal Support Worker
Business:
Business Administration
Computerized Accounting
CPA ACP
OACC PROUD MEMBER
Microsoft | IT Academy Program
You may qualify for SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours per week
Call us now for details 647-476-4148
Call Today:
(647) 476-4148
www.CitiCollegeINFO.com
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
Second Career clients welcome
Financial assistance may be available for those who qualify



# மரபுக்கவிதை...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டும். முகப்பட்டையில் சாயி பாபாவின் இளமைப்பட புகைப்படம் (இல்லை இல்லை ஆசிரியரின் மகள் சயனிகா சுரேஸ் வரைந்த உயிரோட்டமான தத்ரூபமான ஓவியம்) விழிகளில் அருளொளி ததும்ப அமைந்திருந்தது. முகப்பு வழி விழி கவர்ந்து நூலுக்குள் பயணித்தாள் கவிதைச் சுவையைப்போற்றுவதா தமிழின்சுவையைப் போற்றுவதா அல்லது ஆன்மீகச் சுவையை விதந்துரைப்பதா என பிரித்துச் சொல்ல முடியாதவாறு முழுமையான ஆன்மீக தமிழ் மரபுக் கவிதை நூலாக மேலோங்கிச் சிறந்து விளங்குகின்றது "சாயி அமுதம்". பாபாவை ஆன்மீக வழிகாட்டியாகக் கொண்டு வழிபடும் தமிழ் பக்தர்களுக்கு தமது தாய் மொழியிலேயே இது போன்ற பாடல்நூல்கள் கிடைத்தால் அது வரம் எனப் போற்றத் தோன்றுவதில் வியப்பேது. கவிஞர்கள் தமிழர் மரபுக்கவிதை யாப்பிலக்கணம் பற்றிக் கற்பிக்க இந்நூல் உசாத்துணையாக இருக்கும் என்பதும் என் நம்பிக்கை. அவசர உலகில் இயந்திரமயமான வாழ்வு சுழலுள் சிக்கித்தவித்து தம்மை இழந்து கொண்டிருக்கும் இன்றைய மாந்தருக்கு அமைதி வாழ்வுக்கு வழிகாட்டும் இத்தகைய நூல்கள் இன்றியமையாதவை. அந்த வகையில் தமிழ் எழுத்துலகும் ஆன்மீக உலகமும் பெருமையோடும் நன்றியோடும் பாராட்டி வியக்கும் 'சாயி அமுதம்' நூலை தந்த திரு. சி. அ. சுரேஸ் (அகணி) அவர்களுக்கு பாராட்டுக்களும் நன்றியும். அவரது எழுத்துப்பணி மேன் மேலும் சிறந்து உயர்ந்து உலகிற்குப் பயன் தர மனமார்ந்த வாழ்த்துக்கள். வெகுவிரைவில் "நினைவாற்றலை வளர்ப்பது எப்படி?" என்ற நூல் பலரும் பயன்பட வெளிவரும் என நம்புகின்றேன். இத்தலைப்பிலான அவரது தொடர் கட்டுரைகள் 'விளம்பரம்' பத்திரிகையில் தொடராக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 'அகணி' அவர்களின் பல்துறை அறிவும் நிர்வாகத் திறனும் பணிவான பண்பும் அடுத்தவர்க்கு உதவும் நற்குணமும் தமிழீழச்சங்கமூடாக கனடா வாழ் தமிழ் மக்கள் நன்கறிந்தவை. எழுத்துலகில் அவரதின் இரண்டாவது கால்வைப்பாக அமைந்த இந்த நூல் அவரின் அறிவுச்சான்றின் மற்றுமொரு பரிணாமமாக தமிழ் எழுத்துலகு பயன் பெற வெளிவந்துள்ளமை தமிழரின் பேறு என்றே கூறலாம். இவரது சாதனைகள் தொடர்ந்து தமிழுலகம் பயன் பெற வாழ்த்துக்கள்.


# உடல் பருமனும்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

And Mind) இதைத்தான் சிவராஜயோகம் என்பர்.


### யோகாசன பயிற்சி திட்டம்

(1) சலபாசனம்
(2) தனுராசனம்
(3) பஸ்ஸிமொத்தாசனம்
(4) ஹலாசனம்
(5) விபரீதகரணி
(6) சர்வாங்கசனம்
(7) உட்டியானா பந்தம்
(8) நாடிசுத்தி பிராணாயாமம்.



Alternate Nostril Breathing


இவற்றை தவறாது பழகி வருவதினால் தான் வெற்றி பெறுவது உறுதி







**YOGA - MEDITATION CLASSLESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033


# நினைவாற்றல்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

லத்தீன் மொழிபெயர்ப்பாகும். அதிக நினைவாற்றல் கொண்ட மிருகமாக யானை கருதப்படுவதால் அதிக நினைவாற்றலுக்கு யானையை ஒப்பிட்டு கூறுவது வழக்கம். அண்மைக்கால ஆய்வுகள் சில கடற்சிங்கங்களும் அதிக நினைவாற்றல் கொண்ட மிருகம் எனவும் தெரிவிக்கின்றன. எவ்வாறானாலும் மனிதன் நிறைந்த நினைவாற்றல் வலுவுடனேதான் படைக்கப் பட்டிருக்கின்றான். எமது நினைவாற்றலை நாம் அதிகம் பயன்படுத்துகையில் வலு மேலும் அதிகரிக்கின்றது என்பதை மீண்டும் நினைவில் கொள்வோம்.



எமது உடல் வலுவை அதிகரிப்பதற்கு நாம் உடற்பயிற்சி செய்வதைப்போல், நினைவாற்றல் பயிற்சி செய்து நினைவாற்றல் வலுவை அதிகரிக்கச் செய்ய வேண்டும். கவிதைகளை அல்லது பாடல்களை மனனம் செய்தலும் ஒரு நினைவாற்றல் பயிற்சியாகவும், பொழுதுபோக்காகவும் அமையும். நாம் சிறு பராயத்தில் விரும்பியோ அல்லது ஆசிரியர்களின் வற்புறுத்தலுக்காகவோ திருக்குறள், மற்றும் பல பாடல்களை மனனம் செய்தமை ஆரோக்கியமான நினைவாற்றல் பயிற்சியாக அமைந்து விட்டது. இந்த நேரத்தில் எனது பாடசாலைப்பருவத்தில் நடந்த ஒரு நகைச்சுவையான சம்பவம் நினைவுக்கு வருகின்றது. எமது தமிழ் வகுப்பில் ஒவ்வொரு வாரமும் குறிக்கப்பட்டளவு திருக்குறளை மனனம் செய்து ஆசிரியர் கேட்கும்போது வகுப்பில் உள்ள மாணவர்கள் திருக்குறளைப் பாடவேண்டும் என்பது ஆசிரியரின் உத்தரவு. அதன்படி நாம் திருக்குறளை மனனம் செய்து பாடுவோம். திருக்குறளை மனனம் செய்யாதவர்கள் வகுப்பில் பின்வரிசையில் சென்று அமர்ந்து விடுவார்கள். ஆசிரியர் முன் வரிசையில் உள்ள மாணவர்களில் இருந்து ஆரம்பித்து ஒவ்வொரு மாணவராக திருக்குறள் பாடச்செய்து கேட்டுக்கொண்டு வருவார். பின் வரிசையில் உள்ள மாணவர்கள் திருக்குறள் பாடும் நேரம் வரும்பொழுது ஆசிரியரும் களைத்து பொறுமை இழந்து விடுவார். பல மாணவர்கள் மனனம் செய்து வந்துள்ளார்கள் என்ற திருப்தியில் பின் வரிசை மாணவர்கள் பாடுவதை அதிகம் கவனிப்பதில்லை. இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி வாயை அசைத்து திருக்குறள் பாடுவதுபோல் முணுமுணுத்துப் பாசாங்கு செய்து பல மாணவர்கள் தப்பி விடுவார்கள். திருக்குறள் மனனம் செய்யாமல் பல தடவை இவ்வாறு தப்பினவர்களும் உண்டு. இவ்வாறாக மனனம் செய்வதற்கு கள்ளம் அடிப்பது பாடசாலை மாணவர்களில் உள்ள பொதுவான இயல்பு. ஆனால் பள்ளிப்பருவத்தில் மனனம் செய்த விடயங்கள் இன்றும் நினைவில் இருப்பதையும் நாம் உணர்ந்திருக்கின்றோம் அல்லவா. அதிக தொழில் நுட்பம் கொண்ட நவீன காலத்தில் விடயங்களை மனனம் செய்தல் குறைந்து செல்வது ஒரு ஆரோக்கியமான விடயமாகக் கருத முடியாது. பாடல்களை முற்றாக மனனம் செய்து சபையில் பாடுதல் ஒரு நல்ல நினைவாற்றல் பயிற்சியாக இருக்கும். பாடல் மனனம் செய்யப்பட்டு பாடலின் கருத்து முற்றாக விளங்கப்பட்டுப் பாடும்போது பாடகரால் சிறப்பாகப் பாடமுடியும் என்று கருதப்படுகின்றது. இதனால் பாடகரும் களிப்படைவதோடு கேட்போரையும் களிப்பூட்ட முடியும் என்று சொல்லப்படுகின்றது. மனனம் செய்தலுடன் குறுக்கெழுத்துப் பயிற்சிகள் (Crossword practice), சதுரங்கம் (Chess), சுடேக்கோ (Sudeko) போன்ற சிந்தனைப் பயிற்சிகள் எனப் பலவகையான பொழுது போக்குகள் நினைவாற்றல் வலுவை அதிகரிக்கச் செய்கின்றன. நினைவாற்றல் வலுவை அதிகரிக்கச் செய்யும் பற்பல விளையாட்டுக்கள் புதிய புதிய வடிவத்தில் விற்பனையாகின்றன. சிறுவர்களுக்கு இப்படியான விளையாட்டுக்களில் விருப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் நினைவாற்றலை சிறு வயதில் இருந்தே வலுவூட்டலாம். சிறு வயதில் பெற்றோரால் கதைகள் வாசித்துக் கேட்டுப்பழகிய குழந்தைகள் அதிக வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டவர்களாக உருவாகிறார்கள் என்பதை நான் பலரின் வாழ்வில் கண்டிருக்கின்றேன். பாடசாலைப் பருவத்தில் உள்ள சிறுவர்களையும் அடிக்கடி நூலகத்திற்கு அழைத்துச் சென்று நூல்களைப் பெற்றுக் கொடுத்தும், பரிசுப் பொருட்களாக நூல்களை வாங்கிக் கொடுத்தும் வாசிக்கும் பழக்கத்தை அவர்களிடம் விருத்தி செய்ய வேண்டியது பெற்றோரின் கடமையாகும். சிறுவர்கள் பாடசாலையில் மட்டும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் போதாது என்றே கருதுகின்றேன். எனவே பெற்றோர்கள் குழந்தைப் பருவத்தில் இருந்து தமது பிள்ளைகளின் நினைவாற்றலை அதிகரிக்கச் செய்வதற்கான வழிமுறைகளில் ஈடுபடுத்துவார்களானால் எதிர்காலத்தில் அவர்களில் ஒரு சிலர் நினைவாற்றல் சாம்பியன்களாகவும் உருவாகலாம். அவர்கள் குறைந்தபட்சம் நல்ல நினைவாற்றல் கொண்டவர்களாக சமூகத்தில் இருப்பார்கள். அவர்கள் கல்வியில் உயர்ந்து வாழ்வில் வளம் பெறுவார்கள். இதனைப் பெற்றோர்களின் கவனத்திற்குச் சமர்ப்பித்து விடைபெறுகின்றேன். மீண்டும் சந்திப்போம்.

தொடரும்...


# உடல் பருமனும் யோகாவில் தீர்வும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மதுவைவிட ஆபத்தானது உடல் பருமன். ஏனெனில் மதுவினால் பாதிப்பைவிட உடல் பருமனினால் கல்லீரல் (Liver) அதிகமாக பாதிப்படைகின்றது. என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். உடல் பருமனினால் நீரிழிவு, இரத்த அழுத்தம், மாரடைப்பு, பக்கவாதம், மலட்டுத்தன்மை, புற்று நோய், மூட்டுவலி, குறட்டை போன்ற பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பானது.

அடுத்து கல்லீரல் (ஈரல்) திசுக்கள் அழிந்து இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு கடைசியில் மரணத்தை ஏற்படுத்துகின்றது. இந்த உடல் பருமன் 45 வயதிற்கு மேற்பட்ட 7 பேர்களில் ஒருவருக்கு நீரிழிவு நோய் உண்டு. இதற்கு முக்கிய காரணம் உடல் பருமன். உடல் மீது அக்கறையில்லாதவர்களுக்கு இரத்த அழுத்தம், ஆஸ்துமா வியாதிகள் நிச்சயம் வரும். இதைத்தான் சித்தர் திருமூலர் " உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" என்று கூறிச் சென்றார்.

இதன் பொருள் உடல் அழியாது பாதுகாப்பதால்தான் உயிர் பிரியாது பாதுகாக்கப்படும். எனவே இந்த உடலைப் பாதுகாக்கத்தான் ஆசனப் பயிற்சிகள், மூச்சுப் பயிற்சி முறைகள். உடல் பருமன் ஏற்பட அடிப்படையான காரணம் உடல் உழைப்பு குறைந்து வருவதுதான். வாழ்வில் வசதிகள் வர வர உடலில் அசதி வந்துவிடுகின்றது. தொழில் நுட்பங்கள் வளர வளர உடல் உழைப்புக்கு இடம் இல்லாது போய்விட்டது. நமது உடல் என்பது பயன்படுத்து அல்லது இழந்துவிடுவாய். (Use it or loose it) இந்த நிலை ஏற்படாது தடுக்கத்தான் நமது முன்னோர்கள் பல ஆயிரம் ஆண்டுகளின் முன்பே இந்த யோகாசனம் என்னும் அற்புதமான பயிற்சிகளை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர்.



அவர்கள் நமது உடலை ஐந்தாகப் பிரித்து ஒவ்வொரு உடலுக்கும் தேவையான பயிற்சிகளைக் கொடுத்துள்ளனர். அவற்றை முறையாக ஒரு ஆசிரியரின் உதவியுடன் கற்கவேண்டுமென்பதே விதி.

(1) வெளி உடம்பு
(2) பிராண உடம்பு
(3) மன உடம்பு
(4) ஞான உடம்பு
(5) பேரானந்த நிலை உடம்பு

### வெளி உடம்பு (அன்னமய கோசம்)

வெளி உடம்பு எனப்படும் இந்த உடம்பைப் பாதுகாக்க உடல் தளர்வு பயிற்சிகள், சூரிய நமஸ்காரம், யோகாசன பயிற்சிகள், கிரியை முறைகள், உணவுக்கட்டுப்பாடுகள் என்பன நோய்கள் வரமால் தடுக்கும். தவறினால் உடல் உறுப்புகள் கெடுதல், ஆஸ்துமா, இரத்த அழுத்தம் தலைவலி, மூட்டுவலி, சர்க்கரை நோய் போன்றவை ஏற்படும்.

### பிராண உடம்பு (பிராணமய கோசம்)

இந்த பிராண உடம்பிற்கு பிராணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சி முறைகள் செய்துவர வேண்டும். தவறினால் மூச்சப் பாதையில் அடைப்பு நரம்புத் தளர்ச்சி படபடப்பு அலர்ஜி, உடல் பலயீனம், தைராய்டு கோளாறுகள், உடல் பருமன் என்பன ஏற்படும்.

### மன உடம்பு (மனோமய கோசம்)

இதற்கு தியானம் (Meditation), தூய சிந்தனை இனிய பாடல்களை கேட்டல், பிறர்மீது அன்பு காட்டுதல் என்பன நன்மைதரும். தவறினால் கோபம், பரபரப்பு, மன இறுக்கம், மனச்சோர்வு, தூக்கமின்மை என்பன ஏற்படும்.

### ஞான உடம்பு

அறியாமை, இயலாமை, பெருமை, கொளரவம் பார்த்தல் என்பன அதிகமாகும். இதற்கு தியானம், மனநல மருத்துவம் போன்ற பயிற்சிகளையும் கிரியை முறைகளையும் தினமும் செய்துவர வேண்டும்.

### பேரானந்தநிலை உடம்பு (ஆனந்த மய கோசம்)

யோக நித்திரை, உடல் தளர்வு பயிற்சிகள் போன்றவற்றை சவாசனத்தில் இருந்தபடியே பழகி வரவேண்டும். இதற்கு






416.289.2033 after 7:00pm

வெளி உடம்பையும், மனஉடம்பையும் இணைத்தல் என்ற பெயர் (Union Of Body

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**SEARCHING FOR FAMILY PHYSICIAN**


To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.

**EMR Ready**
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

**குடும்ப வைத்தியர் தேவை**

புதிதான ***Medical*** கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.




Contact: Dr. Vukiet Tran
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

# காரைக்கால் அம்மையாரின் காதல் வாழ்க்கை

காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார். அவரது தந்தையார் காரைக்காலில் பெரிய வணிகர். தனதத்தன் என்று பெயர். சிறு வயதிலிருந்தே புனிதவதியார் சிவபத்தி யுடையவராக வளர்ந்து வந்தார். சிவநாமத்தை உச்சரித்தல், சிவ தொண்டரைக் கண்டால் அவர்களை வணங்குதல் போன்ற ஒழுக்கங்களில் அவர் சிறந்து விளங்கினார். திருமணப் பருவம் எய்தியதும் பெரியவர்கள் பேசி ஒழுங்குசெய்த பரமதத்தன் என்பானை மணஞ்செய்து இல்லறத்தில் ஈடுபட்டார். திருமணம் இறையருளால் நடந்தது என்பதே புனிதவதியாரின் நம்பிக்கை என்பது சொல்லாமலே போதரும். அதனைத் தொடர்ந்து பரமதத்தனை அவர் காதலிக்கத் தொடங்கினார். பரமதத்தன் நாகப்பட்டினத்து வணிகர் நிதிபதியின் மகன். திருமணத்தின்பின் மாமனார் தனதத்தனின் விருப்பத்துக்கு இணங்கிக் காரைக்காலிலேயே புனிதவதியாருடன் தனிமனையில் வாழ்ந்து வந்தான். வணிகத்துறையில் ஈடுபட்டுப் பொருள் வளத்தைப் பெருக்கலாயினான்.

புனிதவதியார் கணவனுக்குச் செய்யும் கடமைகளைக் காதலுடன் செய்தும் வீட்டுக்கு வரும் விருந்தினருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து உதவியும் இல்லறத்தை இனிதே நடத்திவந்தார். சிவபெருமானை அன்புடன் நாளும் பொழுதும் சிந்தித்து வணங்குவதையும் வழுவாது செய்து வந்தார். ஒருநாள் பரமதத்தனை அவனுடைய தொழில் நிலையத்திற் சிலர் காணவந்தனர். வந்த அலுவலை முடித்துக் கொண்டு இரண்டு மாங்கனிகளை அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் சென்றனர். அவன் அம் மாங்கனிகளைத் தனது மனைவிக்கு அனுப்பி வைத்தான். புனிதவதியார் அப்பழங்களைப் பெற்றுக்கொண்டு சமையல் வேலைகளைச் செய்தார். அவ்வேளை அடியார் ஒருவர் பசியால் வாடி வாயிற் படியை அடைந்தார். புனிதவதியார் அடியாரை வரவேற்றுக் கால் கழுவ நீர் கொடுத்து அமரச் செய்து அமுது படைத்தார். ஆனால் கறிகள் இன்னமும் சமைக்கப்பட வில்லை. அம்மையார் கணவன் அனுப்பிய இரண்டு மாங்கனி களில் ஒன்றைச் சீவி அடியாருக்குப் படைத்தார். அடியார் சோற்றை மாம்பழத்துடன் உண்டு பசியாற்றி, அம்மையாரை வாழ்த்திச் சென்றார்.

பரமதத்தன் பகல் உணவுக்கு வீட்டுக்கு வந்தான். மனைவியார் உணவைப் பரிமாறினார். கூடவே அவன் அனுப்பி வைத்த மாங்கனியையும் வெட்டி வைத்தார். மாங்கனியைச் சுவைத்த பரமதத்தன் அதன் சுவைமிகுதியால் மற்றைய கனியையும் கேட்டான். மனைவியார் அதனை எதிர்பார்க்கவில்லை. என்ன பதில் சொல்வதென்று அறியாது, பழத்தை எடுத்து வருபவர் போலச் சென்றார்.

உள்ளே சென்று உள்ளம் உருகித் தான் நாளாந்தம் வணங்கும் அகிலநாயகரை வேண்டினார். என்ன அதிசயம்! அவரது கரத்தில் அதிமதுர மாங்கனி ஒன்று தோன்றியது. மகிழ்ச்சியடைந்த மனைவியார் அதனைக் கொண்டு சென்று கணவனுக்குக் கொடுத்தார். கனியை உண்ட கணவன், 'இது முன்னைய பழம்போல இல்லை. அதனினும் மிகுந்த சுவையாக வுள்ளது. இதனை எங்கே பெற்றாய்?' என்றான். அம்மையார் வேறு வழியின்றி நடந்ததைச் சொன்னார். பரமதத்தன் பெரிய கடவுள் பத்தனல்லன். அவனுக்கு அம்மையார் சொன்னதொன்றும் விளங்கவில்லை. சிவனருள் என்கிறாய். அப்படி என்றால் அவனருளாலே இன்னுமொரு கனி பெற்றுவா பாரப்போம் என்றான்.

ஈசனருள் எனக் கேட்ட
இல்லிறைவன் அது தெளியான்
வாசமலர்த் திரு அனையார்
தமைநோக்கி மற்று இதுதான்
தேசுடைய சடைப் பெருமான்
திருவருளேல் இன்னமும் ஓர்
ஆசில்கனி அவன் அருளால்
அழைத்தளிப்பாய் எனமொழிந்தான்.(1)

புனிதவதியார் சுவாமி அறைக்குட் சென்று 'இங்கு இன்னுமொரு கனி தந்து அருளீரேல் என்னுரை பொய்யாகிவிடும்' என்று இறைவனை வணங்கி மற்றுமொரு கனிபெற்று வந்தார். அதனைக் கணவனிடம் கையளிக்கை யில் அது மறைந்தது. பரமதத்தன் வியப்புற்றான். உண்மையை உணர்ந்து கொண்டான்.

இவள் சாதாரண பெண்ணலல்லள், தெய்வம் என்பதும் அவனுக்குத் தெளிவாயிற்று. அவளை விட்டு விலகுதல் வேண்டும் என்று அக்கணமே முடிவுசெய்தான். ஆயின் அதனை யாருக்கும் சொல்லாது மனைவியுடன் ஒடும் புளியம்பழமும் போல் உறவாடி வந்தான். சில நாட்களின்பின் வெளியூர் சென்று வாணிபஞ் செய்ய விரும்புவ தாக மனைவிக்கும் மற்றவருக்கும் கூறினான். உறவினர் பயணத்துக்கு மரக்கலம் அமைத்து உதவினர். பரமதத்தன் அம் மரக்கலத்தில் வேண்டிய வணிகப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு சிலருடன் புறப்பட்டான்.

ஈற்றிற் பாண்டிநாட்டை அடைந்து வணிகஞ் செய்துவருங் காலத்தில் அங்குள்ள ஒரு பெண்ணை மணந்து இல்லற வாழ்விலும் ஈடுபட்டான். பெண்குழந்தை ஒன்றும் பிறந்தது.

பரமதத்தன் திரும்பி வராதது புனிதவதியாருக்குக் கவலையளித்தது. அவரது சுற்றத்தார் அவன் பாண்டி நாட்டில் இருப்பதை அறிந்து, புனிதவதியாரை அவனுடன் சேர்த்து வைக்க அழைத்துச் சென்றனர்.

புனிதவதியாரைக் கண்ட பரமதத்தன் தனது மனைவி பிள்ளையுடன் வந்து வணங்கி நின்றான். அதனைக் கண்ட சுற்றத்தவர், 'என்ன இது, மனைவியை வணங்குகின்றீர்?' என்று வியப்புடன் வினாவினர். 'அவர் தெய்வம். அதனாற்றான் அவரை விட்டு நீங்கினேன். இந்தக் குழந்தைக்கும் அவரது திருப்பெயரையே சூட்டியுள்ளேன். அவர் வணக்கத்துக்கு உரியவர்' என்றான்.

புனிதவதியாருக்கு இது ஏமாற்றந்தான். இருந்தாலும் சாதாரண பெண்களைப் போல அவர் தன்னைத் துறந்த கணவனைத் தூற்ற வில்லை. வாழ்க்கையை வெறுத்துத் தன்னை மாய்த்துக் கொள்ளத் துணியவுமில்லை. அவர் சிவபத்தர். எதையுந் தாங்கும் இதயம் படைத்தவர். அவரது இல்லற வாழ்வு இத்துடன் நிறைவுபெறுவதை உணர்ந்து இறைவனை இவ்விதம் வணங்குகின்றார்:

ஈங்கிவன் குறித்த கொள்கை
இதுவெனின் இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்திங்(கு) உன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடி(வு) அடியே னுக்குப்
பாங்குற வேண்டும் என்று
பரமர்தாள் பரவி நின்றார்.(2)

புனிதவதியார் தமது அழகு வடிவத்தை நீக்கிப் பேய்வடிவு தரவேண்டும் என்று ஏன் இறைவனை வேண்டினார்? இதுவரை காலமும் தனது அழகும் அணிகலன்களும் உலகியல் வாழ்வுக் குரியதாக இருந்தன. கணவன் தன்னைவிட்டு நீங்கியவிடத்து உலகி யல் வாழ்வைத் துறக்க அவர் முடிவு செய்துவிட்டார். இல்லறத்தில் இருந்து கொண்டே வணங்கிவந்த கடவுளை நாள் முழுவதும் வணங்கத் துறவறம் அவருக்கு வாய்ப்பாக இருக்கும். கடவுளை வணங்குவதற்குப் பேய்வடிவம் உகந்தது என்பது அவரது சித்தம். அழகான ஒரு பெண் ஆலயத்துக்குச் சென்றாலும் ஆயிரம் கண்கள் அவளை மேயும். பேய்வடிவத்தை யாரும் திரும்பியும் பார்க்க மாட்டார்.

மேலும் பேய்வடிவம் இறைவனுக்குப் பிடித்தமானது. அது தத்துவ காரிய மாயா உடல் ஒழித்த ஞான வடிவம். அந்த வடிவப் பேய்களுடன் சுடலையில் நின்று ஆடுகின்றவரல்லவா அவர். அதனாற்றான் போலும் கேட்டதும் பேய்வடிவத்தை அவர் அருள்பாலித் தார். அப்பொழுது,

மலர்மழை பொழிந்த தெங்கும்
வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம
உம்பரும் முனிவர் தாமும்
குலவினர் கணங்கள் எல்லாம்
குணலை இட்டன ... ... (3)

சுற்றத்தாரும் தொழுது அஞ்சி அகன்று போயினர்.

அம்மையார் தெய்வீக வாழ்வில் ஈடுபட்டார். அற்புதத் திருவந்தாதியையும் திருவிரட்டை மணிமாலையையும் இறையருளால் திருவாய் மலர்ந்தார். தொடக்கத்தில் அவரது பேய் வடிவத்தைக் கண்டவர் அஞ்சி ஓடுவதுண்டு. அதனைக் கண்ட அம்மையார் 'இறைவர் என்னை அறிவாராயின், உண்மை விளங்கா மக்களுக்கு எவ்வுருவாக இருந்தாலும் என்ன' என்று சொல்வார். ஆனாலும் காலப்போக்கில் மக்கள் அவரை மதிக்கப் பழகிக்கொண்டனர். பத்தியுடன் புனிதவதியாரைப் பலரும் காரைக்கால் அம்மையார் என்றும் பேயார் என்றும் அழைக்கலாயினர். பேயார் திருக்கயிலா யத்துக்கு யாத்திரை செய்தார். கயிலா யத்தை அணுகியதும் காலால் நடவாது தலையால் மலையேறினார். அவரைக் கண்ட உமாதேவியார் என்னே இவரது அன்பு என்று வியந்தார். சிவபெருமான் அந்த என்பு வடிவாய அன்பு வடிவத்தை அம்மையே என்று அழைத்துச் சிறப்பித்தார். அம்மையாரும் அப்பா என்று விழுந்து வணங்கினார். வேண்டத் தக்கதை அறியும் விமலனார் வேண்டுவது யாது என்றார். அம்மையார்,

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

சிவபெருமான் வேண்டியதை வழங்கி, திருவாலங்காட்டிலே தமது நடனத்தைக் கண்டு களித்திருக்க அம்மையாருக்கு அருள்பாலித்தார். அவ்வண்ணமே அம்மையார் திருவாலங்காட்டுக்குச் சென்று இறைவனின் ஆடலைக் கண்டு பாடலால் தொழுதார். அப்பாடல்களே மூத்த திருப்பதிகங்கள் என அழைக்கப்படுவன.

-------------------

1. திருத்தொண்டர் புராணம்: காரைக்கால் அம்மையார், பாடல் 29
2. மேற்படி பாடல் 49
3. மேற்படி பாடல் 51



கவிஞர் வி. கந்தவனம்




Price Start From
$255
Sq.ft.

the ONE centre




@ WARDEN & EGLINTON

Retail, Restaurant, Food Court and Office

OPEN HOUSE ON

SATURDAY JUNE 04, 2011 From-11:00 a.m.

At

GTA SQUARE

5215 Finch Ave. East (2nd Floor)

416-321-6969

HOMELIFE/GTA REALTY INC.

BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED

HOMELIFE HIGHER STANDARDS


www.artinkmultimedia.ca

# நமது வாழ்நாளில் இல்லாமல் போகப்போகும் 9 பொருட்கள்









1. **தபால் அலுவலகம்** : Email, Fedex, GPS ஆகியன, தபால் அலுவலகத்தின் வருமானம் மிகவும் குறைந்து போக காரணமாக உள்ளது. இப்பொழுது தபாலில், தேவையற்ற விளம்பரங்களும், பணம் கட்ட வேண்டிய பத்திரங்களும் (Bills) மட்டுமே வருகின்றன. இதனால் தபால் அலுவலகங்கள் விரைவில் மூடப்பட்டுவிடும்.

2. **நிரந்தர தொலைபேசி** : பெரிய குடும்பத்தில் பலர் உள்ளூர் தொலைபேசி பாவனையாளர்களாக இருந்தால் ஒழிய மற்றவர்களுக்கு நிரந்தர தொலைபேசி தேவை யில்லை. கைத்தொலைபேசியை விட நிரந்தர தொலைபேசி அதிக பணச்செலவானது.

3. **காசோலை** : பிரித்தானியா காசோலையை 2018 இல் நிறுத்துவதற்கு திட்டம் வைத்து இருக்கிறது. காசோலையின் அழிவிற்கு காரணமாக, பிளாஸ்ரிக் அட்டைகளும், மின்வலையில் நடைபெறும் வியாபாரமும் இருக்கின்றன.

4. **பாடல்கள் தயாரிப்பவர்கள்** : தெரிந்த, பழகின பாடல்களைத்தான் இப்பொழுது 40% இற்கு மேலானவர்கள் வாங்குகிறார்கள். புதிய பாடல்கள் மக்களின் பாவனைக்கு வர முடியாது. இதுவே புதிய பாடல்களின் மறைவுக்கு காரணம். இதனால் விரைவில் பாடல்களை தயாரிக்கும் நிறுவனங்கள் இல்லாமல் போய்விடும்.

5. **புதினப்பத்திரிகை** : இளைய தலைமுறை பத்திரிகை வாசிப்பதில்லை. இதுவும் பால்காரன், துணிதுவைப்பவர் போல் மறைந்து சென்று விடும். மின்வலையில் வரும் பத்திரிகைகளை, சில நாட்களில் பணம் கொடுத்து வாங்க தயாராக இருக்க வேண்டும். நடமாடக்கூடிய மின் உபகரணங்கள் அதிகமானதால், பத்திரிகை பிரசுரிப்பவர்கள் Apple, Amazon ஆகியவர்களோடு சேர்ந்து பணம் செலுத்தி பத்திரிகைகளை இந்த நடமாடும் உபகரணங்களில் (Cell Phone, Ipad, Playbook) பாவிக்க கூடிய முறைபற்றி ஆலோசிக்கிறார்கள்.

6. **புத்தகம்** : கணினியில் இப்பொழுது புத்தகத்தை புத்தக கடையில் தேடிப்பார்க்கலாம். சில பக்கங்களை வாங்குவதற்கு முன்னம் வாசிக்கலாம். விலையும் உண்மையான புத்தகத்தை விட அரைவாசியாக உள்ளது. இதனால், பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களின் தேவை விரைவில் மறைந்துவிடும்.

7. **தொலைக்காட்சிப்பெட்டி** : இப்பொழுது எல்லோரும் தொலைக்காட்சிகளையும், திரைப்படங்களையும் கணினியிலிருந்துதான் பார்க்கிறார்கள். அதுவும் தொலைக்காட்சி

தொடர்ச்சி 31ஆம் பக்கம்







*This ad sponsored by: N. Murugadas*, Mortgage Specialist, *416-543-6614, 416-759-1818*

# இனிப்பான பதினாறு ரகசியங்கள்

## தீபிகா படுகோன்

தீப்பொறி பறக்கும் கண்கள்; தொட்டவுடன் பற்றிக்கொள்ளும் மின்னும் தோல்; நெருப்பு போல தெளிவான நடிப்பு; மயக்கும் சிரிப்பு... இருபத்தி மூன்று வயது நங்கை தீபிகா படுகோன், இந்திய இளைஞர்களின் கனவுக் கன்னியாக இருப்பது ஆச்சியமானதல்ல. ஆனால், பலருக்கும் தெரியாத ஒரு விஷயம், தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றுள்ள முன்னாள் பேட்மிண்டன் வீராங்கனை இவர். ரஜினிகாந்தின் 'ராணா' மூலம் தமிழில் காலடி எடுத்து வைக்கிறார். சமீபத்தில் சென்னை வந்திருந்தவரை 'விளம்பரம்' இதழுக்காகச் சந்தித்தோம்.

1. உங்கள் இயல்பு?
"நான் கொஞ்சம் கூச்ச சுபாவமும் நாணமும் கொண்டவள். ஆனால் அதற்காக, என்னை இறுக்கமானவர் என்று நினைத்துவிட வேண்டாம். பழகிவிட்டேன் என்றால், ரொம்ப சகஜமாகிவிடுவேன். எப்பொழுதும் நான் சிரிப்பதையும் மற்றவர்களை சிரிக்க வைப்பதையும்தான் விரும்புகிறேன்! இன்னொரு விஷயம், பள்ளிக் காலங்களில் இன்றைக்கு நீங்கள் பார்க்கும் அடக்கமான, பண்புகள் நிறைந்த தன்மைக்கு நேர்மாறாக இருந்தேன். உங்களால் நம்ப முடியாமல் இருக்கலாம். ஆனால், பள்ளியில் கூடப் படித்தவர்களை நான் மோசமாக பயமுறுத்தி இருக்கிறேன். நான் உயரமாக இருந்ததே அதற்குக் காரணம். ரொம்ப முரட்டுத்தனமான பெண்ணாக இருந்தேன்.



2. பிடித்தமான பொழுதுபோக்கு?
"டிவியில் வரும் 'ஜஸ்ட் ஃபார் லாஃப்' சினிமாவின் முடிவில் வரும் கேலிக் கூத்துக்கள், தவறுகள் போன்றவற்றை ரசிப்பேன். நாம் ரொம்பவும் சீரியசாக வாழ்ந்து கொண்டிருப்பதால், இதுபோன்றவை மிகப் பெரிய விஷயங்களாகி விடுகின்றன. டிவியில் நல்ல நிகழ்ச்சிகள் எதுவும் இல்லையென்றால் ஏதாவது சமையல் செய்வேன். நான் சமைப்பதை மிகவும் விரும்புகிறேன். அது உடலுக்கு ஆரோக்கியமானதாகவும் இருக்கும். பத்தாவது படித்து முடித்த பிறகு சமையல்கலை வகுப்பில் சேர்ந்தேன். அப்போது சீன, இந்திய, வெளிநாட்டு உணவு தயாரிப்பு முறைகளை கற்றுக்கொண்டேன். கேக், பிரவுனி, நான் கட்டாய் போன்றவற்றை நன்றாக 'பேக்' செய்வேன். இப்போது நான் 'பேக்' செய்வதில்லை என்று என் அம்மா குறைபட்டுக் கொள்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்."

3. விருப்பமான பொருட்கள்?
"பழைய இந்தி, ஆங்கில பாடல்கள், காதல் பாடல்கள், பேண்ட் சைக் குழுக்களின் இலக்கணமற்ற இசை பிடிக்கும். இவற்றின் சிடிகளை சேகரித்து வைத்திருக்கிறேன். இசை சிகிச்சை ரொம்ப பயன் தரும் என்று நம்புகிறேன். மேலும், சமீப தொழில்நுட்ப வளர்ச்சியின் வரவுகளான செல்ஃபோன், லாப்டாப், ஐபாட் எல்லாமே பிடிக்கும். தொழில்நுட்ப உலகில் புதிதாக வருபவை என்னிடம் இருக்க வேண்டும் என்று நினைப்பேன்."

4. எதன் மீது பைத்தியம்?
"சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் குறியாக இருப்பேன். சில நேரம் அது வெறி போல் மாறிவிடும். என் கைகளை திரும்பத் திரும்ப கழுவிக்கொண்டே இருப்பேன். என்னைச் சுற்றி அழுக்காகவோ, கசமுசாவென்றோ பொருள்கள் இருந்தால் எனக்குப் பிடிக்காது. அது எனது வீடோ அல்லது வேறொருவர் வீடோ, அழுக்காக இருந்தால் அகற்றிவிடுவேன். கலைந்து கிடப்பதை அடுக்க ஆரம்பித்து விடுவேன்."

5. தெரிந்த மொழிகள்?
"ஆங்கிலம், இந்தி, கொங்கனி, கன்னடம், ஃபிரெஞ்ச் ஆகிய மொழிகள் எனக்குத் தெரியும். எங்கிருக்கிறேன் என்பதைப் பொறுத்து வெவ்வேறு மொழிகளில் சிந்திக்கவும் செய்வேன். வேலை பார்க்கும் போது ஆங்கிலம், இந்தியில் சிந்திப்பேன். வீட்டில் கொங்கனி சிந்தனைதான் ஓடும்."

6. செய்யும் உடற்பயிற்சிகள்?
"புத்தம்புது காலைதான் ஒரு நாளில் எனக்குப் பிடித்த நேரம். அமைதி தவழும் காலை நேரத்தில் 5.30 மணிக்கு எழுந்து யோகா செய்வேன். பிறகு, பகல் முழுக்க வேலையைச் செய்வேன். வேலையே சிறந்த உடற்பயிற்சி என நினைக்கிறேன். நல்ல தூக்கமும் அவசியம்."

7. வெற்றியின் ரகசியம்?
"என்னைப் பார்த்து அனைவரும் ஆச்சரியப் படும் விஷயம் ஒன்று உண்டென்றால், அது எந்த பிரச்சினை சார்ந்தும் நான் எடுக்கும் தீர்மானமான முடிவு பற்றியதுதான். நான் வெறும் அழகுப் பதுமை மட்டும்தான் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள், எனது முடிவுகளைப் பார்த்து அதிசயிப்பார்கள். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன் மும்பை வந்தபோது, எதிர்பாராத பிரச்சினைகள் வரலாம் என்று நினைத்தேன். எதையும் இழந்து விடாமல், உதவிக்கு யாரும் வராத நிலைக்கு சென்றுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தேன். ஒவ்வொரு சின்ன பிரச்சினைக்கும் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்க மாட்டேன். எளிமையான, சிந்தனை மிகுந்த செயல்பாடுகளையே விரும்புகிறேன். நான் கடினமாக உழைக்கும் பெண், எனது சக்தியை வேலையிலேயே செலவழிப்பேன். யாருடனாவது மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டால், அதன் பிறகு ஒரு எளிமையான ஃபோன் காலோ அல்லது எஸ்.எம்.எஸ்ஸோ போதும். என் மனசு அமைதியாகிவிடும்."

**- சிவதானு -**

8. வீராங்கனை கனவு?
"விளையாடிக் கொண்டிருந்த நாட்களில் அத்துறையில் உச்சத்துக்கு செல்ல வேண்டும் என விரும்பினேன். ஆனால், 2002இல் தேசிய அணிக்காக பாட்மின்டன் விளையாடுவதை திடீரென கைவிட்டு நடிப்புக்கு வந்தேன். இத்துறையில் உச்சத்துக்கு சென்று, நிறைவேறாத பழைய கனவை நினைவாக்க விரும்புகிறேன். எனக்கு ஆஸ்கர் கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று தோன்றுகிறது. ஆனாலும், அந்தக் கனவு உண்டு."

9. அழகின் ரகசியம்?
"சமநிலையான வாழ்க்கை முறையே காரணம். மேக்கப்பை அள்ளிப் பூசியிருக்கிறேனா அல்லது இருப்பதே தெரியாமல் இருக்கிறதா என்பதை முகத்தைப் பார்த்தாலே தெரியும். நான் மாய்ஸ்சுரைசர், லிப்பாம் மட்டுமே பயன்படுத்துவேன். மாதம் ஒரு முறையாவது கட்டாயம் எண்ணெய்

**தொடர்ச்சி 36ஆம் பக்கம்**



Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296
sktheesan@gmail.com

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

# கண்டேன் - திரை விமர்சனம்

புதுமுக இயக்குநர், புதுமுக இசையமைப்பாளர், புதுமுக ஒளிப்பதிவாளர்... எனப் பல புதுமுகங்களின் கூட்டணி முயற்சியில் சாந்தனு, சந்தானம் இணைந்து புதுமுக நாயகி ரேஷ்மியை கலாய்த்திருக்கும் படம். தன் கிராமத்தில் நாட்டாமை மாதிரி பெரும்தனக்காரர் விஜயகுமார். கழுத்து நிறைய தங்கச் சங்கிலிகளும் முறுக்கிய மீசையுமாக வலம் வரும் விஜயகுமார், அரண்மனை ஒன்றில் பெரிய வீட்டில் தனியாக வசித்து வருகிறார். விஜயகுமாரின் பேரன்தான் சாந்தனு. சென்னையில் இருக்கிறார். தன் பேரன் சாந்தனுக்கு திருமணம் செய்து வைக்க ஆசைப்படுகிறார் தாத்தா விஜயகுமார். உள்ளூரிலேயே பேரனுக்கு பெண்ணும் பார்த்துவிட்டு,

- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -



சாந்தனுவை வரவழைக்கிறார். திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடைபெறுகிறது. தாத்தாவின் இந்த திடீர் ஏற்பாட்டிலிருந்து தப்பிக்க, தான் சென்னையில் ஒரு பெண்ணை காதலிப்பதாக ஒரு திடீர் பொய்யைச் சொல்கிறார் சாந்தனு. அப்படியானால், அவளை அழைத்து வா அவளையே உனக்கு திருமணம் செய்து வைக்கிறேன் எனச் சொல்கிறார் விஜயகுமார். அதற்கு ஒரு மாதம் கெடுவும் விதிக்கிறார். முப்பது நாளுக்குள் காதலியை கூட்டி வரவில்லையென்றால் தான் பார்த்த பெண்ணை கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறார். தாத்தாவின் கல்யாண ஏற்பாடுகளை தடுத்து நிறுத்த, அவசரமாகச் சொன்ன ஒரு பொய்தானே தவிர, உண்மையில் சாந்தனு சென்னையில் யாரையும் காதலிக்கவில்லை. இப்பொழுது, தாத்தாவிடம் சொன்ன பொய்யை உண்மையாக்க, ஒரு பெண்ணைக் காதலிக்க வேண்டிய கட்டாயத்தில் சாந்தனு இருக்கிறார். அதற்கான யோசனையுடன் சென்னை திரும்புகிறார்.

சென்னையில், அவசர அவசரமாக தனக்கு பிடித்த மாதிரியான ஒரு அழகான பெண்ணைத் தேடுகிறார் சாந்தனு. அவர் எதிர்பார்க்கும் அனைத்து அம்சங்களும் உடைய பெண்ணாக ரேஷ்மியைக் கண்டுபிடிக்கிறார். அவரை, எப்படித் தன் காதல் வலையில் விழ வைப்பது எனத் திட்டம் தீட்டுகிறார். ரேஷ்மி, பார்வையற்றவர்கள் மீது அதீத அன்பு உடையவர் என்பதைக் கண்டுபிடிக்கிறார். எனவே, ஒரு பார்வையற்ற இளைஞனாக நடித்து ரேஷ்மி மனதில் இடம் பிடிக்கிறார். காதல் ஓகே ஆனால், காதலுக்கு தடையாக வருகிறார் ரேஷ்மியின் தந்தை ஆதிஷ் வித்யார்த்தி. "பார்வையற்ற ஒருவரை மருமகனாக ஏற்க முடியாது" என்கிறார். இதனால், ரேஷ்மியும் சாந்தனுவும் பதிவு திருமணம் செய்துகொள்ள தீர்மானிக்கிறார்கள். இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்போது, சாந்தனு பார்வையற்றவர் இல்லை என்ற உண்மை வெளிப்படுகிறது. தன்னை ஏமாற்றிவிட்டார் என்று சாந்தனுவை வெறுக்கத் தொடங்குகிறார் ரேஷ்மி.

சாந்தனு, ரேஷ்மியை தொடர்ந்து துரத்தி,

**தொடர்ச்சி 39ஆம் பக்கம்**


# மேல்மருவத்துூர் ஆதிபராசக்தி ஜோதிடம்

## பண்டித் மகேந்திரன் சுவாமிகள்






ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி
ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்

மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித்
அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நலுவவிடாதீர்கள்
அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும்
பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்





**100% உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு**

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

**Tel: 647-919-5846 / 647-718-9555**

**5210 Finch Ave. East, Unit # 1, Scarborough**

**(Inside of Golden Bakery)**

Beside the Meenadchi temple ON, M1S 4S4

# BASEMENT RENT

**SHEPPARD & NEILSON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, school, mall. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.997.8070
(Call after 6.00pm)

**MORNINGSIDE & SHEPPARD**
**ROUGH RIVER & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.220.5967

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to doctors, mall, tamil stores & school.
Avail. immediately.
416.301.1387/905.604.0814

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities.
Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.896.7740

**MCCOWAN & EGLINTON**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.880.3636 / 416.820.4453

**9TH LINE & STEELES**
புதிதாக அமைக்கப்பட்ட bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Cable & Internet. தனி நபர் விரும்பத்தக்கது.
416.875.3611 / 905.554.9353

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.438.3616

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom walk-out bsmt for rent. Parking. Close to facilities. பெண்கள் அல்லது வயதானவர்கள் விரும்பத்தக்கது.
Avail. immediately. (Call after 7.00pm)
தொடர்புகளுக்கு: 416.335.5078

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.801.4681

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.241.2872

**NEILSON & FINCH**
Newly renovated 2 bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.843.5982

**STEELES & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
Avail. June 01, 2011
தொடர்புகளுக்கு: 416.931.3444

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to bus, shopping, school, etc.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.4812

**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall, shopping. Avail. Anytime. தொடர்புகளுக்கு:
416.754.0823 / 416.291.3153
( Please leave the message)

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to kennedy subway, TTC. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.406.5749

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom + den bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.439.5405 / 647.456.9830

**MORNINGSIDE & 401/MCLEVIN**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, wal-mart, nofrillslibrary, 4elementary school, University. Small family or seniors preferred.
தொடர்புகளுக்கு: 416.834.1081

**BATHURST & MAJOR MACKENZIE**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.554.4467

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, school. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.1479

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to plaza, school, TTC. Avail. immediatly.
தொடர்புகளுக்கு: 416.836.3279

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.282.7436

**SEWELLS & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.897.4897

**SCAR.GOLF CLUB & KINGSTON**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, go station, Close to junior school. Young couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.618.0153

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.882.7638

**MARKHAM & PAINTEDPOST**
2 Bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to 1 minute to TTC, school. Avail. immediately.
416.917.5325 / 416.431.8924

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
1 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, full washroom, laundry, Sep. entrance. Avail. July 30, 2011. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to school, bus.Available immediately.
416.609.1484/416.843.6721

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom walk-out bsmt for rent. Close TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.662.7984

**PHARMACY & LAWRENCE**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, HWY 401, HWY 404. 2 Washrooms. 1400 sq.ft. Avail. July 01, 2011. No smoking & No pets. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.750.4077

**BIRCHMOUNT & SHEPPARD**
Newly renovated 3 அறைகள் கொண்ட Bungalow வீட்டில் உள்ள bsmt இல் அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, parking, laundry, cable, laundry. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.804.8435

**MCCOWAN & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, school, park, Scarborough Town Center.
416.439.1570 / 416.431.5195

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. 647.703.1343 / 905.472.1370 / 647.500.4564

**FINCH & BIRCHMOUNT**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Utilities included. Close to all facilities. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Each room $325. No Smoking & No pets. Avail. June 01, 2011
தொடர்புகளுக்கு: 416.890.5267

**MCCOWAN & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.302.6930

**NEILSON & FINCH / TAPSCOTT**
2 அறைகள் கொண்ட Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
வயதான தனியொருவர் விரும்பத்தக்கது
தொடர்புகளுக்கு: 416.802.6067

**14TH AVE & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.727.7550

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0870

# CONDO. RENT

**TAPSCOTT & FINCH**
2 Bedroom condo for rent. Close to mall, TTC. Avail. immediately.
416.912.8352 / 647.801.9144

**NEILSON & MCLEVIN**
Newly renovated (With new appliances) condo for rent. Parking, 24hrs gate security, AC & pool. Close to school, mall, doctor's office & much more. Rent $1050/month. Avail. immediately.
416.560.0327 (Call after 5.00pm)

# CONDO FOR SALE

**KENNEDY & ELLESMERE**
3 Bedroom condo. for sale. Close to library, school, Highland Farm. Avail. immediately.
647.700.7427 / 416.565.6570

# CONDO. FOR LEASE

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom + den condo. for rent. Never lived condo. Close to Scarborough Town Center. Excellent view. 1 Parking included.
தொடர்புகளுக்கு: 416.315.9397

**BRIMLEY & EGLINTON**
Newly renovated 3 bedroom house for rent. Laundry, parking. Close to TTC, school, mall. 2 Bedroom bsmt also available with sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.725.2041

# CONDO. RENT /SALE

**KENNEDY & EGLINTON**
***Rainbow Village***
2 Bedroom + 2 Washroom condo. for rent or sale. Close to TTC, Kennedy Subway, tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.267.5085

# SPACE FOR RENT

**MARKHAM & NASHDENE**
Commercial space for lease. Deck level.
தொடர்புகளுக்கு: 416.292.1975

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு.
416.755.8354 / 647.836.9255

மேலும் பக்கங்கள் 25, 26

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

## ROOM RENT

**FINCH & STAINES**
1 big bedroom for rent. Sep. washroom, laundry, park, cable. Close to mall, TTC, etc.
2 bedroom bsmt also available.
Home: 416.332.8517 / Cell: 647.289.8780

**MARKHAM & ELLESMERE**
One Room for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.566.1918

**FINCH & BRIDLE TOWN CIR.**
3 அறைகள் கொண்ட Condo. இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. With furniture 1½ washroom. laundry, parking. Avail. immediately. Close to 24hrs bus, mall.
416.697.3042 / 416.494.3042

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent. Sep. washroom, laundry, parking. Close to all facilities. Avail. Anytime. Working ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.292.7552

**MORNINGSIDE & MILITARY DR**
1 Bedroom for rent. Laundry, parking. Close to TTC, mall. Avail. Anytime. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.833.3912

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry avail. Close to Highland Farm, TTC, school, Hopperhut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் விரும்பத்தக்கது.
416.291.6667 / 416.895.8111

**KEEL & FINCH**
Furnished room for students. Close to all facilities. Now available.
**DENISON & MIDDLEFIED**
2 bedroom bsmt for rent.
905.209.9212 / 416.562.5113

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bangalow house. Close to all facilities. ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**KENNEDY & EGLINTON**
1 Bedroom for rent. Close to all facilities. No smoking. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.930.1171

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

## HOUSE FOR RENT

**BRIMLEY & FINCH**
3 + 1 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
**MARKHAM & STEELES**
3 + 1 Bedroom bsmt for rent.
Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.961.5542

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom house for rent. Parking avail. Close to university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.727.6525

**BRIMLEY & EGLINTON**
Newly renovated 3 bedroom house for rent. Laundry, parking. Close to TTC, school, mall. 2 Bedroom bsmt also available with sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.725.2041

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom on the main unit of the house for rent. Laundry, car parking, spacious living & dining room. Quiet neighborhood.
Close to all amenities.
தொடர்புகளுக்கு: 416.291.1752

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.857.8548

**MARKHAM & ELLESMERE**
3 bedroom also available on Main floor. Family preferred. Avail. immediately. தனித்தனியாகவும் அறைகள் கொடுக்கப்படும். 1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
647.857.2629 / 416.439.6009

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom + 2 washroom house for rent. Kitchen, living room உடன் Newly renovated bungalow house வாடகைக்கு உண்டு. Close to TTC, Cedarbrae mall, school, shopping.
647.857.9059 / 416.439.4076

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் ஆனந்தன் 3 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள 2 பரப்பு 2 குளி காணி விற்பனைக்கு உண்டு. கண்டி றோட்டில் மாம்பழம் சந்திக்கும் தபால் கட்டை சந்திப்பிற்கும் இடையில் அமைந்துள்ளன.
416.759.9675 / 647.241.5756

## வீடு காணி விற்பனை

யாழ். வலிகாமம் வடக்கு அளவெட்டியில் தெல்லிப்பழை பண்டைத்தரிப்பு வீதியில் சன சமூக நிலையத்திற்கு எதிரில் சேதமடைந்த வீட்டுடன் கூடிய 6 பரப்பு வீதியோர காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.321.8558

## WANTED

We buy used Toyota Camry, Corolla Civic cars wanted. 1994 - 2000
Only. Any condition.
Steeve - 416.832.1359

## RULAW LEGAL SERVICES

**Indrajith Ratnalingam (Indran Ratnam)** Licensed Paralegal
**Member of Law Society of Upper Canada**
**Tel: 416.754.4LAW (4529)**
**Fax: 416.754.4519**
Email: rulawlegal@gmail.com
5200 Finch Ave. East Suite 300
Scarborough, ON M1S 4Z5

## CLEANING

வயோதிபர்கள் வசிக்கும் வீட்டில் Cleaning செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.783.1300

## MYT Tuition Services

Grade 3 to Grade 12. Friendly & Reliable Service. Only $10/hr.
Math: EQAO Exam Preparation
Science: Home Work Help. English & Tamil
Pl. Call: 905.272.7160

## TUITION

**FINCH & MIDDLEFIELD**
**GTA Squre Unit #230**
**Chemistry, Physics, Math, English, French, Biology**
**Homework Help Kindergarten to Grade 12.**
**Specialist in University experienced teacher. 416.497.7660**
**647.771.6237 / 416.889.3191**

## மணமகள், மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து உயர் குலத்தைச் சார்ந்த ஆண் ஒருவருக்கும் பெண் ஒருவருக்கும் கனடாவில் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.554.4467

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

## JOB JOB JOB

உணவகம் ஒன்றிற்கு Rotti செய்து தருபவர் ஒருவர் வேலைக்கு தேவை. ஆண், பெண் இருபாலாரும் வரவேற்கத்தக்கது.
உணவகம் ஒன்றில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 416.288.0303

Kitchen செய்யும் Factory ஒன்றில் அனுபவமுள்ள Kitchen, Cabinet Makers, Chairs செய்யக்கூடியவர்கள் வேலைக்குத் தேவை. (A - Z அனுபவமுள்ளவர்கள்)
தொடர்புகளுக்கு: 416.830.3932

## TUITION

Pre-school - Grade12 all subjects.
Canada University பட்டதாரி மாணவனால் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.801.9144

## TUTORING

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS.
**Grade 5 - 12**. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: **416.669.3101**

## SAREE BLOUSE

**Pickering**
**அனைத்து தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

## சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

மேலும் பக்கங்கள் 24, 26

## MAPLE YOGA CENTER

### 90 MINUTES YOGA CLASS

- சிறுவர் முதல் பெரியொர்வரை ஆண், பெண் இருபாலாருக்கும் சுகம் பெற, ஆரோக்கியம் அடைய அழகான தோற்றம் பெற.
- சிறுவர்களின் மூளை அபிவிருத்திக்கு உதவும் வகையில் (வேகம், விவேகம், மதிநுட்பம்) அடைய உரிய பயிற்சிகள்.
- உடலும், உள்ளமும் தூய்மை அடைய.
- தீராத வியாதிகளால் அவதிப்படும் சகலருக்கும் யோகாசிகச்சை நிச்சயம் பலன் கொடுக்கம்.



அழையுங்கள்: கந்தசாமி: **905.553.0495 / 416.729.3419**
*27 Treasure Hill Rd, Maple, ON (Keele & Drummond Dr.)*
*5739 Finch Ave. E., Scarborough (Daisy Mart)*



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers — TUTORIAL 280

(1) $f(t) = 3e^{-3t}$   $f^1 t = 3.e^{-3t}$ (-3)   $= -9e^{-3t}$

$= -9e^{-3 \times 1/2}$   = -9.e   = -9 e -3/2

= -2.01g / Year

(2) $y = \ln(e^{-2x+7})$   $y^1 = 1 \times \dfrac{e^{-2x+7}}{e^{-2x+7}} \times (-2)$   = -2

(3) With no restrictions there are $26^k$ words. If Z is excludes there are $25^k$ words. Number of words that contain Z is $26^k - 25^k$.

(4) 3 10 10 - 10 10 10 10 The first digit can be 3, 5 or 6. Therefore 3 choices. Remaining digits can be any on of 10 digits. Hence there are $3 \times 10^6$ seven digit telephone numbers.

(5) Vector PQ = (-1, -2), }2,-3), (5, -5)   = (-3, -1, 0)

Projection of PQ on to X axis (1, 0, 0) is

$\dfrac{(-3, -1, 0).\ (i, 0, 0)\ (i, 0, 0)}{|1, 0, 0|^2}$   $= \dfrac{-3i}{1}$ = -3i

Onto y axis (-3, -1, 0). (0,i,0) (0,g. 0)/ | 0,g, 0|$^2$   = -g

Similary on to Z axis (0, 0, 1)   = 0

Projection of PQ on to x, y and Z axis in (-3i, -g, o)

### Tutorial 281 Questions

(1) If a 10 N force acting in the direction of (1, 1) moves an objects from p(-2, 1) to Q (5, 6) calculate the work done. The distance metres. (For gr. 12)

(2) Find the work done by a force of 30N. Acting in the direction of the vector (-2, 1, 5), which moves an object from A (2, 1, 5) to B(3, -1, 2). The distance in metres. (For Gr. 12)

(3) Find a point where the tangent to y = ln (8x - 1) has a tangent defined by $4x - y + \ln 2^{-3/2} = 0$

(4) Determine dy/dx   (a) $Y = \tan(\cos(x^2)$   (b) $Y = 5^{x^2 + x}$

(5) Determine the equation for the tangent to the curve $Y = \tan^2 x$ at $x = \pi/3$ (For Gr 12)


## MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

**Contact: 647.340.9490 / 647.831.0363**


# இன்னொரு...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

போலைச் சாயலில் இருக்கிறான். இதுகளை வெளியிலை விட்டால் பிரச்சனைதான். போலிசிட்டைத்தான் குடுக்க வேணும்" இனியன் சொல்லி முடிக்கவில்லை, சின்னவன் இடை மறித்தான். அவனது குரலில் இப்போது தெளிவு இருந்தது. முகத்தில் நல்ல கட்டுப்பாட்டுத் தன்மை தொனித்தது.

"போலிஸ் வேண்டாம். அப்படி போலிசுக்கு உங்களால் தகவல் ஏதும் குடுக்க முடியாது. என்னைப் பார் இனியன். என்னைப் பாக்க பைத்தியம் போலையா தெரியுது. நான்தான் இன்பன், அவர்தான் நாகராசண்ணை! உங்களைப் பாத்துக் கதைச்சுப் போட்டுப் போகத்தான் வந்தனாங்கள். எங்களுக்கு உங்கடை ஒண்டும் தேவையில்லை. நீங்கள் பயப்படவும் தேவையில்லை." என்றவன், ஒரு நேர்த்தியான சீருடை அணியாத உயர் அதிகாரியினைப் போல் நின்றான்.

அந்த நிலையில் நின்ற அவனைப் பார்த்த இனியன், இவனையா பைத்தியம் எண்டு சொன்னனான் என நினைத்தான். அவ்வளவுக்கு அவனது தோற்றமும் தோரணையும் இருந்தது.

"நாங்கள் நாகராசு மாமா எண்டுதானே கூப்பிடுவோம். ஆனால் நீ எப்பிடி நாகராசண்ணை எண்டு கூப்பிடுவாய்? இதுவே காட்டுது..." இனியன் முடிக்கவில்லை, சின்னவன் மற்றவனைப் பார்த்துக் கொண்டே சொன்னான்

"புது இடம் புதுச் சூழல். இவ்வளவு காலமும் நாகராசு மாமாவை நான்தான் நாகராசண்ணை எண்டு கூப்பிடத் தொடங்கினனான்"

"உங்களால் நம்பமுடியாது என்று எங்களுக்கு நன்றாகவே தெரியும். இவையெல்லாம் நாங்கள் எதிர்பார்த்தவைதான். அதனால்தான் நாங்கள் அமைதியாகவே இருக்கின்றோம். தம்பி சொன்னது போலவே நான்தான் நாகராசன். அவர் இன்பன். உங்கடை மாமா இராமலிங்கம்தானே! அவனைக் கூப்பிட்டுப் பாருங்கள், ஒருவேளை என்னை அடையாளம் சொல்லுவான்" இருவரும் கூறுவதைக் கேட்ட இனியன் பேசாமல் இருந்துவிட்டு

"இதுகளை எப்பிடி நம்புறது? என்னோடை ஒட்டிப் பிறந்த இனியனுக்கும் என்ரை வயதாகத்தானே இருக்க வேணும். ஆனால் உன்னைப் பாத்தால் இருவத்தைஞ்சு வயதுப் பொடியன் போலை இருக்குது. ஆர் இதை நம்புறது, எப்பிடி நம்புறது?"

"அதுவும் எங்களுக்குத் தெரியும். உங்களாலை மாத்திரமல்ல, ஒருவராலையுமே நம்பமுடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும். விசயத்தைச் சொன்னாலும் விளங்கிக் கொள்ளுவீர்களோ தெரியவில்லை. என்டாலும் சொல்லத்தான் வேணும், சொல்லுகிறோம்.. அதுக்குப் பிறகு வேணுமெண்டால் உங்கடை 911 ஐக் கூப்பிடுங்கோ" சின்னவன் சொல்ல, நாகராசன் தொடர்ந்தான்.

- இன்னமும் வரும்




# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## கல்வி



கல்வி பல செல்வங்களை விட மிக மகத்தானது. கற்காதவர்களால் உலகில் எந்த நன்மையும் செய்ய முடியாது. கற்றவர்களிலும் கற்றவர்களை சரியாக புரிந்து நடக்கும் கற்றவர்களே உண்மையான கற்றவர்கள் ஆவர்.

திருவள்ளுவர் தனது திருக்குறளில் கல்வி என்னும் 40 ஆவது அதிகாரத்திலும் கல்லாமை என்னும் 41 ஆவது அதிகாரத்திலும் கல்வியின் சிறப்பை கூறியுள்ளார்.

கல்வி என்ற அதிகாரத்தில் அவர் சொன்ன கருத்துக்களை படித்து பொருளும் தெரிந்து பயன் பெறுவோம்.

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

கற்க வேண்டிய நூல்களை பிழையில்லாமல் கற்க வேண்டும். அவ்வாறு கற்றபின் கற்றதன் படி வாழ வேண்டும். கற்றதை உலகில் பயன்படுத்த வேண்டும்.

2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
   கண்என்ப வாழும் உயிர்க்கு

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என்றார் ஔவையார். எமக்கு இரு கண்களும் மிக முக்கியமானவை. அதே போல் எண்ணாகிய இலக்கணமும் எழுத்தாகிய இலக்கியமும் எம் இரு கண்கள் போல் போற்றப்பட வேண்டும்.

3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
   புண்ணுடையர் கல்லா தவர்

கற்றவர்களுக்கு மட்டுமே கண்கள் இருக்கின்றன. கற்காதவர்கள் முகத்திலிருப்பவை கண்கள் அல்ல. அவை வெறும் புண்களுக்குச் சமனானவை.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
   அனைத்தே புலவர் தொழில்

கற்றவர்களைக் கண்டு சந்தித்துப் பழகி ஆசையாக பேசிய பிறகு அவர்களைப் பிரிகையில் கவலை வரும்படி இருப்பதே கற்றவர்களுடைய சிறப்பு.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
   அணியல்ல மற்றுப் பிற

பணிவும் இனிமையான பேச்சும் ஒருவரிடம் இருந்தால் அவருக்கு வேறு அணிகலன்கள் தேவையில்லை. கற்றவரகளுக்கு தாழ்மையான குணமும் இனிய பேச்சும் இருக்க வேண்டும்.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
   நாடி இனிய சொலின்

இனிய சொற்களைப் பேசினால் தீமைகள் அழிய நல்லவைகள் நடக்கும்.

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
   பண்பின் தலைபிரியாச் சொல்

இனிய சொற்கள் நன்மையைத் தந்து எல்லா உதவிகளையும் செய்யும்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
   இம்மையும் இன்பம் தரும்

கெட்டது தவிர்ந்த இனிய சொல் இந்த பிறப்பில் மட்டுமன்றி மறுபிறப்பிலும் இன்பம் தரும்.



திவ்யா பிரபாகரன்
அகவை 11


## TUTORING BUSINESS FOR SALE

*WELL ESTABLISHED FRANCHISE & NON FRANCHISE.*
*AJAX ON*

1000 sq. ft. Rent: $1550.00 (including TMI), Income $4200.00 Royalty $800.00 40 Students, 25 Tutoring students, 5 Teacher JK to Grade 12 Subjects includes, Math, English, Calculus, Physics, Chemistry, French, and Business courses
Net Net Net $2500.00
Franchise fee $5000.00
GREAT LOCATION & REASONABLE RENT.
Fast Growing new subdivisions and communities. GREAT GROWTH POTENTIAL.
*please call Karuna 416.830.8520*

## GOODWILL WOODWORKS
Custom Wood Working Home Reovation & Upgrading

- Custom Stair Case
- Flooring
- Painting
- Tiles Works
- Back Splash
- Kitchen, Bathroom
- Bsmt Reno

Compatible Price & High Quality Works

Call us for Free Estimate 10% OFF


Office: 416.292.1975
Fax: 416.335.1975
E-mail: info@goodwillworks.com

## HOUSE + LAND SALE IN JAFFNA

Location: 2nd Cross Street, Jaffna
2½ பரப்பு காணி கிணற்றுடன் வீடு விற்பனைக்கு உண்டு. 2 1/2 Parappu Land including the house and the well. 5 Min. Walk to Subramaniyam Park, Courts, Jaffna Public Library, Central College, Vembadi Girls High School etc. 15 Min. Walk to Jaffa Hospital/ Town
Closer to A9 (Kandy - Jaffna) Highway
***Contact : 416-580-0606***

## YOGA - MEDITATION CLASSLESS
## யோகா, தியான வகுப்பு

***Scarborough*** இல் யோகா தியான வகுப்பு பட்டறைகளுடன் நடைபெறுகின்றது.
ஆர்வமுடையவர்கள் தொடர்புகொள்ளவும்:
**416.273.2200**



## RESTAURANT FOR SALE

Brand New Bar & Grill restaurant for sale.
Over 30 seats. LLBO. ***MIDDLEFIELD & FINCH***
For more info. call: 416.677.4707

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# "உலக வரலாறும் மனித விடுதலையும்"

## தத்துவாசிரியர் 'ஹெகல்' - 2

ஒன்று கட்டவிழ்ந்து, சிதைந்து உருமாறிப் புத்தெழுச்சி பெற்று இன்னொன்று உருவாகும் வேளையில் அவ்வாறான சிதைவு ஒன்று நிகழ்ந்தமையினாலேதான் இன்னொன்று தோற்றம் பெறுகின்றது. எனவே ஒரு கருத்துருவாக்கம் தோன்றி அதனை மறுதலித்து இன்னொரு கருத்துருவாக்கமாக மாற்றமடைந்து அதற்குமெதிராக வேறுபட்ட இன்னொரு கருத்தியல் உருவாகி இப்படி எதிர்மறை, எதிர்மறையின் எதிர்மறையாக தொடர்சங்கிலியாக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இதனையே முரணியக்கம் என்று கூறுகின்றோம். இவ்வாறு முற்றுப்பெறாத முரணியக்கம் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் அவற்றின் சாராம்சப் பண்புகளின் கூறுகள் பிணைந்தும், விலக்கமுற்றும் பயணங்களை நிகழ்த்தும். 'கெஹலின்' இந்த முரணியக்கக் கருத்தியலை 'அன்ரன் பாலசிங்கம்' இவ்வாறு கூறுவார். 'விதையானது சிதைவு பெற்றபோதும் அதிலுள்ள சாராம்சப் பண்புகள் மரமாகி, மீண்டும் விதையாகித் தொடர்ச்சியான ஒரு வளர்ச்சிப் போக்கில் கட்டவிழ்ந்து செல்கிறது' என, 'கெஹல்' வாதிக்கும் இயங்கியல் என்ற தர்க்கத்தில் இல்லாமை, உண்டாகுதல் ஆகிய இரு சொல்லாடல்கள் இடம்பெறும். இல்லாமை என்பது முரணியக்கமாகவும், உண்டாகுதல் என்பதில் கூட்டுக் கருத்தியல் தோற்றம் பெற்றுத் தீர்வை முன்வைப்பதாகவும் சொல்லப்படுகின்றது. இங்கு இயங்கியல் என்ற கருத்தியலுக்கான அடிப்படை மனத்தி லிருந்தே தோற்றம் பெறுகின்றது என்பதுதான் 'ஹெகல்' முன் வைக்கும் வாதம்.

மனித உள்ளத்திலிருந்து புறப்படும் கருத்துக்கள்தான் வெளியுலகத்தை ஆட்சி புரிய முயற்சிக்கின்றன. புற உலக நடைமுறைகளையும், பொருள் சார்ந்த உலகத்தையும் இந்தக் கருத்துக்கள்தான் தீர்மானிக்கின்றன. எனவே மனம் எல்லாவற்றுக்குமான மூலகாரணியாக விளங்குகின்றது. இங்கு மனமானது விசாலமானதாக, பிரபஞ்சம் எங்கெணும் வியாபித்து அனைத்துமாக ஆனந்தநடனம் புரிகின்றது. ஆன்மாவாக உள்ளார்ந்து கிளர்ந்தெழும் உலகப்பேர் உருவாக அனைத்தையும் அடக்கி நிற்கின்றது.

இயங்கியல் சுழற்சியில் முரணியக்க வீச்சில் பிரபஞ்சத்தைத் தழுவி நிற்கும் மனமானது அண்ட சராசரமனைத்தையும் இயங்குதலுக்கு உள்ளாக்குகின்றது. அதுவே படைத்துக், காத்து, அழித்து அனைத்துச் செயற்பாடு களுக்கூடாக உச்சநிலை நோக்கிய பயணத்தை நிகழ்த்துகின்றது. இங்கு முரணியக்கம் மூலம் மனித சிந்தனை பன்முகப்பட்ட பரிணாம இயங்குதலுக்குள் ளால் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றது.

பூமியிலே வரலாற்றை எழுதுகின்ற இந்த இயங்குதலை வார்த்தெடுக்கின்ற மனமானது பல்வேறு பண்பாட்டுக் கோலங்களை, நாகரிக ங்களை, மதங்களை, சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றன என்று 'கெஹல்' கூறுவார். வெவ்வேறுபட்ட நாகரிகங்களும், ஆட்சிகளும் வெவ்வேறு துறைகளின் உச்சங்களுக்குச் செல்லலாம். அவை தங்கள் அளவில் உன்னத வளர்ச்சியை



அடைந்து அழியும் போது அதன் சாராம்சங்களை அடிப்படைகளாய் வைத்தே அடுத்த வரலாற்றுக்கட்ட வளர்ச்சிக்கான பெரும் பயணம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த வரலாற்று முன்னெடுப்பிலே மானுட உணர்வோட்டமானது கூட்டுப் பிரக்ஞையின் அடிப்படையிலான அசைவியக்கத்தை நிகழ்த்தும் பொருட்டு முரண்களையும், தடை களையும் விடுவித்து இலட்சியத்தளத்தை நோக்கிய பாதையில் முன்னகர்ந்து செல்வதைக் 'கெஹலின்' கருத்து முதல் வாதத்தில் நாம் நோக்க முடியும்.


'கெஹலைப்' பொறுத்தவரை உலக வரலாற்றின் போக்கில் முக்கியமான திருப்புமுனைகளில் தோன்றிப் புதிய சகாப்தங்களைத் துவக்கி வைக்கின்ற மாமனிதர்களில் ஒருவரே ஏசுநாதர். கடவுளும் மனிதனும் ஒன்றுதான் என்ற பேருண்மையை உணர்ந்தவர் ஏசுநாதர். உயர்வகைத் தர்க்க சாத்திரத்தின் தூய வடிவத்தின் உதவி கொண்டு, வரலாற்றின் போக்கில் ஒரு காலகட்டத்தில் மனிதச் சிந்தனையில், 'தேவமனிதன்' என்ற கருத்து கட்டாயமாக எழுகின்றதென நிரூபிக்க முடியும் என்றும் இக்காலகட்டம் கிறீஸ்துவத்தின் தோற்றத்துடன் பொருந்துவதாக இருக்கிறது என்றும் 'கெஹல்' கருதினார். ஒவ்வொரு பெருந்தத்துவமும் அது தோன்றும் சகாப்தத்தின் பிரக்ஞையாகும் என்று குறிப்பிட்ட 'கெ ஹல்' தம் காலத்துக்கு முன் தோன்றிய பெரும் தத்துவங்களை முற்றிலும் நிராகரிப்பது தவறு என்றும் அவை தோன்றிய காலகட்டங்களைக் கொண்டு அவற்றை நியாயப்படுத்த வேண்டும் என்றும் கருதினார். (எஸ்.வி.ராஜதுரை எழுதிய சிந்திக்கும் நாணல், பக்-14)

மனிதர்கள் தங்களைப் பிணைத்திருந்த சங்கிலிகளை அறுப்பதற்காகக் காலமெலாம் போராடுவதை நாம் அவதானிக்கின்றோம். புரட்சிகள் தோன்றி மன்னராட்சி வீழ்ந்து மடிவதை கண்டிருக்கின்றது இந்த உலகம். சர்வாதிகாரிகள் முறியடிக்கப்பட்டு மக்களாட்சி முறை உருவான வரலாறுகளை அறிந்தவர்களும், நேரில் பார்த்துக் கொண்டவர்களும் நாங்கள். அங்கெல்லாம் ஒன்றின் சமாதியிலே அதைவிட நவீனமான இன்னொன்று தோற்றம் பெற்ற அனுபவங் களையும், ஆதாரங்களையும், சான்றுகளை யும் ஆதாரமாக வைத்துக் கொண்டு கருத்து முதல் வாதமாக எழுந்த இயங்கியலை நிறுவுவதிலே 'கெஹல்' முனைந்தார்.

'கெஹலின்' நோக்கில் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த நிறுவனமாக 'அரசு' என்ற சொல்லாடல் வரைவிலக் கணத்துக்கு உட்படுத்தப்படும். மனிதர்களின் கருத்துக்கள் சமூகக் கருத்தியலாக மாற்றமுற்று நடைமுறை வடிவம் கொள்ளும் ஒன்றியமே 'அரசு' என்பது 'ஹெகல்' முன்வைக்கும் கருத்து. 'கெஹல்' அர்த்தப்படுத்த விழையும் 'அரசிலே' மனிதன் சுயநலத்தைத் துறந்து அரசின் ஆதிபத்தியத்திற்குக் கட்டுப்பட வேண்டும். 'அரசு' என்பது தேசத்தின் உள்ளார்ந்த ஆன்மா. அந்த ஆன்மாவின் அரவணைப்பிலே மனிதன் தன் முழுமையைக் கண்டடைதல் சாத்தியமென்று உரைத்தார் 'கெஹல்'. வரலாற்றுக் காலம் தொட்டு மனிதன் காலம் காலமாகத் தன்னை விடுவித்துக் கொள்வதற்காகவே தனது பயணத்தை நிகழ்த்திய வண்ணம் உள்ளான். அந்தப் போராட்ட களங்கள் அனைத்தும் குருதி வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்ட சேற்று நிலங்களாகவே காட்சியளித்தன. சாம்பர் மேடுகளும் அவையிடையே தோன்றிய குறுக்கீடுகள் என நாம் அறிவோம். புதைகுழிகளில் அடுக்கப்பட்டிருந்த நிர்வாணமாக்கப்பட்ட மனித உடல்கள் அதன் கொடூரங்களைப் பறைசாற்றின. ஆனால் இவ்வாறான போராட்டப் பயணம் முடிவில் நவீன அரச உருவாக்குவதுடன் தனது வரலாற்றுப் பாதையை நிறைவு செய்து கொள்கிறது. 'ஹெகல்' வரலாற்று இயங்கியல் என்ற சித்தாந்தத்தின் ஊடாக தனது முடிவிடமாக, இறுதித் தரிப்பிடமாக, யாத்திரையின் முற்றுப்புள்ளியாக வரித்திருந்த அரச உருவாக்கம் மக்களின் தேடலைத் திருப்திப்படுத்தி முற்றாக முடக்கம் கொள்ள வைத்ததா என்ற கேள்வி எழுகின்றது.

இங்குதான் அன்ரன் பாலசிங்கம் 'உலக வரலாறும் மனித விடுதலையும்' என்ற தனது கட்டுரையில் கீழ்கண்டவாறு கேள்விகளை எழுப்புகின்றார்.

'அரச நிறுவனத்திற்கு 'கெஹல்' எதற்காக முக்கியத்துவம் கொடுத்தார்? தனது முதுமைக்காலத் தத்துவ எழுத்துக்களில் அரசின் உன்னதம் பற்றி அவர் போதித்தது ஏன்? உலக வரலாற்று இயக்கத்தை அன்றைய ஜேர்மனிய சர்வாதிகார அரசுக்கு அடிபணிய வைத்ததன் காரணம் என்ன? பிரெஞ்சுப் புரட்சியால் எழுந்த சுதந்திரத் தீ ஜேர்மானிய ஆளும் வர்க்கத்திற்குச் சவாலா க எழுந்த பொழுது 'கெஹலின்' தத்துவம் அன்றைய சர்வாதிகார அரசை நியாயப்படுத்த முனைந்தது என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அன்றைய



ஜேர்மானிய அரசும் மக்கள் சமூகமும் முரண்பட்டு நின்றபொழுது, தனி மனித சுதந்திரங்களை அரசு மிதிக்கும் பொழுது, மனிதரிடையே சமத்துவம் நிலவாத பொழுது, அரசின் மகத்துவம் பற்றி அவர் எழுதியது ஜேர்மானிய இளம் புரட்சியாளர்களை சீற்றம் கொள்ளச் செய்தது. இந்த இளம் புரட்சியாளர்களில் முக்கிய சிந்தனை யாளராக விளங்கியவர் 'கார்ள் மார்க்ஸ்'. நவீன அரசின் தோற்றப்பாட்டுடன் மனித வரலாற்று இயக்கம் நிறைவு காண்கிறது என்ற 'கெஹலின்' கருத்தை 'கார்ள் மார்க்ஸ்' நிராகரித்தார்.'

'அன்றைய ஜேர்மானிய அரசு ஒரு முதலாளிய சர்வாதிகார அரசு. அந்த அரசில் ஒரு அடிப்படையான முரண்பாடு நிலவியது. அதாவது, முதலாளிய ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் மத்தியில் முரண்பாடு நிலவியது. வர்க்க முரண்பாடுகள் நிலவும் வரை சமத்துவமும், சுதந்திரமும் தோன்றாது. முரண்பாட்டினால் எழும் வர்க்கப் போராட்டமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஆகவே, வர்க்க முரண்பாடு நீங்கிய, சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் பொதுவுடைமைச் சமுதாயத்தில்தான் மனித வரலாறு பூரணத்துவம் பெறும் என்பது கார்ள் மார்க்ஸின் தத்துவம். (விடுதலை, பக்-118).
(இன்னும் வரும்)



நடராஜா முரளிதரன்

LOYAL PEST CONTROL
COMMERCIAL PROTECTION PROGRAMME
• Cockroaches • Bedbugs • Spiders • Mice • Carpener Ants
• Raccoon • Squirrel • Wasps • Fleas • Flies Etc.
Ranjan (Muru)
Insured / Licensed / Experienced Service Technician
416.464.2415/ loyalpestcontrol@hotmail.com


# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 4 பகுதி 18**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

**பகுதி 3 - கனடாவில் இனியன்**

◊ **சி.வி. நாதன்** ◊

"இது......நீங்கள்.... திலகமக்காதானே" குரல் வந்த திசையை நோக்கிப் பார்த்தாள் திலகம். புருவங்களைச் சுருக்கிப் பார்த்தவள், "டேய்! நீ நாகராசன்தானே! எத்தனை சென்மம் எடுத்தாலும் உன்ரை குரலை மறக்க மாட்டேன்ரா! எங்கையடா என்ரை மகன்? என்னடா செய்தனி என்ரை பிள்ளையை?..." அடுக்கடுக்காய் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே குரல் வந்த திசையில் ஆவேசமாகத் தட்டுத் தடவிக் கொண்டு போனாள், திலகம்.

தாயாரின் ஆவேசத்தையும் பதட்டத்தையும் கண்ட இனியன், ஆச்சரியப்பட்டான். ஆனாலும் உடனே ஓடி வந்து தாயாரைப் பிடித்துக் கொண்டான்.

"அம்மா அவசரப்படாதை யுங்கோ! கொஞ்சம் பொறுங்கோ"

"பொறுக்கிறதோ! உவன்ரை குரலைக் கொண்டே சொல்லுவேன் உவன் ஆரெண்டு. சொந்தச் சகோதரம் போலை எல்லே நடத்தினனான். எனக்குத் துரோகம் செய்து என்ரை பிள்ளையை,... பச்சைப் பிள்ளையை.. டேய் எங்கையடா என்ரை பிள்ளை? உவன்தான்ரா என்ரை பிள்ளையை, உன்ரை சகோதரனை என்னட்டை இருந்து பிரிச்சவன். உவனை, உவனை.." கோபத்துடன் கத்திக் கொண்டு திமிறும் தாயாரைச் கட்டுப்படுத்முடியாமல் தடுமாறினான் இனியன்.

ரேவதியும் ஓடிவந்து மாமி யாரைப் பிடித்துக் கொண்டு "மாமி ஒரே சிக்கலாய் இருக்குது. கொஞ்சம் அமைதியாய் இருங்கோ மாமி" கணவனுடன் சேர்ந்து திலகத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு இருந்தாள்.

"இல்லைப் பிள்ளை, உனக்குத் தெரியாது. உந்தப் பரதேசியை எப்பிடி நம்பி என்ரை பிள்ளையைக் குடுத்தனான். உவனுக்கு என்ன குறை விட்டனான்? என்ரை பெத்த வயிறு பட்டபாடு உனக்குத் தெரியாது பிள்ளை. இப்பதான் அம்பிட்டு இருக்கிறான். உவனை சும்மா விடப்பிடாது" இன்னமும் என்னென்னவோ சொல்லிக் கொண்டு பெரியவன் நிற்கும் திசையை நோக்கிப் போக திலகம் எத்தனித்துக் கொண்டு இருந்தாள். இதே நேரத்தில் சின்னவன் மற்றவனைப் பார்க்க, அவனும் ஆம் என்பது போலத் தலையசைக்க, தாயைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்த இனியன் இதனைக் கண்டு கொண்டான். "அம்மா, நான் இன்பன் வந்திருக்கிறேன் அம்மா" என்ற சின்னவன், இருக்கையில் இருந்து மெதுவாக எழுந்து திலகத்தை நோக்கி வர,

"டேய்! அங்கையே நில்லு! கிட்ட வராதை. கொலைதான் விழும்" அவன் அவசரப்படவில்லை. வெகு நிதானமாக இருந்தான். திலகம் அடங்கிவிட்டாள்

"என்ரை பிள்ளை வந்திருக்கிறானா? எங்கை, எங்கை! கிட்ட வா மகனே, அம்மாவுக்கு கண் தெரியாதடா," மகனைப் பார்க்க, அணைக்கத் தவிக்கும் தாயின் தவிப்பு, திலகத்தின் நிலையை இப்ப பார்க்க, பரிதாபமாக இருந்தது.

"அம்மா அவசரப்படாதை யுங்கோ. நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்கோ" என்ற இனியன் தொடர்ந்தான்.

"அம்மா இஞ்சை ரண்டு விசருகள் வந்திருக்குதுகள். ஒருவனுக்கு 25 அல்லது 30 வயதிருக்கும். தன்னை இன்பன் எண்டு சொல்லுறான். மற்றவனுக்கு 50 வயதுதான் இருக்கும். தன்னை நாகராசுமாமா எண்டு சொல்லுறான். எனக்கு இப்ப 25 வயசா? மாமாவுக்கு என்ன 50 வயசா?"

"அப்ப என்ரை பிள்ளை இல்லையா? என்னை அம்மா எண்டு கூப்பிட்டது ஆர் தம்பி?" திலகத்திற்கு குழப்பமாக இருந்தது.

"அம்மா! நான் இன்பன்தான் வந்திருக்கிறேன். என்னோடை நாகராசண்ணையும் வந்திருக்கிறார்." சின்னவன் மீண்டும் கூறினான்.

"அம்மா இதுகள் ரண்டும் நல்ல லூசுகள் போலை இருக்குது. ஆனாலும் அந்தச் சின்னவன் என்ரை பிள்ளையைப்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

**Tel: 647-707-8671 / 416-829-4004**

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi, English, Telugu & Other indian languages

# பழங்களின் பலாபலன்கள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

### அன்னாசிப்பழம்

இதன் சுவையை பார்க்கும்போது இனிப்புடன் கூடிய புளிப்பாகும். உஸ்ண வீரியம் கொண்டது. இதன் வீரியச் செயல்திறனால் பல வியாதிகளைத் தணியச் செய்யும்.



சுண்ணாம்புச்சத்து, உயிர்ச்சத்து A,B,C என்பனவும் செறிந்து காணப்படுகின்றன. மலத்துடன் வெளியேறும் உட்கிருமிகளை அழிக்கும் தன்மை உடையது. எலும்பு, பற்கள் வலுவடைய இரும்புச்சத்தும் காணப்படுகின்றது. எனவே சாப்பாட்டிற்குப் பின் இப்பழத்தை எடுத்து தேன் சேர்த்துப் உண்பது மிக நன்றாகும். இதனால் நமது உடல் வலுப்பெற்று நோயற்று வாழமுடியும். முத்தாது எனக்கூறப்படும் வாத, பித்த, கபம் என்பவற்றில் பித்ததோஷ ஆக்கிரமத்தைக்கட்டுப்படுத்தும். இப்பழம் சிலருக்கு ஒத்துவராத தன்மையையும் காட்டும். இந்நிலையில் தேகத்தில் கடி, சொறி, ஒருவித தடிப்பான தழும்புகள் தென்படுவதைக் காணமுடியும். நிலைமையை நன்கு கவனித்து தவிர்த்துக் கொள்வது நன்று. உள் உறுப்புகளின் மென்சவ்வுகளிலும் தடிப்புத்தன்மை ஏற்பட்டு செயல் தன்மைக்குத் தடையாக இருக்கும். எதற்கும் கவனிப்பு முக்கியம்.



### அப்பிள் பழம்

இதில் இனிப்பு, புளிப்பு சுவைகள் செறிந்து காணப்படுகின்றன. நார்ச்சத்துள்ள பழமாகும். இதன் தோலை அகற்றாமல் உண்பது சாலச்சிறந்தது. நரம்புத்தளர்ச்சி ஏற்படாது பாதுகாக்கும். உயிர்ச்சத்து A,B,C நிறைந்துள்ளது. நீரிழிவு ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்களும் பாவிக்க முடியும். உடல்சோர்வு அற்றவர்களாக வாழமுடியும். அப்பிள் துண்டுடன் தேன்கூட்டிப் பாவிப்பதினால் உடல்நிலை, இருதயம், சுவாசப்பை போன்ற உறுப்புக்கள் வலுப்பெற்று தங்கள் வேலைகளை நல்லமுறையில் இயங்கச் செய்யும்.

இப்பழத்தில் பொஸ்பரஸ் இரண்டறக் கலந்து காணப்படுவதினால் மூளை யின் உறுப்புக்களை நன்கு பலம் அடையச்செய்து மூளைக்கோளாறுகள் ஏற்படாது பாதுகாக்கும் வீரியம் உண்டு. புளிச்சுவையான பழத்தை எடுத்துப் பச்சடி (சம்பல்) பாகம் செய்து உணவுடன் சேர்த்து உண்ண விருப்பத்தைக் கொடுக்கும். இரவு வேளையில் துயில் கொள்வதற்கு கஸ்டங்கள் ஏற்படும் நிலையில் புளியற்ற பழமாக எடுத்து காய்ச்சிய பாலில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் குறைபாடு நீங்கும். வாய்நாற்றம், நரம்புத்தளர்ச்சியற்று அழகுடன் மேனி (சருமம்) துலங்குவதைக் காணமுடியும். இதன் பழரசங்களும் குடித்து வந்தால் எந்நேரமும் ஆரோக்கியமாக வாழமுடியும். எனவே அவரவர் உடல்நிலையை நன்கு கவனித்து காலநிலையையும் பகுத்தறிந்து பாவித்துவருதல் எமது கடமையாகும்.

### பேரீச்சம்பழம்

இது உடலுக்கு வலுவைக் கொடுக்கக்கூடியது. இனிப்புச் சுவையை உடையது. தேக உஸ்ணத்தை தணிக்கக் கூடியது. பலத்தைக் கொடுக்கக்கூடியது. இதனிடையே இரும்புச்சத்து, உயிர்ச்சத்து 'A' செறிந்து காணப்படுகின்றன. இதன் வீரியத் தன்மையால் உடலுக்கு ஊட்டச்சத்து கொடுத்து உடம்பை வலுப்படுத்தும். அத்துடன் தாதுவிருத்தியுடன் ஆண்மை தன்மை அதிகரிக்க செய்யும். இப்பழத்தைப் பாவிக்கும் போது தரமுள்ள பசுப்பாலைப் பாவிப்பதினால் நற்பயன் பெற முடியும். மதுமேகம் உள்ள ரோகிகள் இதனைப் பாவிப்பதினால் இரதத்தத்தில் உள்ள சக்கரைத் தன்மையை குறைத்துக்காட்ட வல்லது. இப்பழத்தில் இனிப்புச் சுவையாக இருப்பது பெரும்பாலும் சுத்தமான தேன்விட்டு பதப்படுத்தி இருப்பதேயாகும் என்பதையும் அறிய முடிகின்றது. மார்புவலி, சலரோகம் உள்ளோர் சாப்பிட்டு வந்தால் குணம் கிடைக்கும். தாகம், சளி, இருமல் காணப்படின் இதனைப்பால் இட்டுக்காய்ச்சி, குடித்து வர யாவும் நிவர்த்தியாகும். மேலும் பேரீச்சம்பழம் தேன்விட்டு பதப்படுத்தி இருந்தாலும் நன்கு துப்பரவு செய்து மீண்டும் நல்ல தேன் இட்டு பதப்படுத்தி பாவிப்பதினால் தீங்கின்றி சுகநிலை அடையமுடியும்.

சில பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் இடுப்பு, முதுகுவலி போன்றவை ஏற்படுவதுண்டு. எனவே மாதவிடாய் வருவதற்கு முன்கிழமை இப்பழத்தைத் தேனுடன் உண்டு வந்தால் வலித் தன்மை படிந்து விடும். இப்படி இயல்பானவர்கள் நாளாந்தம் சாப்பாட்டிற்குப் பின் 2, 3, பழங்களை எடுத்துச்சாப்பிட்டு வரலாம். பாலும் சேர்த்து பருகுவது மிக நன்று.

### மாம்பழம்

முக்கனிகளில் முதலிடம் வகிப்பது மாம்பழமாகும். இப்பழத்தில் பல இனங்கள் உண்டு. சுவையில் இனிப்பு, புளிப்பு, புளிப்புடன் இனிப்பு கொண்டவையாகும். குளிர்ச்சியை உண்டாக்கும். பழத்தில்



சத்துள்ள வர்க்கங்களில் இதுவும் அடங்கும். இதனகத்தே உயிர்ச்சத்து A அதிகரிப்புடன் B, C யும் இரண்டறக் கலந்துள்ளன. மேலும் சுண்ணாம்புச்சத்து இரும்புச்சத்து காணப்படுவதினால் இரத்த விருத்தி, எலும்பு வளர்ச்சி என்பவற்றை உருவாக்கும் இயல்பு படைத்தது. இப்பழத்தின் வீரியத்தன்மையினால் நெஞ்செரிவு, கண்வியாதி, கரப்பான், சிரங்கு போன்றவற்றை குணமாக்கும் தன்மையுடையது. சருமத்தில் ஏற்படும் சுருக்க நிலையை மாற்றி மினுமினுப்புடன் அழகான தோற்றத்தைக் கொடுக்கும். இதன் பழச்சாறு சிறுநீர் பகுதியில் ஏற்படும் கற்களைக் கரைக்கும் தன்மையுடையது என அறிய முடிகின்றது. தசைப்பெருக்கத்தைக் கொடுத்து தோற்றம் உள்ளவர்களைக் காட்டும். வயிற்று வீக்கம் (மகோதரம்) உடையோர் காலநிலைக்கு ஏற்ப தங்கள் உடல் நிலையையும் கவனித்து பாவித்து வந்தால் நாளடைவில் மகோதரநிலை அகன்று விடும்.

மாம்பழம் + வாழைப்பழம் + பேரீச்சம் பழம் ஆகிய மூன்றையும் துப்பரவு செய்து பாக முறைப்படி தேன்+கற்கண்டு கூட்டிப்பாவித்து வந்தால் உடல்வலுப்பெற்று நரம்புகள் தளர்வுகள் இன்றி உள்ளம் மகிழ்வுடன் வாழமுடியும். மலபந்தம் ஏற்படாவண்ணம் செயல்திறன் காட்டும். கண்களுக்கு குளிர்ச்சியை கொடுத்து பற்களையும் வலுப்பெறச் செய்து முகத்தின் அழகையும் மிளிரச் செய்யும். தாது விருத்தியையும், போக இச்சையையும் பெற விரும்பின் மாம்பழத்தை நன்கு பிசைந்து தேன்+குங்குமப்பூ+ஏலப்பொடி கூட்டிப்பாவித்து பால்பருகி வந்தால் அதன் பயனை நன்கு அறியமுடியும். குடலில் உள்ள தொற்றுக்கிருமிகளையும் அழிக்கும் இயல்புடையது.

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909




Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.

Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# நமது வாழ்நாளில்...

**20ஆம் பக்கத்தொடர்ச்சி** பார்க்கும் நேரத்தில் வேறு பல வேலைகளை இப்போது செய்கிறார்கள். Cable தொலைக்காட்சியின் விலை அதிகமாகிறது. தொலைக்காட்சியில் விளம்பரங்கள் 4½ நிமிடத்திற்கு ஒன்றாக வருகின்றன. தற்போது மக்கள் தாங்கள் விரும்பியதை, விரும்பிய நேரத்தில் கணினியில் பார்ப்பதால், தொலைக்காட்சிப் பெட்டியின் உபயோகம் அழிந்துவிடும்.

8. **எங்களுக்கு சொந்தமான மின்பொருட்கள்** : எமது மின் பொருட்கள் எமக்கு




சொந்தமாக இருக்கும். ஆனால், அவை இப்பொழுது, எங்களுடைய கணினியில் ஒரு Hard Drive இல் உண்டு. அதில் Documents, படங்கள் திரைப்படங்கள், பாட்டுகள் ஆகியன சேமிக்கப்பட்டு இருக்கும். மென்பொருட்கள் (Software), இறுவட்டு (CD), DVD இல் இருக்கும். தேவை என்றால், Reinstall பண்ணலாம். ஆனால் இனி Apple, Microsoft, Google என்பன முகில் சேவைகளை (Cloud services) செய்கிறார்கள். முகில் சேவை என்றால் எல்லா கோப்புக்களும் மின்வலையில் இருக்கும் ஒரு 'மின்வலை முகில்' (Internet Cloud) இல் சேமிக்கப்பட்டிருக்கும். நீங்கள் ஏதாவது Save பண்ணி இருந்தால் அதுவும் மின்வலை முகிலில் சேமிக்கப்படும். இதில் உங்களுடைய கோப்புகளை எந்த இடத்திலும், எந்த மின் உபகரணத்திலும் (Laptop, Handheld) பார்க்கலாம்.




ஆயினும் இந்த மின்பொருட்கள் உங்களுடையதா? எல்லாம் திடீரென்று அழியலாமா? எமது மின்பொருட்கள் எல்லாம் பொய்யாக, அழியக்கூடியதாக இருக்குமா?

9. **தனி மனித இரகசியம்** : தனி மனித இரகசியம் பலகாலமாக குறைந்து வருகிறது. நடக்கும் வழியில், கட்டிடங்களில், கணினிகளில், தொலைபேசிகளில் படம் எடுக்கும் கருவிகள் உண்டு. எந்த நேரமும் உங்களுடைய இருப்பிடம் GPS coordinates உம், Google street view உம் அவர்களுக்கு தெரியும். ஒரு பொருள் வேண்டினால் அது விளம்பரதாரர்களுக்கு தெரியவரும். அவர்களுக்கு உங்கள் பழக்கங்கள் தெரியவந்துவிடும். அவர்கள் உங்களை மீண்டும், மீண்டும் வேறு பொருளை வாங்கத் தூண்டுவார்கள்.

விளம்பரம்
பத்திரிகையை
இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு
www.vlambaram.com

HOMELIFE/GTA Realty Inc., Brokerage*



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"
Buy. Sell. Invest



Celebration
CONDOMINIUMS AT BRIDLEWOOD MALL
With convenience of living steps to
**Bridlewood Mall, TTC**
at your door step to, **Celebration** is the place to be.

REGISTER TODAY FOR
VIP PRICING AND MORE...

1 BED, 1+DEN
2 BEDS, 2+DEN
AND 3 BEDS

**Starting from $185,900 with parking**
**call us for more details.**

MORE LISTING @WWW.SIVAHOMES.COM


1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3 Bus:(416)321-6969
*Independently Owned and Operated
*Some Conditions Apply
This is not intended to solicit properties currently listed for sale.

# தேசிய விருதுகள் மற்றும் பலேரி மாணிக்கம்

## தூறல்

**வானரன்**

2010ம் ஆண்டிற்கான இந்திய தேசிய விருதுகளில் 16 விருதுகள் தமிழ்ப்படங்களுக்கு கிடைத்துள்ளன என்பது மகிழ்ச்சியான செய்தியே. கடந்த பல ஆண்டுகளாக வங்காள, மலையாள பட உலகம் ஆக்கிரமித்துக் கொண்ட இவ் விருதுகள் இம் முறை தமிழுக்கு அதிகமாக கிடைத்துள்ளன. ஆனால் சிறந்த பட விருது மலையாளப் படமான Adaminte Makan



Abu. இப்படத்தை இயக்கியிருப்பவர் சலீம் அகமட். கடந்த வருடமும் குட்டி ஸ்ரங் என்ற மலையாளப்படத்துக்கே சிறந்த பட விருது கிடைத்தது. சாஜி என் கருண் இயக்கத்தில் இப்படம் வெளிவந்திருந்தது. சாஜி என் கருண் பிறவி என்ற படத்தை இயக்கியமைக்காக 1989 கான்ஸ் திரைப்பட விழாவில் தங்க கமாரா சிறப்பு விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை தமிழுக்கு இரு படங்களுக்கே கிடைத்துள்ளன. முதலாவது விருது கே.எஸ்.சேதுமாதவனின் இயக்கத்தில் வெளிவந்த மறுபக்கம் (1991) பின்னர் 2009ல் பிரியதர்சனின் இயக்கத்தில் வெளிவந்த காஞ்சிவரம் ஆகிய படங்களே சிறந்த பட விருதைப் பெற்ற படங்கள். இவ் விருவரும் மலையாள மண்ணைச் சேர்ந்தவர்கள். கே.எஸ்.சேதுமாதவன் சிங்களப்படம் ஒன்றை இயக்கியே திரையுலகில் காலடி எடுத்து வைத்தார். (Veeravijaya) பின்னாட்களில் எம்.ஜி.ஆரின் நாளை நமதே படத்தையும் இயக்கியிருந்தார். ஒஸ்காருக்கு இந்தியாவில் இருந்து அனுப்பப்படும் படங்கள் இந்திய சிறந்த பட விருதைப் பெறுவதில்லை. ஏன்? விதிவிலக்காக ஒரு சில படங்கள் உள்ளன. ஒஸ்காருக்கு ஜீன்ஸ், குரு, இந்தியன் போன்ற படங்களும் அனுப்பப்பட்டன. தேர்வின் மிக மோசமான நிலையையே காட்டுகின்றது. 2010ல் ரொறொன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு பல விமர்சகர்களின் கவனத்தையீர்த்த டோபி கட் உட்பட்ட பல படங்கள் தேர்வுக் குழுவால் நிராகரிக்கப்பட்டது ஆச்சரியமானது.

சிறந்த நடிகர் விருதை தனுஷ், மலையாள நடிகர் சலீம் குமாருடன் இணைந்து பெற்றுள்ளார். பிரகாஸ்ராஜ், விக்ரம், கமலஹாசன், எம்.ஜி.ஆர் ஆகியோர் இதுவரை தமிழ்ப்படங்களில் நடித்தமைக்காக சிறந்த நடிகர் விருதைப் பெற்றுள்ளனர். சிறந்த நடிகை விருதை சரண்யா Mitalee Jagtap Varadkar மராத்திய நடிகையுடன் இணைந்து பெறுகின்றார். பிரியாமணி, அர்ச்சனா, சோபா, சுகாசினி, லக்சுமி ஆகியோர் இதுவரை தமிழ்ப்படங்களில் நடித்தமைக்காக சிறந்த நடிகைகள் விருதைப் பெற்றுள்ளனர். சப்னா ஆஸ்மி 5 விருதைகளைப் பெற்றுள்ளார். 1983, 1984, 1985 ஆகிய மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக இவ்விருதைப் பெற்ற ஒரே நடிகை இவராவர். சரண்யா தென் மேற்கு பருவக்காற்றின் நாயகியுமல்ல. முக்கிய பாத்திரத்திலேயே நடித்துள்ளார். சிறந்த துணை நடிகை விருதை சுகுமாரி நம்ம குடும்பம் படத்துக்காக பெற்றுள்ளார். இவர் நடிகை பத்மினியின் ஒன்று விட்ட சகோதரியாவார். இதற்கு முன் தமிழ்ப்படங்களுக்காக ரேவதி, மனோரமா ஆகியோர் பெற்றுள்ளனர். மைனா படத்தில் நடித்தமைக்காக தம்பி ராமையாவிற்கு சிறந்த துணை நடிகருக்கான விருது கிடைத்துள்ளது. இதற்கு முன்பு நாகேஷ், சந்திரசேகர், பிரகாஸ்ராஜ், அதுல் குல்குர்னி (ஹேராம் ஹிந்தி-தமிழ்) ஆகியோருக்கு கிடைத்துள்ளது.

ஆடுகளம் படத்தை இயக்கியமைக்காக வெற்றி மாறனுக்கு சிறந்த இயக்குனர் விருது கிடைத்துள்ளது. பாலா, பி.லெனின், ஆதித்தியன் ஆகியோருக்கு தமிழ்ப் படங்களுக்காக கிடைத்துள்ளது. சிறந்த எடிட்டிங் விருதை கிஷோர் ஆடுகளத்துக்காக பெறுகின்றார். பி.லெனின், விஜயன், சிறிகர் பிரசாத், ராஜா முகமட், பி.மோகன் ராஜ், சுரேஸ் அர்ஸ் ஆகியோருக்கு இவ்விருது தமிழ்ப் படங்களுக்காக கிடைத்துள்ளது. சிறந்த திரைக்கதைக்கான விருதும் வெற்றி



மாறனுக்கு கிடைத்துள்ளது. ஆங்கிலத்தில் மூன்று பிரிவுகளாக பிரிப்பார்கள். Best Original Screen Play, Best Adopted Screen Play, Dialogue ஆகியவை. இதில் முதலாவதுக்கு வெற்றி மாறனுக்கு கிடைத்துள்ளது. இரண்டாவது ஒரு நாவலையோ அல்லது வேறு ஒருவரின் கதையையோ திரைக்கதையாக மாற்றுவது என்பதாகும். கடந்த வருடம் பசங்க படத்துக்காக பாண்டியராஜ்க்கு உரையாடலுக்கான விருது கிடைத்துள்ளது. பாரதிராஜா, கே.எஸ்.சேதுமாதவன், அகத்தியன், கே.பாலச்சந்தர் ஆகியோருக்கு இவ்விருது கடந்த வருடங்களில் கிடைத்துள்ளது. இதுவரை தோட்டாதரணி, பி.கிருஸ்ண மூர்த்தி ஆகியோர் பெற்றிருந்த சிறந்த கலை விருது இம்முறை சாபு சிரிலுக்கு எந்திரன் படத்துக்காக கிடைத்துள்ளது. 1995ம் ஆண்டில் இருந்து வழங்கப்படும் Special Effects விருது தமிழுக்கு ஒன்பது தடவை (16 வருடங்களில்) கிடைத்துள்ளன. இவ் வருடம் சிறிநிவாஸ் மோகனுக்கு எந்திரன் படத்துக்காக கிடைத்துள்ளது. பல சமயங்களில் இதனை கூட்டாக ஒரு நிறுவனமே பொறுப்பேற்று செய்யும். இது தமிழ்ப்படங்களின் தொழில் நுட்ப வளர்ச்சியின் திறமையைக் காட்டுகின்றது. இலங்கையைச் சேர்ந்த சிறந்த கவிஞர்களில் ஒருவரான வ.ஐ.ச ஜெயபாலனுக்கு சிறப்பு விருது ஆடுகளத்தில் நடித்தமைக்காக கிடைத்துள்ளது. இவர் பல தடவை கனடாவிற்கு வந்துள்ளார். இவரது கவிதைத் தொகுப்பு ஒன்று தேடல் பதிப்பக வெளியீடாக ரொரண்ரோவில் 1990ல் வெளியிடப்பட்டது. இது இவரது முதலாவது படமாகும். நோர்வேயில் தற்சமயம் வசிக்கும் இக்கவிஞரது கவிதைகள் தமிழ்க் கவிதை வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றன.

இவை இதுவரை தமிழுக்கு கிடைத்த விருதுகளில் முக்கியமானவை. இவற்றைத் தவிர ஒளிப்பதிவு, இசை போன்றவற்றிற்கும் கடந்த வருடங்களில் பல விருதுகள் கிடைத்துள்ளன. ஆனால் தமிழ்ப்படங்களுக்கான சிறந்த படத்துக்கான விருது இரு படங்களுக்கே கிடைத்துள்ளன என்பது சற்று ஏமாற்றமே. மேற்குறிப்பிட்ட விருது பெற்ற மறுபக்கம், காஞ்சிவரம் ஆகிய படங்களைத் தவிர பாலுமகேந்திராவின் வீடு, சந்தியாராகம் போன்றனவே ஓரளவிற்கு தமிழில் வந்த யதார்த்த படங்கள் எனக் குறிப்பிடலாம். இவற்றுடன் பாபு நந்தன் கோட்டின் தாகம், திக்கற்ற பார்வதி, அக்கிரகாரத்தில் கழுதை, சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கின்றாள், இவ் வருடம் வெளியாகிய அங்காடித் தெரு, நந்தலாலா மற்றும் தண்ணீர், தண்ணீர் போன்றவற்றையும் இப்பட்டியலில் இணைத்துக் கொள்ளலாம். பத்தாயிரம் படங்களுக்கு மேல் வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களில் பத்து படங்களை பட்டியலிடவே தயக்கமாகவுள்ளது. வர்த்தக சினிமாவின் ஆதிக்கம் நல்ல படங்களின் வருகையை தடுக்கின்றது. நடிகர் நாகேசை கதாநாயகனாக வைத்து உருவாக்கியிருக்க வேண்டிய பதினாறு வயதினிலேயே தயாரிப்பாளரின் வற்புறுத்தலில் கமல், ரஜனி என மாறிவிட்டது. பாலு மகேந்திரா கூட முதலில் மலையாளத்திலேயே படங்களை இயக்கினார். இவரது ஓளங்கள், பின்னர் சிறதோல் ஒரு ஓடை நதியாகிறதாக மாறி, அதன் பின்னர் பூப் பூவா பூத்திருக்காக மாறியுள்ளது. இது போன்ற பல மாற்று மொழிப்படங்களும் அவ்வப் போது தமிழ் மக்களின் இரசனையை கூறு போடுகின்றன. ஓளங்களின் மூலத்தில் இருந்து ஒரு சமரச போக்கையே சிறீதர் எடுத்திருந்தார். பின்னர் வர்த்தகப் போக்கையே எடுத்திருந்தார்.

உலகமயமாதலின் விளைவு சர்வதேச திரைப்பட விழாக்களில் பல மொழிப்படங்களுக்கு ஏற்பட்டுள்ள வரவேற்பு போன்ற எதனையும் தமிழ்ப்படங்கள் கவனிக்கவில்லை. ரெரரிஸ்ட் போன்ற ஒரு சில படங்கள் சர்வதேச திரைப்படவிழாக்களில் தமிழின் கவனத்தையீர்க்க உதவியுள்ளன. வர்த்தக ரீதியாக இந்தியாவில் வெற்றி பெறாத ரெரரிஸ்ட் போன்ற படங்கள் சர்வதேச சந்தையில் லாபமீட்டியுள்ளன. இவ்வகையில் கன்னத்தில் முத்தமிட்டால் படமும் சர்வதேச சந்தையில் வெற்றி பெற்றுள்ள மற்றொரு படம். இவை பற்றிய விபரங்களையும் தமிழ் நாட்டு அரசோ சினிமா சார்ந்த சங்கங்களோ கவனத்தில் எடுப்பதுவுமில்லை அக்கறைப் படுத்துவதுமில்லை. இதனால் தமிழில் எடுக்கப்படும் நல்ல முயற்சிகளும் குறைந்து விடும் அபாயமே உள்ளது. மலையாளம், வங்காளம் போன்ற மாநிலங்களில் திரைப்பட ரசனையை வளர்க்க பல முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அவ்வாறான முயற்சிகள் எதுவும் தமிழில் இல்லை. நவீன தொழில் நுட்பத்தை மாத்திரம் நம்பினால் நல்ல படங்கள் எடுக்க முடியாது.

## பலேரி மாணிக்கம்

1957ம் ஆண்டு நடைபெற்ற ஒரு கொலையைப்பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள மம்முட்டியும் அவரது சகாவான கவ்ரி அஞ்சலும் செல்கின்றார்கள். மம்முட்டி குற்றங்களை கண்டுபிடிப்பவர். கவ்ரி குற்றங்களை ஆய்வு செய்பவர். துப்பறியும் படமொன்றின் களத்திலேயே ஆரம்பத்தில் படம் நகர்கின்றது. கொலை செய்யப்பட்ட மாணிக்கம் சாருவின் குடும்பத்தில் வாழ்க்கைப்படுகின்றார். சாருவின் மகன் ஒரு அப்பாவி. சாருவின் கணவன் இறந்து விடுகின்றார். இல்லை கொலை செய்யப்பட்டு விடுகின்றார். பலேரி கிராமத்தின் ராசாவாக உலா வருபவர் அகமட் ஹாஜி. இவர் ஒரு நாள் சாரு குளித்துவிட்டு வரும் பொழுது பார்த்து விடுகின்றார். அவ்வளவு தான் சாரு ஹாஜியின் ஆசைகளை பூர்த்தி செய்கின்றார்.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

# நீயூ சங்கர் அன் கோ



**Blow Sale Out**

June 10 முதல்
50% கழிவு விலையில்
Fancy நகைகள், காப்பு
வகைகள், சுரிதார்,
பஞ்சாபி, லங்காசூட்









- சமையல் பாத்திரங்கள்
- புட்டுக்குழல்
- அப்பசசட்டி
- குண்டுதோசைச் சட்டி
- பால் சட்டி
- சாப்பாட்டு தட்டு
- இட்டலி சட்டி
- ஸ்ரீமர் - எல்லா Size
- Hot Box
- தோசைதட்டு - Non stick
- Rice Cooker
- Pressure Cooker
- Rotti Maker
- Preethi Mixe
- Sumeet Mixe
- Wet Grinder (ஆட்டுக்கல்)
- குடம் குத்துவிளக்கு Set, அஷ்டலக்ஷ்மி விளக்கு, சுவாமிப்படங்கள் என்பன மலிவு விற்பனையில்.



**Watch Battery**
மாற்றித்
தரப்படும்

சகல விதமான Mixe வகைகள், **Wet Grinder** (ஆட்டுக்கல்) என்பன திருத்திக் கொடுக்கப்படும்.

**2365 Eglinton Ave. East**
**Tel: 416.750.2370**

மேலைத் தேசத்தில்
கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND®

எமது புதிய அறிமுகங்கள்




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

# தோமஸ் யங்கின் இருதுளைப் பரிசோதனை

## நுண்ணுலகியல் 11

யங்கின் இருதுளைப் பரிசோதனையையும், அலைகளின் மேற்பொருந்துகையைப் பற்றியும் சென்ற தடவையில் தெரிந்து கொண்டோம், இல்லையா! அப்பாடி, ஒருவழியாய் ஒளியினைப் பற்றித் தெரிந்து கொண்டாயிற்று, என்கின்றீர்கள். யங்கின் முடிவை உறுதிப்படுத்துவது போன்ற முடிவுகள் பௌதீகத்தில் அதே காலப்பகுதியில் வந்தன. அதில் ஒன்றாக மின்காந்த அலைகள் என்பது பற்றி இனிவரும் காலத்தில் பார்ப்போம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும் பெரும் வளர்ச்சிகள் பௌதீகத்தின் சகல பகுதிகளிலும் ஏற்பட்டன. யங் ஒளிச் செலுத்துகையில் கவனமாக இருந்த மாதிரி, அக்காலத்தில் மின், காந்தம், பொருட்கள் எவற்றினால் ஆனவை என்பவையும் ஆய்வுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தன. வெவ்வேறு பகுதிகளாக இருந்த மின்னியலும், காந்தவியலும் ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கின தொடர்புடையவை என்பது, இறுதியில் இவையிரண்டும் சேர்ந்து ஒரு பகுதியில் வந்ததும் இக்காலப் பகுதியில்தான். பலர் இப்பகுதியில் ஈடுபாட்டுடன் முனைப்பாகச் செயற்பட்டிருந்தாலும் குவாண்ரம் பிறந்த கதைக்காக எனது கண்களில் பட்டவர்கள் இருவர். ஒருவர் மைக்கல் பரடே, மற்றவர் மாக்ஸ்வெல் அவர்களது, எங்களுக்குத் தேவையான பங்களிப்புகளை மட்டும் பார்ப்போம்.

### பரடேயின் ஆய்வும் மாக்ஸ்வெலின் சமன்பாடுகளும்

#### மைக்கல் பரடே

காந்தத்தின் ஆச்சரியமான இயல்புகளுக்கான விளக்கம் அந்நேரத்தில் சரி-வரப் புலப்படாதிருந்தது. அதுபோலவே மின்னோற்றங்களும் ஏன் அவ்விதம் நடக்கின்றன என்பதும் புரியாத புதிராகவே இருந்தது. அந்நேரத்தில் மைக்கல் பரடே என்பவர் காந்தங்களின் பிரத்தியேகமான இயல்புகளுக்குக் காரணத்தினை அறிந்து கொண்டார். இதற்காக மனம் சலிக்காது ஆயிரக்கணக்கான (பதினையாயிரம் என்கிறார்கள்) ஆய்வுகள் செய்தார் என்கிறார்கள். காந்தங்கள் எல்லாம் தங்களைச் சுற்றியுள்ள வெளியை தம்மியல்புக்கும், வலிமைக்கும் ஏற்றதாக ஒழுங்குபடுத்துகின்றன என்பதனைக் கண்டுபிடித்தார். இதனைக் காந்தப் புலம் எனக் கூறினார். சிறுவயதிலோ அல்லது பாடசாலையின் ஆய்வு கூடங்களிலோ நாங்கள் செய்த அல்லது செய்கிற ஒரு சிறிய பரிசோதனையை நினைவுபடுத்த விரும்புகிறேன். தாளொன்றில் வைக்கப்பட்ட சிறிய காந்தத் துண்டினைச் சுற்றி இரும்புத் துருவல்களைக் கொட்டி, பின்னர் மெதுமெதுவாகத் தாளினைத் தட்டிக் கொண்டிருக்க, இரும்புத் துகள்கள் கோடுகள் போல ஒழுங்காக வருவதைக் கண்டிருப்பீர்கள். காந்தப் புலத்தின் செல்வாக்கினால்தான் இரும்புத் துகள்கள் எல்லாம் அப்படி ஒழுங்காகின. இரும்புத் துகள்களின் ஒழுங்கினை காந்தவிசைக் கோடுகள் என்கிறோம். இந்தக் காந்தவிசைக் கோடுகளை இன்று காந்தவூசியினைக் கொண்டு நாம் அறிந்து கொள்கிறோம். பரடேயின் இந்த கண்டுபிடிப்பானது பௌதீக உலகினில் பெரிய பெரிய மாற்றங்களுக்கு அடிகோலியது. என்ன, இந்தச் சிறிய பரிசோதனை முடிவா? ஏன் உங்களில் சிலர் கேட்கலாம். ஆம், அக்காலத்தில் இது மாபெரும் கண்டுபிடிப்புத்தான். இதன் பின்னர்தான் மின் ஏற்றங்களைச் சுற்றி மின்புலங்கள் இருப்பதை அறியக் கூடியதாக இருந்தது. இன்னமும் அயன்ஸ்ரைனுக்கு ஈர்ப்புப் புலம் எனும் எண்ணக் கருத்தினைக் கொடுத்ததும் இந்தக் காந்தப் புலம்தான். ஈர்ப்புப் புலச் சிந்தனைதான் அயன்ஸ்ரைன் ஈர்ப்பிற்கான புதிய விளக்கத்தினை கொடுக்க உதவியது. அதாவது பொதுச் சார்புக் கொள்கையை மெருகேற்றியது. காந்தங்கள், மின்னேற்றங்கள் என்பவற்றினைச் சுற்றி புலங்கள் உள்ளன என்பதைக் கண்டு பிடித்த பரடே இன்னொரு மகத்தான முடிவினையும் பௌதீக உலகிற்குக் கொடுத்தார். இந்தக் காந்தமும், மின்னேற்றங்களும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பேரண்டம் - 90

# எனக்குத் தெரியாது!

வாழ்வில் சகலதையும் பற்றி எனக்கு எல்லாம் தெரிந்திருக்கத் தேவையில்லை என்பதை நன்கு விளங்கிக் கொண்டபடியால் நான் எதுவித கவலையுமின்றி அமைதியாக இப்போ வாழ்கிறேன்.

'எனக்குத் தெரியாது' என்பதை ஒப்புக்கொள்ள விரும்பாது எம்மில் அநேகர் தம் அறியாமையை மறைக்க படாத-பாடுபடுவார்கள். 'உண்மையில் எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது' என நீ ஒப்புக் கொண்டாலும் உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டமாதிரி நினைப்பார்கள்'. 'என்ன இப்படிச் சொல்கிறாயே! உண்மையில் உனக்கு ஒன்றுமே தெரியாதா' என துருவித் துருவிக் கேட்பார்கள். ஆனால் உண்மை என்ன தெரியுமா? எனக்குத் தெரியாது என நீ ஒப்புக்கொள்ளும் போது உனக்குத் தெய்வீகமான பாரிய குணப்படுத்தலும் பிரமிக்கத்தக்க ஆசீர்வாதங்களும் கிடைக்கும்.

எனக்கு எல்லாம் தெரியும் என்ற கர்வம் மிக்கவர்களுக்கு புதிய விழிப்புணர்வுகளும் புதிய தகவல்களும் கிட்டுவதில்லை. உனக்குத் தெரியாது என உனது அறியாமையை ஒப்புக்கொள்ள நீ உடன்படும்போது எத்தனையோ விதமான தகவல்களையும் உதவிகளையும் வாழ்வு உன்முன் வைக்கும். உனக்குத் தெரியாது என்பது ஒரு தேடலுக்கு உன்னை அனுப்பி வைக்கும். உன் மனதைத் திறந்து இதற்கு முன் உன் மனம் நினைத்தேயிராத, கண்கள் கண்டிராதவற்றையெல்லாம் உன்முன் வைக்கும். உனது தேடலின்போது நீ கண்டுபிடிக்கும் விடயங்கள் நீண்ட நாட்களாக உன்னைத் துன்புறுத்திய பயத்தை விரட்டியடிக்கலாம். உனக்குப் பின்னொரு காலம் உதவக்கூடிய அத்தியாவசிய தகவல்களைத் தரலாம். உனக்கு எத்தகையதோர் ஆசீர்வாதம் இது.

உனது அளப்பரிய விசுவாசத்தையும் தன்னம்பிக்கையையுமே 'எனக்குத் தெரியாது' என நீ ஒப்புக்கொள்வது எடுத்துக்காட்டுகின்றது. உனக்கு இப்போ தெரியாவிட்டாலும் காலநேரம் வரும்போது தெரியவரவேண்டியவை நிச்சயம் உனக்குத் தெரியவரும்




எனும் நம்பிக்கை உனக்கிருப்பதையே இது பிரகடனப்படுத்துகின்றது. மிக்க எளிமையுடன் உனக்குத் தெரியாததை ஒப்புக்கொள்ள நீ உடன்படுவது உனது அகங்காரத்தைத் தவிடுபொடியாக்கி ஒழித்துக்கட்டி விடும். போதுமான சக்தி உன்னிடம் இல்லை என்று உன்னை நம்ப வைத்து உனது உள்ளார்ந்த ஆளுமையை எதிர்மறையாகப் பாதிப்பது இந்த ஆணவம் தான். உன்னிடம் தேவையான அளவு சக்தி இல்லை என நீ உணர்ந்தாலோ, நம்பினாலோதான் உனது சுயத்தை நீ நிலைநாட்டி நிரூபிக்க வேண்டும் என்ற தேவை உனக்கு எழுகின்றது. எனக்குத் தெரியாது என்று சொல்வது இந்த நிலையில் இருப்பது எனக்குப் பரவாயில்லை. இதை ஒருவித ஒளிவு மறைவுமின்றி ஒப்புக்கொள்வதில் எனக்கு ஒருவித பிரச்சனையுமில்லை என மிக்க அன்புடன் செயல்படுவதாகும். இதைவிட வேறென்ன உனக்கு வேண்டும்?

வாழ்வில் சகலவற்றையும் முற்றாக அறிந்திருப்பது உனது பொறுப்பு, உனது கடமை என நீ இன்றுவரை நம்பியிருக்கலாம். உனக்கு உண்மையில் பல விடயங்களைப்பற்றி ஒன்றும் தெரியாது என்பதைத் திறந்த மனத்துடன் ஒப்புக்கொள்ள இன்று உடன்படு. புதிய தகவல்களை நீ எதிர்பார்த்திருக்கும் இடங்களிலிருந்தும், எதிர்பார்க்காத இடங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள திறந்த இதயத்துடன் இன்று காத்திரு.

**எனக்குத் தெரியாதவற்றை ஒப்புக்கொண்டு, புதிய பாதையில் பயணித்து புதிய கண்டுபிடிப்புகள், புதிய தகவல்கள் முதலியவற்றை மூலதனமாக எனது வங்கியில் வருங்கால நன்மைக்காக இன்று முதல் சேமித்து வைக்கப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 189

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# விருதுக்கு வேட்டையா வேண்டாமையா!

விருதுக்கு வேட்டையா வேண்டாமையா - தமிழை
விலைபேசிக் கதிரைக்கு விற்கவேண்டாம்!!
அருவருப் பாகநாம் வரிந்துகட்டி - இன்று
ஆருக்கு முடிசூட்ட முயலுகின்றோம்?

தெருவுக்குத் தெருநின்று உலகுபார்க்கத் - தமிழன்
சிறுசிறு குழுக்களாய்ப் பிரிந்துநிற்றல்
பெருமைக்கு உரியதா சொல்லுமையா? எங்கள்
பிள்ளைகட் கிதைத்தானா போதிக்கின்றோம்?

தாயவள் அடிபட்டு உதிரம்சிந்தி 'வலியில்
தன்பிள்ளை முகம்நோக்கிக் கிடக்கும்போது
நீயவள் தாலிக்கு விலைபேசுதல் - என்ன
நீதியோ' நியாயமோ தெரியவில்லை!!!

மூவேந்த ராயன்று அடிபட்டநாம் - இன்றும்
மூடர்போல் எதற்காகப் பொருதுகின்றோம்
நோவேந்தி நாடின்றி அலைந்தபோதும் - நாங்கள்
நூறுநூ றாகஏன் பிளவுபட்டோம்???

அடித்தவன் சேர்ந்தங்கு தன்னைக்காக்க ஒரு
அணியாக இணைந்திடத் துணிந்துவிட்டான்
அடிபட்ட நாங்களோ நாடுதோறும் - சீச்சீ
அடிபட்டு மாய்கிறோம் வெட்கமையா!

எங்களின் சொந்தமண் மெல்லமெல்ல அங்கே
எதிரியின் கைகளைச் சேருதந்தோ!
சிங்களர் பூமியாய்த் தமிழீழத்தை கயவர்
செய்திடப் பார்த்துமா போட்டிபூசல்?

எதிரிக்கு வலுவினைச் சேர்க்கலாமா? எங்கள்
இளையோர்கள் தடம்மாற வைக்கலாமா?
விதியென ஒதுங்கிநாம் வாழலாமா? தமிழன்
விடிவிற்குக் கைகோர்க்கத் தயங்கலாமா?

நோக்கிலே சுத்தமும் தெளிவும்வேண்டும் - எங்கள்
நோய்க்கேற்ற மருந்தைநாம் தேடவேண்டும்
வாக்கிலும் செயலிலும் நேர்மைகூட்டி - நல்ல
வழிகாட்டி யாகநாம் மாறுவோமா?
வகைதொகை இல்லாமல் தமிழ்மக்களை அன்று
வன்னியிற் கொலைசெய்த பாவிகட்கு
தயையின்றித் தண்டனை கொடுங்களென்று சேர்ந்து
சகலரும் ஒன்றாகக் குரல்கொடுப்போம்.!

பெண்ணென்று ஆணென்று பார்க்கவில்லைப் பாவி
பேதங்கள் இல்லாமற் கொன்றொழித்தான்
விண்ணின்று இரசாயனக் குண்டைப்போட்டு அந்த
விலையற்ற மனிதரைச் சாகச்செய்தான்!

பட்டினி போட்டெங்கள் இனசனத்தை - அன்று
பாதகன் அழிக்கையிற் பார்த்திருந்தோர்
தொட்டிலை ஆட்டியோர் அனைவருக்கும் - நாங்கள்
சொல்வது எமக்குஓர் நீதிவேண்டும்!

நாடுகள் தோறும்நாம் கூடிநின்று அங்கு
நடந்திட்ட கொடுமையை நிறுத்தக்கோரி
பாடுகள் பட்டேதும் பலிக்கவில்லை அந்தப்
பாவிகள் கொலையுமோ நிற்கவில்லை

மருந்தையும் உணவையும் தடைசெய்தன்று - எங்கள்
மக்களைக் கொலைசெய்த கொடியவர்கள்
பொருந்தாத காரணம் பலதைச்சொல்லி அது
போர்க்குற்ற மில்லையென் றோதுகின்றார்

கொத்துக்கொத் தாயெங்கள் தமிழினத்தை அன்று
கொடூரமாய் அழித்திட்ட பாவிகட்கு
செத்திட வில்லைப்பார் உலகநீதி என்றோ
தீர்ப்பினைத் தருமென்று சொல்லவைப்போம்!

ஐ.நா.வின் நிபுணர்கள் அறிக்கைவந்தே - இந்த
அகிலத்தின் கண்களைத் திறந்துள்ளது
பொய்யான இலங்கையின் முகத்தோற்றத்தை உலகம்
புரிந்திடக் கைகோர்த்துக் குரல்கொடுப்போம்!

காற்றுள்ள போதேநாம் தூற்றவேண்டும் - எங்கள்
கடமையைச் சரிவரப் புரியவேண்டும்!
போர்க்குற்ற மனுவினை உலகம்ஏற்க நாங்கள்
பொங்கியோர் அணியாகத் திரளவேண்டும்.

வலிகளைச் சுமந்தமே மாதமி.ஃதில் - தமிழர்
வாழ்வினிற் துயர்சூழ்ந்த மாதமாய்க்கொள்
பலியான தமிழ்நாட்டு உறவுகட்கும் - நாங்கள்
பரிவோடு வணக்கம் கூறிநிற்போம்!

- சபா. அருள்சுப்பிரமணியம்

# இனிப்பான...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

மசாஜ் செய்தாக வேண்டும்."

10. தீராத குறை?
"எனது பாதங்கள், அவை ரொம்பப் பெரிசு."

11. வரவு செலவு கணக்கு?
"அடிக்கடி பார்ப்பேன். கைப்பை, ஆடைகளுக்கு நான் அதிகம் செலவழிப்பதில்லை. மாதச் செலவும் வீட்டுச் செலவும்தான் அதிகம். ஆனால், ஷுக்கள் என்றால் உயிரையும் விட்டுவிடுவேன்."



12. விசித்திர ரசிகர்?
"என்னைப் போலவே இருந்த ஒரு பெண்ணுடன், அவள் என்னைப் போலவே இருப்பதாலே, 'சேர்ந்து சுற்றினேன்' என ஒரு ரசிகர் சொன்னார்."

13. தமிழ் அறிமுகம்?
"உங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்கிறேன். 'ராணா'தான் என் முதல் தமிழ் படம் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னை முதலில் தமிழுக்கு அழைத்து வந்தவர் நட்டி என்றழைக்கப்படும் கேமராமேன் நட்ராஜ். ஆச்சரியப்படாதீர்கள். நட்டி நாயகனாக நடித்த 'மிளகா' படத்துக்கான டிரெய்லரில் நான் ஏற்கெனவே நடித்துள்ளேன்."


14. ராணா வாய்ப்பு?
"ரஜினி சாருடன் நடிப்பேன் என்று கனவுகூட கண்டதில்லை. ராணாவில் வாய்ப்பு கிடைத்ததற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். 'ராணா', எந்திரனைவிட பிரம்மாண்டமாக இருக்கும் என்பதை சொல்ல வேண்டியதில்லை. கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சௌந்தர்யா ரஜினிகாந்த், ஈரோஸ் இண்டர்நேஷனல் தயாரிப்பில் அது தயாராகி வருகிறது. பட்ஜெட் ரூ.100 கோடிக்கும் மேல். அடுத்த ஆண்டு ரிலீஸ் ஆகும். என்ன இப்படி உறுதியாகச் சொல்கிறேனே, அதுவும் ரஜினி சார் உடல்நலமில்லாமல் இருக்கும் நிலையில் என்று நினைக்கிறீர்களா? எனக்கு நம்பிக்கை இருக்கிறது; ரஜினி சார் விரைவில் பூரண குணமாகி வருவார். 'ராணா'வில் நாங்கள் சேர்ந்து நடிப்போம்."

15. ராணாயில் உங்கள் பாத்திரம்?
"பதினேழாம் நூற்றாண்டில் நடக்கும் கதை. ரஜினி மூன்று கெட்டப்புகளில் வருகிறார். ராஜஸ்தான் மேவார் பகுதியைச் சேர்ந்த ராஜபுத்திர அரசர் மகாராணா பிரதாப் சிங்கைப் போன்ற கெட்டப்பும், அதுபோன்ற ஒரு கதையும் வேண்டுமென்று ரஜினி ஆசைப்பட்டாராம். பேரரசர் அக்பரை எதிர்த்தவர்களில் பிரதாப் சிங் முக்கியமானவர். இந்தக் கதையில் முக்கிய திருப்பம் ஏற்படுத்தும் இளவரசி கேரக்டரில் நான் நடிக்கிறேன். "இந்தப் பாத்திரத்துக்கு முழுத் தகுதியானவர் நீங்கள்தான். முதல் ஷெட்யூலிலேயே உங்கள் நடிப்பு, எதிர்பார்த்ததைவிட இரண்டு மடங்கு சிறப்பாக இருந்தது. இந்த ஷெட்யூலில் எப்படி நடித்தீர்களோ, அதில் ஒரு சதவீதம்கூட குறையாமல் அடுத்த முறையும் நடிக்கவேண்டும். உச்சத்துக்குப் போய் விடுவீர்கள்" என்று வாழ்த்தினார், இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் சார்."

16. சமீபத்திய வேண்டுதல்?
"மும்பை சித்தி விநாயகர் என் இஷ்ட தெய்வம். அவரை வேண்டிக்கொள்ளாமல் எந்தப் பட பூஜையிலும் கலந்துகொள்ள மாட்டேன். சமீபத்தில் ரஜினி சார் பூரண குணமடைய சித்தி விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் செய்து, மனமுருகி வேண்டினேன். சித்தி வியாநகர் என்னைக் கைவிட மாட்டார்."

# நாமும் எமது செல்லிடத்தொலைபேசியும்

## மின்வலையில் வந்தவை - 16




படம் - 12 - **செல்லிடத்தொலைபேசியைப் பாவிக்கும் போது பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்க.**

கதிர்வீச்சிலிருந்து உங்களைக் காப்பாற்றுவதற்கு எவ்வகையான தொலைபேசியைத் தெரிவு செய்கிறீர்கள் என்பதை விட எவ்வாறு அதனைப் பாவிக்கிறீர்கள் என்பதே முக்கியம். பின்வரும் சில யோசனைகள் கூடியளவு கதிர்வீச்சைக் குறைத்து உங்கள் உடல் நலத்தையும் பாதுகாக்கும்.




படம் - 13 - **தொலைபேசி இணைப்பைப் பாவியுங்கள்**

தொலைபேசி உங்கள் உடலிருந்து எவ்வளவு தூரத்திலுள்ளதோ அவ்வளவுக்கு கதிர் வீச்சுக்குக் குறைவாக இருக்கும். எனவே செல்லிடத்தொலைபேசிக்கு ஒரு காது இணைப்பைப் பாவிப்பதால் கதிர்வீச்சைக் குறைக்கலாம்.



படம் - 14 - **தொலைபேசியின் கீழ்ப்பகுதியில் பிடிக்கவும்**

நீங்கள் தொலைபேசியை முழுக்கையாலும் பிடித்தால் ஒலிஅலைகள் கிடைப்பது குறையும். இதனால் தொலைபேசி தனது சக்தியைக் கூட்டி வலுவான அலைகளை அனுப்ப முயற்சிக்கும். எனவே நீங்கள் அதன் அடியில் பிடித்தால் குறைவான சக்தியிலே தொலைபேசி இயங்கும்.



படம் - 15 - **ஏற்ற சூழ்நிலையில் தொலைபேசியைப் பாவிக்கவும்**

படத்தைப் பாருங்கள். முதல் நிலையில் அலைகள் பெறுவது குறைவாக உள்ளதால் சக்தி அதிகமாக உபயோகமாவதைப் பாருங்கள். அடுத்த படத்தில் சாமான்கள் குறைவான பகுதியில் அலைகள் இலகுவாக வருவதால் சக்தி குறைவாகப் பயன்படுத்தப்படுகிறது.



படம் - 16 - **நீண்ட நேரம் செல்லிடத் தொலைபேசியைப் பாவிக்காமல் வழக்கமான தொலைபேசியைப் பாவியுங்கள்.**

எவ்வளவு நேரத்துக்குத் செல்லிடத் தொலைபேசியைப் பாவிக்கிறீர்களோ அவ்வளவு தூரத்துக்குப் பாதிப்பு ஏற்படும். எனவே நீண்ட நேரப்பாவனைக்கு வழக்கமான தொலைபேசியைப் பாவியுங்கள்.



படம் - 17 - **செல்லிடத் தொலைபேசிப்பாவனையில் தீங்கு விளைவிக்கும் சூழல்கள்**

- கார் ஓட்டும் போது பாவிக்க வேண்டாம். ஓரிடத்தில் நிறுத்த விட்டுப் பேசவும்.
- வைத்தியசாலை, விமானநிலையம் போன்ற மின்கருவிகள் அதிகமாக இருக்கும் இடங்களில் பாவிக்க வேண்டாம்.
- தொலைபேசியுடன் குளிக்க வேண்டாம்.
- சிறுவர்களைச் செல்லிடத் தொலைபேசியில் அதிக நேரம் பேச விடவேண்டாம். வளர்ந்தோரைக் காட்டிலும் அவர்களுக்குப் பாதிப்பு அதிகமுண்டாகும்.

**மேற்கூறியவற்றைக் கடைப்பிடித்து உங்கள் ஆரோக்கியத்தைப் பேணிக் கொள்ளுங்கள்.**

**- துறையூரான் -**

# தோமஸ் யங்கின்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடர்புடையவை என்பதனையும் பரடே காட்டினார். கடத்தி ஒன்றின் ஊடான மின்னோட்டத்தின் வீதம் மாறும் போது, அக்கடத்தியினைச் சுற்றிக் காந்தப் புலம் தோன்றுவதை பரடே காட்டினார். அதேபோலவே, காந்தப் புலம் ஒன்று



அமையும் போது, அப்புலத்தினுள் உள்ள கடத்தியில் மின்னோட்டம் தோன்றும் என்பதனையும் அவர் கண்டுபிடித்தார். பரடே அதிசயமான விஞ்ஞானி. புதிய விஞ்ஞானத்தைக் காட்டியவர் இவர்தான் என்றால் அதில் தவறில்லை. அவரது காலத்தில் நோபல் பரிசு கொடுக்கும் வழக்கம் இல்லை. இருந்திருந்தால் குறைந்தது 6 நோபல் பரிசுகளாவது பெற்றிருப்பார் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். ஒருவேளை இது கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனம் எனக் கருதலாம். ஆனாலும் உண்மையிலேயே 20ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இவரது ஆக்கமான வேலைகள்தான் பெரிதும் காலாக இருந்தன என்பது மறுப்பிற்கில்லை. இன்று நாம் பாவிக்கும் விஞ்ஞானச் சாதனைகளுக்கு அடிப்படையான காரணமாக இருந்தவர் பரடே என்று கூறுகின்றார்கள். குவாண்ரம் பிறந்த கதையில் ஒரு மாற்றத்திற்கு வித்திட்டவரும் இவர்தான். ஆய்வாளர்களினால் அதிசயமாகப் பார்க்கப்படும் பரடே பற்றி இத்துடன் முடித்துக் கொண்டு இவர் விட்ட இடத்தில் இருந்து அல்லது இவரது கண்டுபிடிப்புக்களை உண்மை எனக் காட்டிய மாக்ஸ்வெல் எனும் இன்னொரு விஞ்ஞானியை குவாண்ரம் பிறந்த கதையில் அடுத்துப் பார்ப்போம்.


**Sitham Sam Shanmugam** (Sales Rep)

**HomeLife/GTA Realty Inc.**

HOMELIFE HIGHER STANDARDS

Cell - 416.230.7820

Office Scarborough - 416.321.6969

Office Mississauga - 905.712.2666

24 hrs.

•Independently owned and operated

2 Way Mechanic shop + house Income $2100/month. Good investment. Commercial. For $340,000

Gas station with mechanic shop + storage building. 1 hour drive from GTA. Good income property.

Senior Home in Richmondhill 12 Beds

Metal scrap yard for recycling and car sales with house office

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 **Condo.** in Toronto. Near University of York. $130,000

# தேசிய விருதுகள்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

அதனைக் கண்ட சாருவின் கணவனைக் ஹாஜி காலால் மிதித்து கொலை செய்து விடுகின்றார். இந்த ஹாஜி ஒரு கொலை வெறிபிடித்தவர். சாதித் தடிப்பு கொண்டவர். தனது தென்னை மரத்தில் தேங்காய் திருடியவர் என்று சொல்லி ஒருவரை மாடு கட்டி உழும் உழக்கையில் மாட்டுக்கு பதிலாக இவரைக் கட்டி உழுகின்றார். தாழ்த்தப்பட்டவர்கள் தான் கூப்பிடும் சொல்லுக்கு கட்டுப்பட்ட செயல்படவேண்டும் என்பது ஹாஜியின் உத்தரவு.

அவ்வாறே. தனது கணவனின் கொலை கண்ணால் கண்டும் அமைதி காக்க வேண்டிய நிலை. ஹாஜியாரின் ஆசைகளுக்கு இணங்காவிட்டால் ஏற்படப்போகும் இழப்புக்கள். இவை இவர்களை கட்டிப்போட்டு வைத்துள்ளது.

கொலையாளி யார் எனத் தெரிந்தும் மவுனமாக அன்றைய இடது சாரி அரசு இருந்தது ஏன்? பலேரியில் இருந்த ஒரு பாடசாலையை உயர் வகுப்பு பாடசாலையாக மாற்ற முயற்சித்தார்கள். அதற்கு நிலம் தேவை. ஹாஜிக்குச் சொந்தமான 12 ஏக்கர்



இக்காலகட்டத்தில் கேரளாவில் இடது சாரிகளின் எழுச்சி ஏற்படுகின்றது. கொலை நடைபெற்ற காலம் இடது சாரிகளின் ஆரம்ப காலம். பல இளைஞர்கள் இடது சாரி அமைப்புக்களில் இணைகின்றனர். இடது சாரிகளின் எழுச்சி ஓரளவிற்கு சாதிக் கொடுமைகளை குறைத்தது. இந்நிலை இலங்கையிலும் 70களில் இருந்தது. சீனக் கொம்யூனிஸ்ட் சாதிக் கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்துள்ளது.

மாணிக்கம் கொலை செய்யப்பட்டபோது அதனை தற்கொலை என மூடி மறைக்க முற்பட்ட போதும் இவ்விளைஞர்களின் அறிவுறுத்தலில் பொலிஸ் கொலை என விசாரிக்கின்றது. ஆனால் கொலையாளி கண்டுபிடிக்கப்படவில்லை. கொலை நடைபெறுவதற்கு முதல் நாள் திடீரென அக்கிராமத்திற்கு நாடகக் குழு வருகின்றது. கிராமமே அங்குள்ளது. அத்தருணத்தில் ஹாஜி மாணிக்கத்தை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்து விட்டார் என்பதை அனைவரும் ஊகித்து இருப்பார்கள். கொலை செய்தது யார் என்பது இங்கு கேள்வியல்ல. படம் பல விடயங்களை கூறியுள்ளது. இதற்கு ஒரு கருவியாகவே இயக்குனர் ரஞ்ஞித் இக்கொலையை பயன்படுத்தியுள்ளார்.

ஹாஜியாரும் மேல் சாதியினரும் செய்யும் சாதிக் கொடுமைகள் இப்படத்தில் சிறப்பாக காட்சியமைக்கப்பட்டுள்ளன. இலங்கையை ஒத்த சாதிக் கொடுமைகள் கேரளாவிலும் இருந்துள்ளன. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் தங்களது உடமைகளை மேல் தட்டு வர்க்கத்தினருக்கு தாரை வார்க்க வேண்டும் என்ற நிலை அங்கிருந்ததை சுட்டிக் காட்டியுள்ளனர். சாருவின் பாத்திரமும்

நிலத்தை பாடசாலைக்கு ஹாஜி வழங்கியதன் மூலம் இக்கொலை இடது சாரிகளாலும் மறைக்கப்பட்டது. இடது சாரிகளின் சமரசப் போக்கை இதனைவிட சிறப்பாக விமர்சிக்க முடியாது. இன்று வங்காளத்திலும், கேரளாவிலும் இடது சாரிகள் செல்வாக்கிழந்து போவதற்கு இதுபோன்ற சம்பவங்களே காரணம்.

ஹாஜியாவா வில்லன் பாத்திரத்தில் நடிப்பவரும் மம்முட்டியே. துப்பறிபவராக வரும் மம்முட்டி ஹாஜியால் பாதிக்கப்பட்ட பல பெண்களில் ஒருவரின் மகன். இவரின் உயிரியல் தந்தை இந்த ஹாஜியே. மிகக் கொடூரமான வில்லனாக ஹாஜியாக மம்முட்டி நன்றாக நடித்துள்ளார். கொலை செய்யப்பட்ட காலத்திற்கும் தற்சமயம் கொலையை ஆய்வு செய்ய செல்லும் காலத்திற்குமான இடைவெளியில் பெருமளவு சமூக மாற்றங்கள் நிகழவில்லை என்பதையும் இயக்குனர் காட்சியமைப்புக்களினூடாக காட்டத்தவறவில்லை.

இயக்குனர் ரஞ்ஞித் மிகச் சிறப்பாக ஒரு கால கட்டத்தில் நடைபெற்ற சமூக கொடுமைகளை அரசியல் சமரசங்களை வெளிப்படுத்தியுள்ளார். இதனை ஒரு துப்பறியும் படமாக பார்க்க முடியாது. இன்றும் மலையாள படவுலகம் சிறப்புறுவதற்கு சிறந்த சமரசமற்ற சமூகப் பார்வையும் தெளிவான திரைக் கதையுமே காரணம்.

இப் படத்தை எகிளின்ரன் பிறம்லி சந்திக்கருகாமையில் உள்ள குமரன் வீடியோவில் பெற்றுக் கொள்ளலாம்.

# உலகின் அதிகூடிய விலையுள்ள வீடு

இந்தியாவின் முதலாவது பணக்காரரான திரு. முகேஷ் அம்பானி (53 (பெறுமதி 27 Billion டொலர்) தனது உள்ள வீட்டுக்கு நவம்பர் 27, 2010 அன்று கிரகப்பிரவேசம் செய்தார்.

கலந்து கொண்டவர்களில் ஒருவர் இந்த வீடு "The Taj Mahal Of the 21st Century" எனக் குறிப்பிட்டதாக Times Of India தெரிவித்துள்ளது. இந்த வீட்டை பராமரிக்க குறைந்தது 600 பேர் மட்டில்



இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் மும்பாய்ப் பகுதியில் 27 அடுக்குமாடியான 570 அடி உயரம் (174m) இந்த வீடு அமெரிக்க டொலர் ஒரு பில்லியன் பெறுமதிக்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவரின் இந்த சந்ததியில் 80 பேர் வரை கலந்து கொண்டார்கள். இந்தப் பார்ட்டியில்

தேவைப்படலாம் என தெரியவருகின்றது.

இந்த வீட்டின் முதல் மாடியில் கோயிலும் அதி கூடிய மாடியில் புத்தகக் களஞ்சியமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முதல் பணக்கரரான இவர் உலகின் 4வது பணக்காரர் ஆவார்.

# குழந்தைகளை அறிவாளியாக மாற்றும் இசைப்பயிற்சி

சிறுவயதில் பலமணிநேரம் இசைப்பயிற்சி எடுப்பது குழந்தைகளுக்கு மிகுந்த சிரமத்தை தரலாம். ஆனால் இந்த இசைப்பயிற்சியை பெறும் குழந்தைகள் வயதான காலத்தில் மிகச் சிறந்த அறிவாளிகளாக திகழ்கிறார்கள் என ஒரு புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இளவயதில் பியானோ, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளை பயிற்சி பெறும் நபர்கள் வயதான தருணத்தில் மிகவும் புத்திக்கூர்மையுடன் இருப்பதாக அமெரிக்க உளவியல் சங்க இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கனாஸ் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் பிரண்டா ஹென்னா பிளாடி கூறுகையில், 'இளவயதில் மேற்கொள்ளும் இசைப்பயிற்சி வயதான காலத்தில் மூளை நரம்புகளில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள உதவுகிறது. சிறுவயது இசைப்பயிற்சி மூளையை துடிப்புடன் வைத்திருக்கிறது. இதனால் மற்றவர்களை விட இசைப்பயிற்சி பெற்றவர்கள் அறிவு நுணுக்கத்துடன் செயல்படுவதை காண முடிகிறது' என்றார். இசை மனதுக்கும் இதம் அளித்து பதட்டத்தை குறைக்க உதவுகிறது. ஆழ்ந்த தூக்கத்தை இரவில் பெறவும் உதவுகிறது. மெல்லிய இசை நரம்புகளை நெகிழ்வடையச் செய்து உடலுக்கு உற்சாகம் அளிக்கிறது. இது மட்டுமல்லாமல் மூளை நரம்புகள் மிகச்சிறப்பாக செயல்படவும் உதவுகிறது. உங்கள் குழந்தைகளை ஏதாவது ஒரு



இசைப்பயிற்சிக்கு தயார்ப்படுத்துங்கள் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

# கண்டேன்......

23ஆம் பக்கத்தொடர்ச்சி

படாதபாடுபட்டு மன்னிப்பு வழங்கச் சொல்லுகிறார். ஒரு கட்டத்தில் ரேஷ்மி மனம் மாறி சாந்தனுவை மீண்டும் காதலிக்க மீண்டும் திருமண ஏற்பாடுகள் நடக்கிறது. இப்பொழுது, விதி குறுக்கிடுகிறது. ஒரு விபத்து நிகழ்ந்து, உண்மையிலேயே சாந்தனுவுக்கு கண்பார்வை பறிபோகிறது. அதன்பிறகு, "ஏய்ய்ய்ய் நின்னுப்பா... நாங்க படம் பார்க்கனுமா, வேண்டாமா? நீ பாட்டுக்கு முழுக் கதையையும் சொல்லிவிடுவாய் போலிருக்கே" என்கிறீர்களா? சரி, தமிழ் விமர்சன மரபுப்படி இங்கே ஒரு சஸ்பென்ஸ் வைக்கிறோம். சாந்தனுவும் ரேஷ்மியும் இணைந்தார்களா என்பதை நீங்கள்



வெள்ளித்திரையிலேயே காணுங்கள்.

ஆனால், அதற்கு முன்பு இயக்குநரிடம் சில லாஜிக் கேள்விகள். திருமண நிச்சயதார்த்தம் முடிந்த அன்றைய இரவு நிகழும் சண்டையிலேயே சாந்தனுவுக்கு கண் பார்வை போய்விடுகிறது. அதற்கு பிறகு தலையில் கட்டெல்லாம் கட்டி ஒரு சில நாட்களுக்கு பிறகுதான் அனுப்புகிறார்கள். இந்த இடைவெளி நாட்களில் சாந்தனுவின் காதலியோ, மாமனாரோ, தாத்தாவோ சாந்தனு என்ன ஆனான் என்று தேடவேயில்லை ஒரு போன்கூட செய்யமாட்டார்களா? இத்தனைக்கும் காதலி கூடவேயிருப்பவள்? பார்வையற்றவனாக தன்னை ஏமாற்றிய சாந்தனுவை, பின்னர் ரேஷ்மி ஏற்றுக் கொள்வதற்கும் வலுவான காரணம் இல்லை. தனக்கு பார்வை போனதை, ஏதோ சின்னக் காயம் போல சாந்தனு கேஷுவலாக எடுத்துக்கொள்வது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. கிராமத்திலேயே பெரிய பண்ணையாரான விஜயகுமார், அரண்மனை மாதிரியான வீட்டில் அவர் மட்டுமே வாழ்வதும் ஒட்டாமல் இருக்கிறது. இவ்வளவு லாஜிக் மிஸ்ஸிங் இருந்தாலும், கலகலப்புக்கு குறைவில்லை. அதனால், ஏதோ படம் தப்பிக்கிறது. அதற்குக் காரணம் சந்தானம்.


சாந்தனு நடிப்பில் பக்குவமும் மெருகும் கூடியிருக்கிறது. கொஞ்சம் நன்றாகவே ஆடுகிறார். ஆனால் சண்டைக் காட்சிகளில், பாக்கியராஜ் சண்டைக்காட்சிகள் போல், ஆக்ரோஷத்துக்குப் பதில் காமெடி. என்றாலும், ரேஷ்மி மனதில் இடம்பிடிக்க, பார்வையற்றவராக நடிப்பதும், மாட்டிக் கொள்ளும்போது சாமர்த்தியமாய் தப்பிப்பதுமாக சந்தானத்துடன் அவர் அடிக்கிற லூட்டிகள் கலகல.

கதாநாயகி, புதுமுகம் ரேஷ்மி. தோற்றத்திலும் நடிப்பிலும் ஏதோ பரவாயில்லை என்னும் ரகம். 'ஒவ்வொரு நிமிடமும் அவனை நான் காதலிச்சேன். ஆனா ஒவ்வொரு நிமிடமும் அவன் என்னை ஏமாற்றியிருக்கான்' என்று அப்பாவிடம் கதறும் காட்சியில் கலங்க வைக்கிறார். சந்தானம் வழக்கம் போல சந்தடி சாக்கில் அடித்து விளையாடுகிறார். முழுக்க, முழுக்க சந்தானத்தை நம்பியே வெளிவந்திருக்கும் படம் என்றுகூட சொல்லலாம். நான்கு காட்சிகளுக்கு ஒரு காட்சி வந்து லேசாய் கிச்சு, கிச்சு மூட்டிவிட்டு போகிறார்.

கண்டிப்பான காவல்துறை அதிகாரி, அன்பான அப்பா பாத்திரத்தில் ஆதஷ் வித்யார்த்தி கவர்கிறார். விஜயகுமார்... ஆலமரமும் செம்பும் மட்டும்தான் இல்லை மற்றபடி அதே நாட்டாமை விஜயகுமார்தான். 'எண்ட்ரா அவன் என் பேரனாக்கும். அவனைப் பத்தி தப்பா பேசுன, உன்ற தலைய சீவிடுவேனாக்கும்' என்று தியேட்டர் வெடிக்க கத்தும்போது, "ஏண்ட்றா இந்தா நாட்டாமையை விடவே மாட்டீங்களா" எனப் பதிலுக்கு கத்தவேண்டும் போல் இருக்கிறது.

புதிய இசையமைப்பாளர் விஜய் எபினேசரின் பாடல்கள் எடுபடவேயில்லை. ஒளிப்பதிவு பற்றியும் பெரிதாய் சொல்ல ஏதுமில்லை. இயக்கம், ஏ.சி.முகில். பிரபுதேவாவின் உதவியாளர். கலகலப்பான காதல் கதையைத்தான் தர முயற்சித்திருக்கிறார். ஆனால், அதை சுவாரஸ்யமாகத் தருவதில் சுணங்கிவிட்டார். சில இடங்களில் படத்தைக் காமெடியாக கொண்டு செல்வதா, சீரியசாக கொண்டு செல்வதா என்று தடுமாறிவிட்டார் போலிருக்கிறது.

"கண்டேன்.... நொந்தேன்" என்கிறார்கள் பார்த்தவர்கள். படம் வெளியாகி முதல் வாரத்திலேயே இணையதளத்தில் இலவசமாக ஓட்ட ஆரம்பித்துவிட்டதில் கண்டேன்' அணியும் நொந்துவிட்டார்கள். இந்தப் படத்தை இணையத்தில் வெளியிட்ட புண்ணியவான், "யான் பெற்ற கஷ்டம், பெறுக இவ்வையகம்" என நொந்துபோய்தான் போட்டிருக்க வேண்டும்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

WANTED: JUNK OR UNWANTED CARS

We will buy your Van, Truck, Suv & Cars working or not working. We pay cash and pick it up / tow it for free.



தேவை

உங்களிடம் உபயோகமற்ற வாகனங்கள் உள்ளனவா? அவை தகுந்த விலை கொடுத்து வாங்கப்படும்.

Please Call - Kumar

647.213.0099 / 647.703.1955


# உன்னைக்கண்டபின்

நறுமணங்களிற்கு கூட உருவங்கள்
நிழல்களில் கூட நிறங்கள்
வலிகளில் கூட சுரங்கள்
வினாடிகள் கூட விருட்சங்கள்
இமைகளில் கூட மலைகள்
புல் நுனிகளில் கூட கிளைகள்
அஸ்தமனத்தில் கூட உதயம் - கண்டேன்
அட என்னில் கூட உன்னை

- ஆக்கம்: மொன்றியல் சுபோகன் (Subohan from Montreal)

224

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கன் களைவதாம் நட்பு
- திருக்குறள்





இது சிறுவயதிலேயே வாங்கியோ வாங்காமலோ தமிழ் வகுப்பில் எல்லோரும் படித்திருப்பார்கள்




ஒரு வாரம் பழகி இரண்டாம் வாரம் வம்பில் மாட்டிவிடுவது நட்பல்ல..



ராசம்மாக்கா உங்கடை சில்லுப்பூட்டின சூட்கேசைத் தாங்கோ ஜேர்மனிக்கு தங்கச்சியின்ரை மேளின்ரை சாமத்தியச் சடங்குக்குப் போட்டுவந்து தாறன் எனக்கேட்க ராசம்மா உலகரைக் கடைக்கண்ணால் பார்க்க அதை ஆட்டிலறி அன்னம்மா பார்க்க அண்ணலும் நோக்கினார்.

அவளும் நோக்கினாள் என்பது போல ஆட்டிலறி அன்னம்மா தன் மனதுக்குள் சிரித்துக்கொண்டா..

செல்லம்மா உந்த இரவல் வாங்கிற பழக்கம் ஒருநாளும் போகாது என முணுமுணுத்தா





கிராம வாழ்க்கையில் பொருட்கள் இரவல் வாங்குவது சர்வசாதாரணம். உப்பு மிளகாய்த்துாள் சீனி அரிசி மாணவர்களாயின் பேனை பென்சில் புத்தகம் உடுப்புகள் இரவல் வாங்குவார்கள்.

விசேட தினங்களுக்கு நகைகளை இரவல் வாங்குவார்கள்.



அது ஒரு காலம். ஆனால் சண்டை சச்சரவு வந்தால் இரவல் வாங்கிய பொருட்கள் கனிமொழியின் சொத்து விபரம்போல பப்பிளிக்கில் வரும்.




ஆனால் இன்று காலம் மாறிப்போச்சு.

இப்போ வாழ்க்கைவசதியோடு கூடிய இரவல்கள் கார் வீடியோ கமெறா கிறடிட்காட் போன்றவைதான் இரவல் வாங்கும் பொருட்கள்.

மருந்துகள் பாவிக்கும்பொழுது பக்கவிளைவுகள் போல் மேற்படி இரவல் பொருட்களால் வரும் பக்கவிழைவுகள் நட்பு... உறவு முறிவு...

அடிபிடி சண்டை கொலை வரை போய் முடிகிறது..





அதற்கும் மேலாக.. இன்று.. செல்போன் ஐ பொட் யு எஸ் பி வீட்டுக்கு செய்திகள் அனுப்ப இரவல் ஈமெயில் அட்றஸ் போன்றவற்றால் பலர் சட்டப் பிரச்சினையில் மாட்டிக்கொள்கிறார்கள்.

கடந்தவாரம் நியூ யோர்க்கில் இந்தியத் தூதுவரகத்தைச் சேர்ந்தவரின் மகளின் செல்போன் மூலம் வேறொருவர் ஆசிரியைக்கு ரெக்ஸ் மெசேஜ் அனுப்பியதால் மாணவி பாடசாலையால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது மட்டுமல்லாமல் பொலீசார் அவரைக் கைது செய்து, ஒருநாள்முழுவதும் பொலிஸ்நிலையத்தில் தடுத்துவைத்து விசாரித்தனர்.





இலங்கையில் பலபேர் அநியாயமாக கொல்லப்பட்டதைவிட சகல மீடியாக்களும் இச்செய்தியை மாறிமாறி முக்கியத்துவம் கொடுத்தன.




ஆனால் அவரது நண்பர்தான் இவரது ஈமெயிலைப் பாவித்தது அப்படி இப்படியென கதைகள் பற்பலவிதம்...

இன்று இன்ரநெற் ஈமெயிலால் நாட்டில் நடக்கு நன்மை தீமைபற்றி பல கருத்தரங்குகள் கலந்துரையாடல்களில் கலந்துகொள்வது குறைவு ஆனால் பிரச்சினைகள் வந்தபின் அதற்குச்செலவிடும் பணமும் நேரமும் மனஉளைச்சலும் அதிகம்.







